

அவன் ஆடைகள் எப்பொழுதையும்விட
அதிக வெண்மையாகக் காண்கின்றன
அது ஸன்லைட்டினால்
தான்!
SUNLIGHT SOAP
ஸன்லைட்
சோப்
அடித்துத் துவைக்காமலே துணிகளை
வெண்மையாகச் சலவை செய்கிறது


ராதா தன் தோழி விமலாவை டெலிபோனில் அழைத்தாள்
இருவரும் ஒன்று சேர்ந்து கல்லூரியில் படித்தவர்கள். விமலா தன் தோழியை நெடுநாட்களாகச் சந்திக்கவில்லை. ஏதோ கவலைப்படுபவள் போல் பேசிய ராதாவைக் கண்டு வரவேண்டுமென்று எண்ணம் கொண்டாள்.
கண்ணீருடன் தன் கணவனின் அன்பை இழந்துவிட்டேன் என்று ராதா முறையிட்டாள். "அட அசடே இது உன் குற்றமல்லவா. வசீகரமாய் புன்சிரிப்புக்கிடமான உன் பற்களை நீ சரியாகக் கவனிக்கவில்லை என்று நான் இங்கு கால் வைத்தவுடனேயே கண்டு கொண்டேன். நாளை முதல் "கோலினாஸ்" பற்பசையை உபயோகித்து முத்துப்போன்ற பற்களிலும் ஓர் முல்லைச் சிரிப்பும் பூத்தால் உன் கணவனின் அன்பைப் பெறுவது நிச்சயம்.
KOLYNOS
KOLYNOS DENTAL CREAM
K1.J. TAM.
விநியோகஸ்தர்கள்:- ஜியாப்ரே மேனர்ஸ் அண்டு கம்பெனி. பம்பாய்-கல்கத்தா-மதுரை-லாகூர்.

No. 6

ஸ்ரீ

யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிமிடெட்

2, ராயல் எக்ஸ்சேஞ்ஜ் ப்ளேஸ், கல்கத்தா

•

செலுத்தப்பட்ட மூலதனம்

ரூ. 2 கோடிகள்

ரிஸர்வ் நிதி

ரூ. 40 லக்ஷங்கள்

•

G. D. பிர்லா
சேர்மன்

•

B. T. தாகூர்
ஜெனரல் மானேஜர்

•

இந்தியா, பர்மாவில் எல்லா முக்கிய நகரங்கள் டவுன்களில் பிராஞ்சுகளும் உலகம் முழுவதும் ஏஜென்ஸி ஏற்பாடுகளும் உள்ளன.


நீங்கள் தொடும்
ஒவ்வொரு குழாயின் மேலிருக்கும்
அழுக்கினாலும் கிருமிகளாலும்
அபாயம் ஏற்படும் !
லைப்பாய் சோப்பினால் அடிக்கடி
சுத்தம் செய்துகொள்ளுங்கள்!
லைப்பாய் சோப்
அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து
உங்களைக் காப்பாற்றுகிறது
LIFEBUOY
SOAP
LIFEBUOY SOAP
L. 100-111 TM


ஜுபிடர்
அபிமன்யு
விரைவில் வருகிறது!
U.R.ஜீவரத்னம்
S.M.குமரேசன்
டைரக்ஷன்:
M.சோமசுந்தரம், A.காசிலிங்கம்
கதை, வசனம்
A.S.A.சாமி

HINTS FOR HEALTH




Sun's light and heat -
aids to health

இயற்கையாக வெ இறந்த உடலுக்கு ஆரோக்யத்தைத் தருவதில் நிகரற்ற சூரிய ஒளி இளமையின் முறுக்குக்கும் சகல வயதினர் தேகத்தின் பொதுநலனுக்கும் இன்றியமையாதது. சருமத்திற்கு மெருகுடன் ஆரோக்யத்தையும் வனிக்கும் தசைக்கு ஹிதத்தையும் அளிக்கிறது. சரும ஆரோக்யத்திற்கு மலபார் லிம்டா சோப் மிகவும் சிறந்தது.

இதன் நுரை சருமத்திற்குள் வெகு தூரம் சென்று அசுத்தங்களைப் போக்கி, சருமத்தை மிருதுவாக்கி, உங்களுக்கு அலாதி மேனி அழகு அளிக்கிறது. உங்களுக்கு ஏற்ற சோப் அதுவே.





மலபார்
லிம்டா சோப்

வெஜிடபில் சோப் ஒர்க்ஸ்

கள்ளிக்கோட்டை

புரொப்ரைடர்ஸ்: டீ.L.N.P.& Co., LTD. கள்ளிக்கோட்டை. பம்பாய் 2. சென்னை 1.

கல்கி

பொருளடக்கம்

மலர் 7 இதழ் 38 | ஏப்ரல் 18 | சர்வதாரி சித்திரை 6

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனை.



மாமல்லபுரத்துக் கடற்கரையில் பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்னால் "கல்கி" ஆசிரியர்,


"விதியின் எழுத்தைக் கிழித்தார்க்க—முன்பு
விட்டகுறை வந்து தொட்டார்க்க"

என்ற கவிதை வரிகளைக் கேட்டார். உடனே அந்தக் கடற்கரை நெடுகிலும் பற்பல தோற்றங்கள் உண்டாயின. பற்பல கதாநாயகர்களும் கதாநாயகிகளும் வரிசை வரிசையாகப் பவனி வந்தார்கள். இந்தக் காட்சிகளின் காரணமாகப் "பார்த்திபன் கனவு", "சிவகாமியின் சபதம்" என்னும் சரித்திரக் கதைகள் எழுதப்பட்டன. இந்த நூல்களில் சரித்திரம் எவ்வளவு, கதை எவ்வளவு என்ற விவரங்களைச் "சிவகாமியின் சபத"த்திற்கு ஆசிரியர் எழுதியுள்ள முன்னுரையில் விரிவாகக் கூறியுள்ளார்.

"சிவகாமியின் சபதம்" என்னும் புத்தகம் ஏறக்குறைய ஒரு வருஷத்திற்கு முன்னால் விளம்பரம் செய்யப்பட்டது. ஆனால் சென்ற வாரத்தில், சர்வதாரி வருஷப் பிறப்பு அன்றுதான், புத்தகம் வெளியாயிற்று. இவ்வளவு தாமதம் ஆனதின் காரணம், புத்தகத்தை ஒப்பற்ற கலை அழகு வாய்ந்த பிரகாரமாகச் செய்ய வேண்டும் என்னும் விருப்பம் தான். புத்தகத்தை வாங்கிப் பிரித்துப் பார்ப்பவர்கள் மேற்படி விருப்பம் எந்த வரையில் நிறைவேறியிருக்கிறதென்பதைக் காண்பார்கள். தமிழுக்கும் தமிழ் நாட்டுக்கும் தொண்டு செய்யும் முறையிலேயே "சிவகாமியின் சபதம்" புத்தக வடிவத்தில் வெளியிடப் பட்டிருக்கிறது. ஆங்கிலம் முதலிய பிற பாஷைகளில் 'அழகின் எல்லை'யாக வெளியாகும் புத்தகங்களைப் பார்த்தவர்கள், "தமிழில் இப்படியெல்லாம் சித்திர விசித்திரமான புத்தகங்கள் எப்போது வெளியாகுமோ?" என்று பெருமூச்சு விட்டிருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் "சிவகாமியின் சபதம்" ஒப்பற்ற மகிழ்ச்சியை அளிக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பலகைப் பதிப்பு ரூ. 15—0—0: மலிவுப் பதிப்பு ரூ. 9—0—0

(தபால் செலவு ரூ. 1—0—0)


10-4-48ல் நடைபெற்ற
வ.ரா. மணிவிழா
பூர்வாங்கக்கூட்டம்

கல்கி

மலர் 7 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார். | இதழ் 38

என்ன சேதி?

சர்வதாரியே! வருக!

புதிய சர்வதாரி வருஷம் தமிழ் அன்பர்களுக்கும் "கல்கி" நேயர்களுக்கும் சர்வ மங்களங்களையும் அளிப்பதாக. சகல நலங்களையும் பல லாபங்களையும் அளிப்பதாக. பாரத மக்களுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் அளிப்பதாக. பண்ணுடைய பாடல்களையும் சுருதியுடைய சங்கீதத்தையும் அளிப்பதாக. தொழிலாளர்க்குத் தகுந்த ஊதியத்தை அளிப்பதாக. உலகெங்குமுள்ள அரசியல் வாதிகளுக்கு நல்லறிவை அளிப்பதாக. நமது இந்திய நாட்டின் தலைவர்களுக்குத் தீர்க்காயுளையும் திட சித்தத்தையும் அளிப்பதாக.

சென்ற சர்வஜித்து வருஷம் ஆரம்பத்திலெல்லாம் ஏதேதோ நன்மைகளை நமக்கு அளித்துவிட்டுக் கடைசியாகப் பெரிய பாறாங்கல்லைத் தூக்கி நம் தலையிலே போட்டது! சர்வதாரி நமக்கு அந்தகைய பெரிய லாபங்களையும் அளிக்க வேண்டாம்; மகா கஷ்டத்தையும் உண்டு பண்ண வேண்டாம். செய்கிற நன்மையை நிரந்தரமாகச் செய்யட்டும். கொடுக்கிற லாபத்தைக் குற்றமின்றிக் கொடுக்கட்டும்.

புது வருஷத்தில் வயல்கள் நன்கு விளையட்டும்; ரேஷன் அடியோடு ஒழியட்டும்; பள்ளிக்கூடங்கள் பெருகட்டும்; பரீட்சைகள் மறையட்டும்; கள்ளு அடியோடு தொலையட்டும்; காப்பிக் கொட்டை மலியட்டும்; கருப்பு மார்க்கட் மறையட்டும்; பசுக்கள் பால் சுறக்கட்டும்; வானமழை பொழியட்டும்; பாரெல்லாம் சுபிட்சம் நிறையட்டும்.

பழைய கதை முடிந்தது


இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன் பெரும்பான்மையான சுதேச சமஸ்தானங்களும் பிற்போக்கான முறைகளை அனுஷ்டிப்பதில் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டு வந்தன! மன்னர்கள் அக்ஞாத வாசம் அதாவது அன்னிய நாடுகளில் வாசம் செய்வது சகஜமாக இருந்தது. கல்வி அபிவிருத்தி குதிரைக் கொம்பாக இருந்தது. குதிரை லாயங்களின் அபிவிருத்திக்காகக் கோடிக் கணக்கில் செலவழிக்கப்பட்டது. ஜன நாயகம் என்ற சரக்குக்குச் சமஸ்தானங்களில் இருந்த பஞ்சம் சொல்லிமுடியாது!


எனினும் இந்தியா சுதந்திரம் பெற்ற பின் சமஸ்தானங்கள் தங்களுடைய போக்கை முற்றிலும் மாற்றிக்கொண்டது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். இப்போது சமஸ்தானங்கள் முன்னேற்றகரமான காரியங்களைச் செய்வதில் ஒன்றுக்கொன்று போட்டியிட்டு வருகின்றன! பல மன்னர்களும் தங்களுடைய உரிமைகளை விட்டுக் கொடுத்து, தங்களுடைய ராஜ்யங்களையும் இந்தியாவுடன் ஐக்கியப் படுத்துவதில் போட்டி போடுகிறார்கள். பல சமஸ்தானங்களிலும் பொறுப்பாட்சி அமுலுக்கு வந்து கொண்டிருக்கிறது.


சாதாரண சமஸ்தானங்களே அவ்விதம் முன்னேறி வருகையில், பல்வேறு துறைகளிலும் ஏற்கெனவே அபிவிருத்தி அடைந்துள்ள சமஸ்தானங்களைப் பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. உதாரணமாக, மைசூரில் அரசியல் நிர்ணய சபை ஆரம்பமாகி விட்டது. அந்தச் சபையிலுள்ள சகலரும் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும். சபை அங்கத்தினர்கள் யாவரும் மிக அறிவாளிகள், தியாகிகள், ஜனங்களின் க்ஷேம லாபங்களில் கண்ணும் கருத்தும் உள்ளவர்கள். எனவே, அவர்கள் தயாரிக்கப் போகும் அரசியல் அவர்களின் உயர்வுக்கும், மைசூரின் பெருமைக்கும் ஏற்றதாக இருக்குமென நம்பலாம். இந்திய ஜனங்களின் சுபிட்சம், மானிட சகோதரத்துவம், உலக சமாதானம் இவற்றை அடிப்படையாகக் கொண்டு மைசூர் தனது கடமையை நிறைவேற்றும் என்று மைசூர் மகாராஜா அச்சபையின் ஆரம்ப விழாவுக்கு அனுப்பியுள்ள செய்தியில் குறிப்பிட்டிருப்பது, அன்னாரின் சீர்மைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

நிகழ்ச்சி சித்திரம்

- சாஸ்திரி







கொக்கென்று நினைத்தாயோ!

சித்தருக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்தது!

முழித்துப் பார்த்தார்!

“கொக்கென்று நினைத்தாயோ, கொங்கணவா!” என்று சொல்லி நகைத்தாள் தமிழ்த் தாய்!

சித்தரின் சினம் கொக்கை எரித்துச் சாம்பலாக்கியது என்னவோ உண்மை தான். எனினும் அவருடைய கோபம், தமிழ் மறை முனிவரின் தர்ம பத்தினியை என்ன செய்ய முடியும்?

தமது வல்லமை. மகத்துவம் பொருந்திய இடங்களில் செல்லாது என்பதை உணர்ந்த சித்தர் வெட்கிப் போனார்.

* * *

ஹைதராபாத்தில் இன்று சர்வ வல்லமையுடன் விளங்கும் காஸிம் ராஸ்வி கிராமங்களை எரித்துச் சாம்பலாக்கி வருவது என்னவோ உண்மை தான். நிரபராதிகளும் நிராயுதபாணிகளுமான ஜனங்கள் அடங்கிய ஹைதராபாத் எல்லைக் கிராமங்களில் ராஸ்வியும் அவரது சீடர்களான ரஸாக்கியர்களும் செய்து வரும் அட்டூழியங்கள் கல்நெஞ்சரும் கரைந்து உருகச் செய்வதாக இருக்கின்றன.

அந்த ‘வீரர்கள்’ கிராமங்களை எரிக்கிறார்கள். ஜனங்களைப் படுகொலை செய்கிறார்கள். ஆயுதங்களுடன் அணிவகுத்துச் செல்லுகிறார்கள். அதனால் திகிலடைந்த பதினாயிரக் கணக்கான ஹிந்துக்கள் ஹைதராபாத் சமஸ்தானத்தை விட்டு வெளியேறி வருகின்றனர்.

பாதுகாப்பில்லாத கிராமங்கள்மீது திடீரென்று பாய்வதோ, அந்தக் கிராமங்களைக் கொளுத்துவதோ, ஆயுதம் தாங்கிய எந்தக் கொள்ளைக் கூட்டமும் எளிதில் செய்து முடிக்கக் கூடிய காரியமாகும். ஆனால், அவ்விதமே ஹைதராபாத் முழுவதையும் இந்தியா முழுவதையும், கொளுத்தி விடுவோம் என்று ராஸ்வி ஜம்பம் அடிப்பது, கர்வம் பிடித்த சித்தரின் கதையையே ஞாபக மூட்டுகிறது.

ஹைதராபாத்துக்கு நேரில் சென்று நிலைமையை அறிந்துகொண்ட “நியூ ஸ்டேட்ஸ்மன் அண்ட் நேஷன்” என்ற பிரபல பிரிட்டிஷ் பத்திரிகையின் ஆசிரியர், ராஸ்வியை ஒரு இமிடேஷன் ஹிட்லர் என்கிறார்.

எனினும் அசல் ஹிட்லராலேயே செய்ய முடியாத ஒரு காரியத்தை இமிடேஷன் ஹிட்லரான ராஸ்வி செய்ய முயற்சிப்பது எக்காலத்திலும் வெற்றிபெறாது.

அசல் ஹிட்லரால் கூட பல வருஷங்கள் வரை பாதக ஆட்சி புரிந்தும் பத்து லட்சம் யூதர்களைக் கொல்ல முடியவில்லை. ஆனால் ஹைதராபாத்திலுள்ள முஸ்லிம் எதேச்சாதிகார ஆட்சி முறைக்கு அணுவளவு பாதகம் நேர்ந்தாலும், அங்குள்ள ஒன்றரைக் கோடி ஹிந்துக்களையும் துவம்சம் செய்து விடுவோம் என்று இமிடேஷன் ஹிட்லர் ஒளிவு மறைவு எதுவுமின்றி ஆர்ப்பாட்டம் செய்கிறார்!

ராஸ்வியின் பேச்சுகள் எல்லாம் கத்தி வாதத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. தர்ம நெறிக்கு நேர் முரணான, காட்டு மிராண்டித்தனமான கத்தி வாதம் நிரந்தரமான வெற்றி பெற்றதாக இவ்வுலக சரித்திரத்திலே காண முடியவில்லை. மேற்படி கத்தி வாதிகளின் முடிவு என்ன என்பதைக் காட்டுவதற்கும் சரித்திரத்திலிருந்து எத்தனையோ உதாரணங்கள் கூற முடியும். ஏன், ராஸ்வி வானளாவப் புகழும் மொகலாய சாம்ராஜ்யத்தின் சரித்திரத்தையே பார்ப்போம்.

அன்பை ஆயுதமாகக் கொண்ட அக்பரின் ஆட்சி காலத்தில் ஆக்கம் பெற்ற மொகலாய சாம்ராஜ்யம், கத்தி ஆயுதத்தில் பூரண நம்பிக்கை கொண்ட ஔரங்கசீப்பின் காலத்தில் தான் தகர்ந்து வீழ்ச்சியடைந்தது.

* * *

நிஜாம் மன்னரின் ஆலோசகர்கள் இதுவரை சற்றேறக்குறைய நூறு தடவை டில்லிக்குப் போய் வந்திருக்கிறார்கள். சமாதானப் பேச்சு வார்த்தைகளுக்கும் குறைவில்லை. ஆனால், ஒவ்வொரு தடவையும் அவர்கள் டில்லிக்குச் சென்று வந்த பின் நைஜாம் சமஸ்தானத்தில் அடக்கு முறைகளும் ராஸ்வியின் சீடர்களுடைய அட்டூழியங்களும் அதிகமாகி வருகின்றனவேயன்றி, சமாதானம் ஏற்படுவதற்கான அறிகுறி கூட தோன்றவில்லை.

ஹைதராபாத்திலும் அடுத்துள்ள மாகாணங்களிலும் அமைதியைக்

குவித்து வரும் ரஸாக்கியர் கூட்டத்துக்கு நைஜாம் சர்க்கார் உடந்தையாக இருந்து வருகிறார்களா? அல்லது அக்கூட்டத்தை அடக்க மேற்படி சர்க்கார் சக்தியற்றவர்களாக இருக்கிறார்களா?

நிரபராதிகளான ஜனங்களைப் படுகொலை செய்தும், கிராமங்களைக் கொளுத்தியும் வரும் கூட்டத்துக்கு நைஜாம் சர்க்கார் உடந்தையாக இருந்தால் அதைக் காட்டிலும் மன்னிக்க முடியாத குற்றம் வேறெதுவும் இருக்க முடியாது. கொடிய கொள்ளைக் கூட்டத்தை அடக்கச் சக்தியின்றி அதற்கு ஒரு சர்க்கார் அடிபணிந்து கிடப்பார்களாயின், அத்தகைய சர்க்கார் இருப்பதை விட மறைந்து விடுவதே மேலாகும்.

* * *

சமீபத்தில் காஸிம் ராஸ்வியின் பிரசங்கம் ஒன்று டில்லியிலுள்ள பிரபல "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகையில் பிரசுரமாகியிருக்கிறது.

அந்தப் பிரசங்கத்தின் முக்கிய பாகம் இதுதான்.

"......இஸ்லாமிய மகோன்னத பீடத்தை அமைப்பதுதான் நமது லட்சியம். அந்த லட்சியம் நிறைவேறும் வரையில் நாம் உருவிய கத்தியை உறையில் போடக் கூடாது. முஸ்லிம்களாகிய நாம் போர்க் கோலத்தைத் தவிர வேறெதையும் அறியோம். ஆகையால், முன்னேறிச் செல்லுங்கள். ('டில்லி சலோ' என்ற கோஷங்கள்) பகைவர்களை விடாதீர்கள். கண்டதுண்டமாக வெட்டி வீழ்த்துங்கள். ஹிந்துக்களுக்கு அறிவு வந்துவிட்டது. ஹிந்துக்கள் கல்லையும் குரங்கையும் கும்பிடும் காட்டுமிராண்டிகள். அவர்களிடையே இருக்கும் நாலு கோடி முஸ்லிம்களும் நமக்கு உதவி புரியும் ஐந்தாம் படைப் பேர்வழிகளாதலால், நீங்கள் அஞ்ச வேண்டாம்......"

பொறுப்பற்ற, தேசம் முழுதும் மகத்தான கஷ்ட நஷ்டங்களை உண்டு பண்ணக்கூடிய, அணைந்து வரும் துவேஷக் கனலை மீண்டும் தூண்டக் கூடிய மேற்படி பிரசங்கத்தைப் பார்லிமெண்டில் ஜவாஹர்லால்ஜி கடுமையாகக் கண்டித்திருக்கிறார். இந்தியாவிலுள்ள பிரபல முஸ்லிம்களும் அதை ஆணித்தரமாகக் கண்டித்திருக்கின்றனர்.

அதைக் குறித்துப் பிரமாதமான கண்டனம் எழுந்தபின், ராஸ்வி தாம் அவ்வாறு பிரசங்கம் எதுவும் செய்யவே இல்லை என்று மறுக்கிறார்.

ராஸ்வி அவ்விதம் பேசியது உண்மையாயினும், அல்லவாயினும் அதனால் புதிய நிலைமை எதுவும் ஏற்பட்டுவிடப் போவதில்லை.

ஏனெனில் அவர் அதே ஆவேசத்துடன் பல தடவைகளிலும் பேசியிருக்கிறார்.

ஹைதராபாத்தையே சாம்பலாக்கி விடுவோம் என்று அவர் கூறியது உண்மையல்லவா?

ராஸ்வி பேசும் கூட்டத்தில் நைஜாம் சர்க்கார் மந்திரிகளும் அவரை ஆதரித்துப் பேச முற்பட்டிருப்பதால், ரஸாக்கியர் கூட்டத்துக்கும் நைஜாம் சர்க்காருக்கும் சம்பந்தம் இல்லையென்று அவர்கள் தட்டிக் கழிக்க முடியாது.

* * *

நாம் இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ சேராமல் நடுநிலைமை வகிக்கப் போவதாயும், சகல பிரஜைகளுக்கும் நிராக முறையில் நீதி வழங்கப் போவதாயும் நைஜாம் மன்னர் ஜம்பமாகப் பிரகடனம் செய்து சில மாதங்களே ஆகின்றன. ஆனால் அங்கு ஹிந்துக்களின் உயிருக்கோ உடைமைக்கோ பாதுகாப்பு இல்லை என்பதைச் சென்ற சில மாதங்களாக நிகழ்ந்துள்ள சம்பவங்கள் நிரூபித்து விட்டன.

இந்தியாவுக்கு விரோதமாக பாகிஸ்தானுக்குக் கோடிக் கணக்கில் கடன் கொடுத்து உதவி புரிய நைஜாம் சர்க்கார் தயங்கவில்லை. இந்திய சர்க்காருடன் செய்து கொண்ட ஒப்பந்த ஷரத்துகளையும் நைஜாம் சர்க்கார் காற்று வாக்கில் விட்டுவிட்டனர். இவையெல்லாம் போதாதென்று இப்போது அவர்கள் இந்திய சர்க்காருக்கு விரோதமாகப் போர்க் கோலம் கொள்ளவும் துணிந்திருப்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

சர்வ வல்லமை பொருந்திய பிரிட்டிஷ் வல்லரசையே அஞ்சாமல் எதிர்த்துப் போராடி வெற்றிபெற்ற பாரத நாடு, பிரிட்டிஷாரின் தயவால் உருவான ஒரு குட்டி சமஸ்தானத்தைக் கண்டு பதறி விடாது.

ஞானச் சித்தரின் கோபத்தைக் கண்டு அன்று தமிழ்த் தாய் சிரித்தாள்; வகுப்புப் பித்தரின் போர்க் கோலத்தைக் கண்டு இன்று பாரத அன்னை சிரிக்கிறாள்!

தமிழ் நாட்டில் ஜயப்பிரகாசர்




சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் ஸ்ரீ ஜயப்பிரகாச் நாராயண் சென்ற இரண்டுவாரத்தில் தமிழ் நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்தார். சென்றவிட மெல்லாம் அவர் பொது மக்களின் குதூகலமான வரவேற்புக்குப் பாத்திரமானார்.

●

கீழே இடதுபுறத்தில் மலர்ந்த முகத்துடன் நிற்பவர் ஸ்ரீ ஜயப்பிரகாசின் வாழ்க்கைத் துணைவியான ஸ்ரீமதி பிரபாவதிதேவி.





மாந்தருக்குள் ஒரு தெய்வம்

ரா.கி.

23. நேட்டால் இந்தியக் காங்கிரஸ்

டர்பன் ஹைக் கோர்ட்டில் காந்திஜி அட்டர்னி தொழில் நடத்தத் தொடங்கினார். ஆனால் இது அவருடைய வாழ்க்கையில் இரண்டாவது வேலையாகவே இருந்தது. முதற் கடமையாக அவர் கருதிச்செய்தது தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் க்ஷேமத்தைப் பற்றிய பொது ஊழியந்தான். இந்த ஊழியம் சரியாக நடைபெறுவதற்கு ஒரு பொது ஸ்தாபனம் அமைக்க வேண்டும் என்று காந்திஜி கருதினார். நண்பர்களுடன் கலந்து ஆலோசனை செய்தார். எல்லாரும் அத்தகைய ஸ்தாபனம் அவசியந்தான் என்று ஒப்புக் கொண்டார்கள்.

ஸ்தாபனத்துக்கு என்ன பெயர் இடுவது என்ற கேள்வி எழுந்தது. இந்தியாவில் 1885-ம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டுப் பிரபலம் அடைந்திருந்தது. தேசிய உணர்ச்சி பெற்ற இந்தியர்கள் எல்லாரும் காங்கிரஸை இந்தியாவின் உயிர் என்றே கருதினார்கள். காந்திஜியும் அதே கருத்துக் கொண்டிருந்தார். ஆகையால் நேட்டாலில் தொடங்க உத்தேசித்த ஸ்தாபனத்துக்கு "நேட்டால் இந்தியக் காங்கிரஸ்" என்று பெயரிடலாம் என்று காந்திஜி யோசனை கூறினார். அதையே மற்றவர்களும் ஒப்புக் கொண்டதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை யல்லவா?

1894-ம் வருஷம் மே மீ 22உ டர்பனில் தாதா அப்துல்லாவின் இல்லத்தில் நேட்டாலின் பல பகுதிகளிலிருந்தும் இந்தியர்கள் வந்து கூடி யிருந்தார்கள். அவர்களுடைய ஏகமனதான ஆதரவுடன் உற்சாக ஆரவாரங்களுக் கிடையே "நேட்டால் இந்தியக் காங்கிரஸ்" ஸ்தாபிக்கப்பட்டது. காங்கிரஸில் அங்கத்தினராவதற்கு விதிகள் மிக எளிதாக அமைக்கப்பட்டன. ஆனால் சந்தா மட்டும் அதிகமாக ஏற்படுத்தப் பட்டது. பெரிய வேலைகள் ஆகவேண்டியிருந்தன வல்லவா? மாதத்திற்குக் குறைந்த பட்சம் ஐந்து ஷில்லிங் சந்தா என்றும், சக்தி உள்ளவர்கள் இஷ்டப்பட்டு அதிகம் செலுத்தலாம் என்றும் ஏற்படுத்தினார்கள். எல்லாருக்கும் முதலில் தாதா அப்துல்லா மாதம் இரண்டு பவுன் சந்தா கொடுப்பதாகக் கையொப்ப மிட்டார். காந்திஜி தம்முடைய சக்திக்கு மேல் என்று தெரிந்தே மாதம் ஒரு பவுன் சந்தாவுக்குக் கையொப்பம் செய்தார். மற்றும் சிலர் மாதம் ஒரு பவுனும் பலர் மாதம் பத்து ஷில்லிங்கும் சந்தா தருவதற்கு இசைந்தார்கள். மொத்தமாக நன்கொடைகள் அளிக்கவும் சிலர் முன்வந்தார்கள்.

ஆரம்ப உற்சாகத்தில் பலர் சந்தாவுக்கும் நன்கொடைக்கும் கையொப்பம் செய்து விடுவார்கள். ஆனால் கையொப்பம் செய்தபடி சந்தாவும் நன்கொடையும் ஒழுங்காகச் செலுத்துவோர் எங்கேயும் கொஞ்சம் அருமைதான். நேட்டாலிலும் அப்படித்தானிருந்தது. நேட்டால் இந்தியக் காங்கிரஸின் காரியதரிசி காந்திஜி ஆகையால், சந்தா வசூலிக்கும் பொறுப்பு அவருக்கு ஏற்பட்டது. மாதா மாதம் சந்தா வசூலிப்பது பெருந் தொல்லையா யிருந்தது. ஒரு குமாஸ்தாவுக்கு அந்த வேலையே சரியாய்ப் போயிற்று. இதை உத்தேசித்து மாதச் சந்தாவுக்குப் பதிலாக வருஷச் சந்தா ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. வருஷத்துக்குக் குறைந்த பட்சச் சந்தா மூன்று பவுன் என்று ஏற்படுத்தினார்கள். இதன் பிறகு சந்தா வசூல் கொஞ்சம் சுலபமா யிற்று.

பொதுக் காரியங்களுக்குப் பணம் சேகரிப்பதில் காந்திஜியைப் போல் திறமைசாலி வேறு யாரும் இல்லை என்பதை இந்தியாவில் நாம் கண்டிருக்கிறோம். எந்தக் காரியத்துக்கானாலும் ஒரு குறிப்பிட்ட தொகை வேண்டும் என்று காந்திஜி நிர்மாணித்தால் அதைச் சேகரித்தே தீருவார். எப்பேர்ப்பட்ட கல் நெஞ்சர்களின் மனதையும் கரைத்துப் பணம் வாங்கி விடுவார். காந்திஜியின் இந்தத் திறமை தென்னாப்பிரிக்காவிலேயே வெளியாயிற்று.


காந்திஜியும் நண்பர்களும் அடிக்கடி காங்கிரஸ் அங்கத்தினர் சேர்ப்பதற்காக நேட்டாலில் தூர தூரத்து ஊர்களுக்கும் போவதுண்டு. ஆங்காங்கிருந்த இந்திய வியாபாரிகள் உற்சாகமாக வரவேற்று விருந்தளித்து அங்கத்தினராகவும் சேருவார்கள். பல இடங்களிலிருந்து காந்திஜிக்கு அழைப்பும் வந்து கொண்டிருந்தது.

இத்தகைய சுற்றுப் பிரயாணத்தின் போது ஒருமுறை ஒரு ஊரில் தர்ம சங்கடமான நிலைமை ஏற்பட்டது. அந்த ஊரில் யாருடைய விருந்தாளிகளாகக் காந்திஜியும் நண்பர்களும் தங்கினார்களோ அந்த மனிதர் நல்ல பணக்காரர். அவரிடமிருந்து வருஷத்துக்கு ஆறு பவுன் சந்தா எதிர்பார்த்தார்கள். அவரோ மூன்று பவுன்தான் கொடுப்பேன் என்று பிடிவாதம் பிடித்தார். கொடாக் கண்டர்—விடாக் கண்டர் கதை நடந்தது. அவரிடம் மூன்று பவுன் வாங்கி விட்டால் மற்றவர்கள் யாரும் அதற்குமேல் கொடுக்க மாட்டார்கள். தேவையாயிருந்த உத்தேசத் தொகை சேராது. எனவே, இரவு வெகு நேரம் வரையில் விவாதம் நீடித்தது. ஒருவரும் சாப்பிட்ட பாடில்லை.

எல்லாருக்கும் பசி அதிகமாயிருந்தாலும், ஆறு பவுன் வசூலியாமல் சாப்பிடுவதில்லையென்று உறுதியாயிருந்தார்கள். அந்த வியாபாரியும் மசிகிற வழியாகக் காணவில்லை. அதே ஊரைச் சேர்ந்த மற்ற வியாபாரிகள் மன்றாடியும் பயனில்லை. இரவில் பெரும் பகுதி இவ்விதம் கழிந்த பிறகு, நாலாவது ஜாமத்தில் அந்தக் கனவான் வழிக்கு வந்து ஆறு பவுன் தர ஒப்புக் கொண்டார். பிறகு விருந்தும் நடந்தது. இந்தச் செய்தி நாலாபுறமும் பரவியபடியால் சந்தா வசூல் அதற்குப் பிறகு வெகு சுலபமாயிற்று.

காந்திஜி பொதுக் காரியங்களுக்குப் பணம் வசூலிப்பதில் எவ்வளவு திறமையுள்ளவரோ அவ்வளவு அந்தப் பணத்தைச் செலவு செய்வதிலும் செலவுக்குக் கணக்கு வைப்பதிலும் மிகவும் கண்டிப்பானவர். அவருடைய இந்த இயல்பும் தென்னாப்பிரிக்காவிலேயே வெளியாயிற்று. தம்பி! பொதுப் பண நிர்வாகம் சம்பந்தமாகக் காந்திஜி எழுதியிருப்பதைக் கேள் :—

" பொது வேலைகளில் சில்லறைச் செலவுகளே பெருந் தொகைகளாகிவிடுமென்பதை நான் அறிந்திருந்தேன். எனவே ஆரம்பத்தில் ரசீது புத்தகங்கள் கூட அச்சடிக்க வேண்டாமெனத் தீர்மானித்தேன். எனது காரியாலயத்திலிருந்த சைக்ளோஸ்டைல் என்னும் பிரதிகள் எடுக்கும் கருவியில் ரசீதுகளும் அறிக்கைகளும் தயாரித்துக் கொண்டேன். காங்கிரஸுக்கு நிதியும் அங்கத்தினரும் நிரம்பச் சேர்ந்து வேலையும் அதிகமான பின்னரே ரசீது புத்தகம், அறிக்கை முதலியவை அச்சடிக்கத் தொடங்கினேன். எல்லாப் பொது ஸ்தாபனங்களுக்கும் இத்தகைய சிக்கனம் அத்யாவசியமானது. ஆனால் பெரும்பாலும் இந்த



விஷயத்தில் கவனஞ் செலுத்தப் படுவதில்லையென்பதை நான் அறிந்திருக்கிறேன்.

பொது ஜனங்கள் தாங்கள் கொடுத்த பணத்துக்கு ரசீது பெறுவதில் கவலை காட்டுவதில்லை. ஆனால் நாங்கள் ரசீது கொடுப்பதை எப்போதும் வற்புறுத்திக் கொண்டு வந்தோம். ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்கு வைத்தோம். நேட்டால் இந்தியக் காங்கிரஸின் பழைய தஸ்தவேஜுகளைப் புரட்டினால் இன்றும் 1894-ம் ஆண்டுக் கணக்குப் புத்தகத்தை அப்படியே காணலா மென்று நான் துணிந்து கூற முடியும். எந்தப் பொது ஸ்தாபனத்துக்கும் வரவு செலவுக் கணக்கு ஒழுங்காக வைத்திருத்தல் இன்றியமையாதது. இல்லாவிட்டால் அந்தப் பொது ஸ்தாபனம் விரைவில் கெட்ட பெயர் எடுக்கும் என்பதில் ஐயமில்லை. ஒழுங்குபட்ட கணக்கு வையாமல் உண்மையைப் பாதுகாத்தல் இயலாத காரியம் என்பது என் அநுபவம்.''

24. பாலசுந்தரம்

ஸ்ரீ மோகன்தாஸ் காந்தி நேட்டாலில் நிலையாகத் தங்குவது என்ற உத்தேசத்துடன் அட்டர்னி தொழில் செய்ய ஆரம்பித்து நாலு மாதம் ஆயிற்று. இந்த நாலு மாதத்தில் நேட்டாலில் வசித்த இந்திய வியாபாரிகள், இந்தியக் குமாஸ்தாக்கள் இவர்களுடைய பழக்கம் காந்திஜிக்கு ஏற்பட்டிருந்தது. நேட்டால் இந்தியக் காங்கிரஸில் அங்கத்தினராகச் சேர்ந்தவர்கள் பெரும்பாலும் வியாபாரிகள், குமாஸ்தாக்கள் ஆகியவர்கள்தான். தென்னாப்பிரிக்காவில் வசித்த இந்தியர்களில் மிகப் பெரும்பாலோரான ஒப்பந்தக் கூலிகளுடன் காந்திஜிக்கு இன்னும் பழக்கம் ஏற்படவில்லை. ஆனால் ஒப்பந்தக் கூலிகளின் கஷ்டங்களைப்பற்றி ஓரளவு கேள்விப்பட்டிருந்தார்.

இந்த நிலைமையில் ஒருநாள் காந்திஜியின் காரியாலயத்துக்கு ஓர் ஏழை இந்தியன் அலங்கோலமாக அழுதுகொண்டு வந்து சேர்ந்தான். அவன் இடுப்பில் கந்தைத் துணி உடுத்தி யிருந்தான்; கையிலே முண்டாசுத் துணி வைத்திருந்தான்; அவனுடைய முன்வாய்ப் பற்கள் இரண்டு உடைபட்டு வாயிலிருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது; நோவினாலும் பயத்தினாலும் அவனுடைய உடம்பு நடுங்கிற்று.

காந்திஜியின் காரியாலயத்தில் குமாஸ்தாவாக வேலை செய்தவர் ஒரு தமிழர். அந்தக் குமாஸ்தாவைக் கொண்டு அலங்கோலமாக வந்தவனிடம் விஷயம் என்னவென்று காந்திஜி விசாரிக்கச் செய்தார். பல் உடைபட்டு வந்தவன் ஒரு தமிழன்; ஒப்பந்தக் கூலி; அவன் பெயர் பாலசுந்தரம். டர்பனில் ஒரு பிரபல ஐரோப்பியரிடம் அவன் ஒப்பந்தக் கூலியாக வேலைக்கு வந்தவன். அந்த மூர்க்க ஐரோப்பிய எஜமான் ஏதோ காரணம்பற்றிக் கோபங் கொண்டு பாலசுந்தரத்தை அவ்விதமாக நையப் புடைத்து விட்டான். அவன் அடித்த அடியில் பாலசுந்தரத்தின் முன் வாய்ப் பற்கள் இரண்டு உடைந்து விழுந்து விட்டன.

"அதிகமாய்ப் பேசினால் பல்லை உடைத்து விடுவேன்!" என்று சிலர் கோபமாகப் பேசுவதை நீ கேட்டிருக்கலாம், தம்பி! பல்லை உடைப்பது என்பது இலேசான காரியமல்ல; மிகக் குரூரமாக அடித்தால் தான் பல்லை உடைக்க முடியும்.

பாலசுந்தரத்தை ஒப்பந்தக் கூலியாகப் பெற்றிருந்த மூர்க்க வெள்ளைக்காரன் அம்மாதிரி அவனைக் குரூரமாக அடித்திருந்தான்.

இந்தச் சமயத்தில், "ஒப்பந்தக் கூலி" என்றால் என்ன என்பதை உனக்குச் சொல்லி வைக்கிறேன். அதைச் சொல்லுவதில் எனக்குச் சந்தோஷம் ஒன்றுமில்லை; வருத்தமாகவும் அவமானமாகவும் இருக்கிறது. ஆனாலும் அதை நீ தெரிந்து கொள்ளாவிட்டால் மேலே வரும் காந்தி மகானுடைய வரலாற்றை உன்னால் நன்கு அறிந்துகொள்ள முடியாது.

இங்கிலாந்து, ஹாலந்து முதலிய தேசங்களிலிருந்து தென்னாப்பிரிக்கா சென்று குடியேறிய ஐரோப்பியர்கள் அந்த நாட்டில் உள்ள நீர்வளத்தைக் கண்டு அங்கே கரும்பு சாகுபடி நிறையச் செய்யலாம் என்று நிர்மாணித்தார்கள். கரும்பு சாகுபடி செய்வதற்கு ஆள் வசதி நிறைய வேண்டும். நேட்டாலின் பூர்வ குடிகளான ஸுலு சாதியார் காட்டுமிராண்டி ஜனங்கள்; அவர்களால் எந்த வேலையும் நிலைத்து நின்று செய்ய முடியாது.

விவசாய வேலை அவர்களுக்குத் தெரியாது; சொல்லிக் கொடுத்தாலும் அவர்கள் கற்றுக் கொள்ள மாட்டார்கள்.

ஹிந்து சாதியாருக்கு சேர்மானவர்கள் இந்தியா தேசத்து ஏழை மக்கள். விவசாய வேலையில் பற்று உள்ளவர்கள்; உடலை உழைத்துப் பாடுபடக் கூடியவர்கள்—இந்த விஷயம் உலகப் பிரசித்தமானது.

ஆகவே ஐரோப்பியர் புதிதாகச் சென்று குடியேறிய இடங்களில் எல்லாம் இந்தியா தேசத்திலிருந்து ஏழை மக்களைத் தருவித்துக்கொள்ள விரும்பினார்கள். இலங்கையாகட்டும், மலாய் நாடாகட்டும், வெகுவெகு தூரத்திலுள்ள பீஜித் தீவு ஆகட்டும்,—ஐரோப்பியர் குடியேறிய இடங்களில் கரும்பு, தேயிலை, காப்பி, அவுரித் தோட்டங்களில் வேலை செய்வதற்கு இந்தியாவிலிருந்து கூலி ஆட்களைத் தருவித்துக் கொண்டார்கள்.

இதே சமயத்தில் இந்தியாவில் இங்கிலீஷ்காரர்களின் ஆட்சி நிலைபெற்றிருந்தது. அந்த ஆட்சி காரணமாகத் தேசமெங்கும் வறுமை அதிகமாகி வந்தது. வெளி நாடுகளுக்குச் சென்று வயிறு வளர்க்கவும் கூடுமானால் கொஞ்சம் பணம் சம்பாதித்துக்கொண்டு வரவும் இந்தியாவின் ஏழை மக்கள் பலர் தயாராயிருந்தார்கள். அவர்களைத் திரட்டி வெளி நாடுகளுக்குக் கூலிகளாக அனுப்பிக் கொடுக்க இந்தியாவில் ஆங்கில சர்க்கார் தயாராயிருந்தனர்.

சுமார் 1860-ம் ஆண்டுக்கு முன் பின்னாக தென்னாப்பிரிக்கா ஐரோப்பியர்கள் இந்தியாவிலிருந்து இந்தியக் கூலிகளைத் தருவித்துக் கொள்ள விரும்பினார்கள். அப்போது இந்தியாவை ஆண்ட பிரிட்டிஷ் சர்க்கார் அதற்கு அநுமதி கொடுத்தார்கள். இந்த ஏற்பாட்டுக்கு "ஒப்பந்தக் கூலி முறை" என்று பெயர் வழங்கிற்று. இதன்படி தென்னாப்பிரிக்காவிலுள்ள ஐரோப்பியரின் கீழ் ஐந்து வருஷம் கட்டாயமாகக் கூலி வேலை செய்வதாய் இந்தியத் தொழிலாளரிடம் ஒப்பந்தம் எழுதி வாங்கப்பட்டது. இந்த ஒப்பந்த காலம் முடிந்ததும் தென்னாப்பிரிக்காவிலேயே நிரந்தரமாய்க் குடியேறலாம் என்றும் சொந்தமாக நிலம் வைத்துக்கொண்டு விவசாயம் செய்யலாம் என்றும் ஆசை வார்த்தை சொல்லி ஆள் சேர்த்தார்கள். ஆனால் ஐரோப்பியர் மனதிற்குள் எண்ணியது, "ஐந்து வருஷம் ஆன பிறகு இவர்களுக்கு இங்கே நிலம் எங்கே கிடைக்கப் போகிறது? அதற்குப் பிறகும் நம்மிடம் கூலி வேலை செய்துதான் இந்தியர்கள் பிழைக்க வேண்டும்!" என்பதுதான். அவர்களுடைய இந்த எண்ணம் என்ன ஆயிற்று என்று பிறகு பார்க்கலாம்.

ஒப்பந்தத் தொழிலாளியாயிருக்கும் வரையில் ஒருவன் ஏறக்குறைய அடிமையைப் போலவே நடத்தப்பட்டான். ஐரோப்பிய எஜமானனுக்குக் கொஞ்சம் கோபம் வந்தாலும் போதும்; இந்தியக் கூலியின்பாடு அதோகதிதான். எஜமான் எவ்வளவு கொடூரமாக நடந்தாலும் கேட்பார் இல்லை; நீதி வழங்குவாரும் இல்லை.

இத்தகைய நிலைமை நெடுங்காலமாகத் தென்னாப்பிரிக்காவில் குடிகொண்டிருந்தது. ஆனால் இந்தியாவின் பட்டிக்காடுகளில் வசித்த ஏழைக் குடியானவர்களுக்கு அந்த நிலைமை தெரியாதல்லவா? எனவே, ஆள் சேர்த்தவர்களின் வார்த்தைகளில் மயங்கி மேலும் மேலும் தென்னாப்பிரிக்காவுக்குப் போய்க்கொண்டிருந்தார்கள்.

அப்படிப்பட்ட ஒப்பந்தக் கூலிகளில் ஒருவனான தமிழன் பாலசுந்தரம் மேற் சொன்னவாறு காந்தி மகானுடைய ஆபீஸில் அவருக்கு முன்னால் போய் நின்றான். தன்னுடைய கதையையும் தட்டுத் தடுமாறி அழுதுகொண்டே சொன்னான். காந்திஜி உடனே அவனை வண்டியில் ஏற்றி ஒரு டாக்டரிடம் அழைத்துச் சென்றார். வெள்ளைக்கார டாக்டர்தான்; ஆயினும் அவர் அவசியமான சிகிச்சையைச் செய்தார். காந்திஜி வற்புறுத்தியதின்பேரில் பாலசுந்தரத்தின் காயங்களைப் பற்றி அத்தாட்சிப் பத்திரமும் எழுதிக் கொடுத்தார்.

உடனே காந்திஜி பாலசுந்தரத்தை ஒரு மாஜிஸ்ட்ரேட்டிடம் அழைத்துச் சென்றார். பாலசுந்தரம் தம்மிடம் சொன்ன கதையை மாஜிஸ்ட்ரேட் முன்னால் வாக்குமூலமாகக் கொடுக்கச் செய்தார்.

மாஜிஸ்ட்ரேட் பாலசுந்தரத்துக்கு இழைக்கப்பட்டக் கொடுமையைக் கேட்டுவிட்டு உடனே அந்த ஐரோப்பிய எஜமானனுக்கு நோட்டீஸ் அனுப்பினார்.

இப்போது காந்திஜி யோசனை செய்தார். கேஸ் நடந்தால் முடிவு என்ன ஆகுமோ, என்னமோ? எஜமானனுக்கு ஒரு வேளை அபராதம் போட்டாலும் போடலாம்; அல்லது வழக்கைத் தள்ளினாலும் தள்ளிவிடலாம். ஆனால் பாலசுந்தரத்தின் கதி என்ன? அவன் மறுபடியும் அதே எஜமானனிடம் வேலை செய்ய முடியுமா? அவனை

அந்த மூர்க்க எஜமானனிடமிருந்து விடுதலை செய்வதல்லவா இப்போது முக்கியமான காரியம்? அதை எப்படிச் செய்வது?

ஒப்பந்தக் கூலிமுறை சம்பந்தமான சட்ட திட்டங்கள், விதி முறைகள் எல்லாவற்றையும் காந்திஜி ஆராய்ந்தார். ஒப்பந்தக்கூலி ஒருவன் ஒப்பந்தக் காலத்துக்குள் வேலையை விட்டு நின்றால், அவன்மீது எஜமான் சட்டப்படி வழக்குத் தொடரலாம்; அப்படி நின்ற குற்றத்துக்குச் சிறைத் தண்டனைகூட விதிக்கலாம்! — இவ்வளவு இலட்சணமாக இருந்தது சட்டம்.

சட்டவிரோதமில்லாமல் பாலசுந்தரத்தை விடுதலை செய்ய இரண்டு வழிகள் இருந்தன. ஒன்று, ஒப்பந்தக் கூலிகளைப் பாதுகாப்பதற்கென்று ஏற்பட்ட உத்தியோகஸ்தரிடம் புகார் செய்து அவரைக் கொண்டு ஒப்பந்தத்தை ரத்து செய்தல். இது நடவாத காரியம் என்று காந்திஜி அறிந்தார். ஏனெனில் ஒப்பந்தக் கூலிகளைப் பாதுகாக்கும் ஐரோப்பிய உத்தியோகஸ்தர் உண்மையில் ஐரோப்பிய எஜமானர்களுடைய உரிமைகளைத்தான் பாதுகாத்து வந்தார். எனவே அந்த வழியில் பிரயத்தனம் செய்வது உபயோகப் படாது.

இன்னொன்று, பாலசுந்தரத்தின் எஜமானர் சம்மதித்து இன்னொருவருக்கு ஒப்பந்தத்தை மாற்றிக் கொடுப்பது. இந்த வழியில் முயற்சி செய்து பார்க்கலாம் என்று காந்திஜி மேற்படி எஜமானிடமே சென்றார். "ஐயா! பாலசுந்தரத்தை நீங்கள் ரொம்பக் கொடுமையாக அடித்து விட்டீர்கள். இதை நீங்களே உணர்ந்திருக்கலாம். ஆயினும் உங்கள்பேரில் வழக்குத் தொடர எனக்கு இஷ்டமில்லை. ஒப்பந்தத்தை இன்னொருவருக்கு மாற்றிக் கொடுத்துவிடுங்கள். அத்துடன் இந்த விஷயம் முடிந்து போகட்டும்!" என்றார்.

அந்த மூர்க்க ஐரோப்பியனுடைய மனது கூடக் காந்திஜியின் வார்த்தைகளினால் இளகிவிட்டது. "கேஸ் போடுகிறபடி போடு! ஒருகை பார்த்து விடுகிறேன்!" என்று அவன் பதில் சொல்லவில்லை. ஒப்பந்தத்தை இன்னொருவருக்கு மாற்றிக் கொடுக்கச் சம்மதித்தான்.

சரி; ஆனால் பாலசுந்தரத்துக்கு இன்னொரு எஜமானனைக் கண்டு பிடிக்க வேண்டுமே? இந்தியர்களுக்கு ஒப்பந்தக் கூலி வைத்துக் கொள்ளும் உரிமை கிடையாது. ஐரோப்பியர்கள்தான் வைத்துக் கொள்ளலாம். ஆகவே காந்திஜி தமக்கு அப்போது தெரிந்திருந்த ஐரோப்பியர்களில் நல்லவர் என்று எண்ணிய ஒருவரிடம் சென்று விஷயத்தைச் சொன்னார். அவர் பாலசுந்தரத்தை ஒப்பந்தக் கூலியாக எடுத்துக் கொள்ளச் சம்மதித்தார்.

மாஜிஸ்ட்ரேட்டிடம் இந்த விவரங்கள் எல்லாம் சொல்லப்பட்டன. அவர் காந்திஜி இந்த விஷயத்தில் செய்த முயற்சிகளைக் குறித்து ஆச்சரியப்பட்டுவிட்டு, "பாலசுந்தரத்தை அவனுடைய எஜமானன் அடித்தது குற்றந்தான்; ஆனால் ஒப்பந்தத்தை இன்னொருவருக்கு மாற்றச் சம்மதிப்பதால் விஷயம் இத்துடன் முடிவு பெற்றது" என்று தீர்ப்பு எழுதினார்.

பாலசுந்தரத்தின் கதை தென்னாப்பிரிக்கா எங்கும் பரவியது. தூர தூரத்திலிருந்த தோட்டங்களுக்குள்ளே புகுந்து ஒப்பந்தத் தொழிலாளிகளின் காதில் விழுந்தது. "ஆகா! நமக்காகப் பரிந்து பேசுகிறவர், பாடுபடுகிறவர் ஒருவர் இருக்கிறாரே!" என்று அவர்கள் எல்லாரும் வியந்து மகிழ்ந்தார்கள். வாழ்க்கையில் அடியோடு நிராசையடைந்திருந்தவர்களுக்கெல்லாம் ஒரு புது நம்பிக்கை உண்டாயிற்று. "நிர்க்கதியானோம்" என்று எண்ணியிருந்தவர்களுக்கெல்லாம் "நமக்கு ஒரு கதி உண்டு" என்ற உற்சாகம் ஏற்பட்டது.

பாலசுந்தரம் "கையிலே முண்டாசுத் துணியுடன் காந்திஜியின் அறையில் நுழைந்தான்" என்று மேலே சொன்னேனல்லவா? இது எதற்காகத் தெரியுமா? டர்பன் கோர்ட்டில் காந்திஜியின் தலைப் பாகையை எடுக்கச் சொன்ன விஷயம்

உனக்கு நினைவிருக்கிறதல்லவா? இந்தியர் யாராயிருந்தாலும் ஐரோப்பியரைக் காணப் போகும்போது தலைப்பாகையைத் தலையிலிருந்து எடுத்துக் கையிலே வைத்துக் கொள்ள வேண்டும் என்று தென்னாப்பிரிக்காவில் ஒரு சம்பிரதாயம் அமுலில் இருந்தது. இது விஷயத்தில் தென்னாப்பிரிக்கா வெள்ளைக்காரர்கள் வெகு கண்டிப்பாக இருந்தார்கள். இந்தியர்கள் அப்படிச் செய்யாவிட்டால் தங்களுக்கு அது அவமரியாதை என்று எண்ணினார்கள். தலையில் வைத்திருப்பது குல்லாவானாலும், தலைப்பாகையானாலும், வெறும் துண்டை முண்டாசாகச் சுற்றிக் கொண்டிருந்தாலும் எடுத்துவிட வேண்டியதுதான். விதி விலக்கே கிடையாது. தலைத் துணியை எடுக்காமல் கைகூப்பி வணக்கினாலும் போதாது.

பாலசுந்தரம் ஐரோப்பியர்களைப் பார்க்கப் போகும்போது தலைமுண்டாசை எடுத்துப் பழக்கப்பட்டிருந்தான். காந்திஜி பெரிய மனிதர் ஆகையால் அவர் முன்னால் போகும்போது அப்படிச் செய்ய வேண்டும் என்று நினைத்தான்! இதைக் கண்டதும் காந்திஜியின் மனம் குன்றிப் போயிற்று. "துணியை எடுக்க வேண்டாம், அப்பனே! தலையில் சுற்றிக் கொள்!" என்று காந்திஜி பாலசுந்தரத்திடம் சொன்னார். அவனும் சிறிது தயங்கிவிட்டுப் பிறகு முக மலர்ச்சியுடன் தலையில் துணியைச் சுற்றிக் கொண்டான்.

அந்த நிமிஷத்தில் காந்தி மகாத்மா இந்திய மக்களின் சிரசில் சுதந்திரக் கிரீடத்தை வைத்தார் என்றே சொல்ல வேண்டும்.

காந்தி மகாத்மா எழுதியிருக்கிறார்:— "இதயத்திலே எழுந்த பரிசுத்தமான ஆசை எதுவும் நிறைவேறாமற் போவதில்லை. என்னுடைய சொந்த அநுபவத்தில் இதை நான் அடிக்கடி கண்டிருக்கிறேன். ஏழை எளியவர்களுக்குத் தொண்டுபுரிய வேண்டும் என்பது என் உள்ளத்தில் இருந்த அத்தியந்த ஆசை. அந்த ஆசை என்னை ஏழைகளிடம் கொண்டு சேர்த்தது. அவர்களோடு சரிசமமாகக் கலந்து பழகி அவர்களில் ஒருவனாகி விடும் சக்தியையும் தந்தது!"

தம்பி! காந்தி மகாத்மாவின் இதயத்தில் எழுந்த அத்தியந்த பரிசுத்தமான ஆசை தமிழ் நாட்டைச் சேர்ந்த ஏழைப் பாலசுந்தரத்தின் மூலமாக நிறைவேறியது ஒரு விசேஷமல்லவா? பாலசுந்தரத்தின் கதையைக் கேட்டு நீ அடைந்த துயரத்துக்கு மத்தியில் இப்படி ஒருவாறு திருப்தியடையவும் இடமிருக்கிறது. (தொடரும்)

மூன்று கொள்கைகள்

எஸ். வி. எஸ்.

ராமண்ணா என்னுடன் காலேஜில் படித்தவன். அப்பொழுதே அவன் பல விஷயங்களில் சிரத்தை கொண்டிருப்பான். அதுவும் குழந்தைகளின் மனோதத்துவம், குழந்தை வளர்ப்பு போன்ற விஷயங்களில் அளவு கடந்த சிரத்தை காட்டி வந்தான்.

அவன் கட்டை பிரம்மச்சாரியானாலும், குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும், எப்படி போஷிக்க வேண்டும் என்ற விஷயங்களில் அழுத்தமான அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தான்.

அன்றைக்கு ஒருநாள் குப்பா சாஸ்திரிகள் விளக்கெண்ணெய் புட்டியுடன் தெருவில் காட்சி யளித்தார்.

உடனே ராமண்ணாவுக்கு மூக்குக்கு மேலே மூன்று முழம் கோபம் வந்து விட்டது.

"ஓய், எங்கேக்காணும் விளக்கெண்ணெய் வாங்கிக்கொண்டு போகிறீர்? குழந்தைக்குப் புகட்டத் தானே! அதைக்கொடும் இப்படி உடைத்தெறிகிறேன்! இப்படி விளக்கெண்ணெய் கொடுத்துக் கொடுத்துத் தானே குழந்தைகள் தேவாங்கு மாதிரி யிருக்கின்றன?—போம்!" என்று சொல்லி விளக்கெண்ணெய் புட்டியை அவரிடமிருந்து பிடுங்கி வைத்துக்கொண்டான்.

ஒரு நாள் ஒரு அம்மையார் குழந்தையைப் புடைத்துக் கொண்டிருந்தார். ராமண்ணாவால் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை. "அம்மா! தயவு செய்து குழந்தையை அடிக்காதீர்கள்! உங்களுக்குப் புண்ணிய முண்டு. குழந்தையை அடித்தீர்களானால் அதனுடைய பிடிவாதம் இன்னும் அதிகமாகி விடும்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டான்.

இப்படி குழந்தைகளின் கட்சியை ஆதரித்துப் பேச அவதரித்த ராமண்ணாவை விட்டு நாங்கள் காலேஜ் வாழ்க்கை முடிந்ததும் பிரிந்தோம். பிரியும் தருவாயில் ராமண்ணா "நீ என் ஞாபகார்த்தமாக மூன்று கொள்கைகளை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். 'ஒன்று, குழந்தைகள் அழ அழ பால் அல்லது சாதம் ஊட்டக் கூடாது; இரண்டாவது, விளக்கெண்ணெய் புகட்டக்கூடாது; மூன்றாவது, குழந்தைகளை அடிக்கக் கூடாது.' இந்த மூன்று கொள்கைகளையும் நீ காப்பாற்றி வர வேண்டும். என்ன சொல்கிறாய்?" என்றான்.

"ஆகட்டும்" என்று சொல்லி ராமண்ணாவை விட்டுப் பிரிந்தேன்.

பத்து வருஷம் கழித்துச் சென்ற மாதம் மறுபடியும் ராமண்ணாவைச் சந்தித்தேன். எங்கள் இருவருக்கும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டதில் அளவு கடந்த மகிழ்ச்சி.

"என்ன ராமண்ணா! சௌக்கியமா?" என்றேன்.

"சௌக்கியம்!" என்றான்.

"உன்னுடைய மூன்று கொள்கைகள் எப்படியிருக்கின்றன?" என்று கேட்டேன்.

"மூன்று கொள்கைகளா? இருக்கிற இடமே தெரியவில்லை!"

"ஏன்?" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"காலேஜ் வாழ்க்கையில் கண்ட கனவு நிஜவாழ்க்கையில் நிறைவேறுகிறதா? குழந்தைகள் பால் புகட்டினாலும் அழுகின்றன. புகட்டாவிட்டாலும் அழுகின்றன. ஆகவே அழ அழப் பால் புகட்டவேண்டி யிருக்கிறது! விளக்கெண்ணெயின் மேல் என் மனைவிக்கு இருக்கிற காதல் என்மேல் கூடக் கிடையாது. இன்றைக்கு விளக்கெண்ணெய் கூடாது என்று சொல்லுகிறவர்கள் எல்லாம் விளக்கெண்ணெய் குடித்துப் பெரியவர்கள் ஆனவர்கள்தானாம்! அதனால் நான் விளக்கெண்ணெய்க்கு என்றென்றைக்கும் நன்றி செலுத்த வேண்டுமாம். விளக்கெண்ணெயை குழந்தைகளுக்கும் செலுத்தித்தான் தீரவேண்டுமாம்! அப்படியேதான் அடிக்கிற விஷயமும். 'அடி உதவுகிறாப்போல அண்ணன் தம்பிகூட உதவமாட்டார்கள்' என்று அதர்வண வேதத்தில் சொல்லியிருக்கிறதாம். அதனால் அந்த வேதவாக்கைக் கடைபிடிக்க வேண்டுமாம்?" என்று மூச்சு விடாமல் சொல்லிக் கொண்டு வந்தான்.

நான் குறுக்கிட்டு, "ஆகவே........" என்று இழுத்தேன்.

"ஆகவே என் மூன்று கொள்கைகளும் காற்றில் பறந்துபோய், எனக்கு மூன்று குழந்தைகள் மிச்சம் இருக்கின்றன!" என்று சொல்லி முடித்தான் ராமண்ணா.



ஏழாம் அத்தியாயம்

பத்மாபுரம்

சென்னைப் பட்டினத்தின் ஒரு புதிய பகுதியான பத்மாபுரத்தைப் பற்றி அறியாதவர்கள் அறியாதவர்களே யாவர். தினப் பத்திரிகை வாசகர்கள் ஒவ்வொரு சனிக்கிழமையும் வெளியாகும் பத்திரிகையில் நகர நிகழ்ச்சிக் குறிப்புகளில் 'பத்மாபுரம்' என்ற பெயரைக் கட்டாயம் படித்திருப்பார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையன்றும் பத்மாபுரம் சர்வக்ஞ சங்கத்தின் ஆதரவில் ஏதேனும் ஒரு கூட்டம் கட்டாயம் நடந்தே தீரும். அந்தக் கூட்டத்தில் யாரேனும் ஒரு அரசியல் நிபுணரோ அல்லது பிரசித்தமான சமூகப் பிரமுகரோ அல்லது இலக்கிய மகா வித்வானோ உபந்நியாசம் செய்தே தீருவர். திங்கட்கிழமையன்று தினப் பத்திரிகைகளில் முக்கியமான இடத்தில் இரண்டு பத்தியை மேற்படி உபந்நியாசங்கள் அடைத்துக் கொண்டு மற்றச் செய்திகளையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிடும்.

பிரசங்கசாகர உபந்நியாச ரத்னாகர படாடோப பயங்கர பிருந்தாவனாச்சாரியாருக்கு எண்பத்தேழாவது அஸ்தி பூர்த்தி விழா ஒரு சமயம் வந்தது. அதை ஈரேழு பதினாலு உலகத்திலும் யாருமே கவனியாமல் இருந்து விட்டார்கள். ஆனால் பத்மாபுரம் சர்வக்ஞ சங்கத்தார் சும்மா விட்டு விடவில்லை. "உலக மெல்லாம் கொண்டாடாமல் விட்டாலும் நாங்கள் கொண்டாடுவோம். மேதாவியின் பெருமையை எங்களைப் போன்ற மேதாவிகளால்தான் அறிய முடியும்; மற்றவர்களாலே எப்படி முடியும்?" என்று சொன்னார்கள். எண்பத்தேழு அங்குல நீளம் எண்பத்தேழு அங்குல அகலம் எண்பத்தேழு அங்குல உயரமுள்ள ஒரு மகத்தான பிரசங்க மேடையை அமைத்தார்கள். எண்பத்தேழு கால் நாட்டிப் பந்தல் போட்டார்கள். எண்பத்தேழாயிரத்து எண்பத்தேழு பைசா செலவு செய்து பந்தலை அலங்கரித்தார்கள். தினப் பத்திரிகைகளின் மூலமாக உலக மேதாவிகள் அனைவரையும் அழைத்தார்கள். ஐன்ஸ்டின், ரொமேன் ரோலண்டு, ரொனால்டு கோல்மென், பெர்னார்டு ஷா, மிக்கி மவுஸ் முதலிய உலகப் பிரமுகர்களுக்கெல்லாம் அழைப்பு அனுப்பினார்கள். அன்று மாலையில் பத்மாபுரத்தில் பார்த்தால் ஒரே அல்லோல கல்லோலமாயிருந்தது. அன்றையக் கூட்டத்துக்குத் தினப் பத்திரிகை நிருபர்கள் மட்டும் ஏழோடு எட்டுப் பேர் வந்திருந்தார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். அந்தப் பதினைந்து பத்திரிகை நிருபர்களும் பத்மாபுரத்தில் சொந்த வீட்டிலோ அல்லது வாடகை வீட்டிலோ குடியிருப்பவர்கள். எனவே, அவர்கள் சபையோர்களாகவும் விளங்குவார்கள்; பத்திரிகை நிருபர்களாகவும் தங்கள் கடமையைச் செய்வார்கள்.

பத்மாபுரம் சர்வக்ஞ சங்கத்தின் ஆதரவில் கூட்டம் என்றால் எப்பேர்ப்பட்ட பிரமுகர்களும் உடனே பிரசங்கம் செய்ய ஒப்புக் கொள்வதின் இரகசியம் மேற்கண்டதுதான். பத்மாபுரத்தில் முப்பது பேர் அடங்கிய சபையில் பிரசங்கம் செய்வதும் சரி, வேறு எங்கேயாவது முப்பதினாயிரம் ஜனங்கள் அடங்கிய சபையில் பிரசங்கம் செய்வதும் சரி என்பது சாதாரணமாக உபந்நியாசகர்களின் உலகத்தில் சகலரும் அறிந்த உண்மை. ஆகவே, பத்மாபுரம் சங்கத்திலிருந்து பேசுவதற்கு அழைப்பு வந்து விட்டதென்றால் ஹைக்கோர்ட் ஜட்ஜுகள் என்ன, அரசியல் தலைவர்கள் என்ன, பேராசிரியர்கள் என்ன, பிரசங்க கான மேகங்கள் என்ன, சங்கீதக் கலாநிதிகள் என்ன,—யாராயிருந்தாலும் அவர்களுக்குத் தலை கிர்ரென்று ஒரு சுற்றுச் சுற்றிய பிறகுதான் கழுத்தின் பேரில் நிற்கும். அவ்வளவு பெருமிதம் அடைந்து மகிழ்வார்கள்.

பத்மா புரத்தைப்பற்றி எதற்காக இவ்வளவு வர்ணனை?—என்று வாசகர்கள் கேட்கலாம். எம் அன்பார்ந்த தமிழ் நாட்டுச் சகோதர சகோதரிகளே! பத்மாபுரத்தைப் பற்றி நாம் இத்தனை தூரம் வர்ணிப்பதற்குத் தகுந்த முகாந்திரம் இருக்கிறது. நிச்சயமான, நிராட்சேபணையான, அசைக்க முடியாத காரணங்கள் இருக்கின்றன. (கேளுங்கள்! கேளுங்கள்!) —சரியாய்ப் போச்சு! பத்மா புரத்துப் பிரசங்க ஆவேசம் நம்மையும் பிடித்துக் கொண்டு விட்டது; மன்னிக்கவும்.

நம்முடைய கதையின் பிரதான கதாநாயகனான ஸ்ரீ சௌந்தர ராகவன் தற்சமயம் பத்மா புரத்தில் இருக்கிறான் என்று சொன்னால், அதற்கு மேலே வேறு என்ன சொல்ல வேண்டும்? பத்மா புரத்தைப் பற்றி எவ்வளவு தான் வர்ணனை செய்தாலும் அதிகமாகி விடாதல்லவா?

பத்மா புரத்தில் மொத்தம் பன்னிரண்டு வீதிகள் உண்டு. ஒவ்வொரு வீடும், முன்னாலும் பின்னாலும் இரு புறமும் தோட்டமுள்ள பங்களாக்கள். அநேகமாக எல்லா வீடுகளும் மச்சு வீடுகள். மாடி இல்லாத வீட்டைப் பத்மா புரத்துப் பன்னிரண்டு வீதிகளிலும் தேடினால் ஒரு வேளை எங்கேயாவது ஒன்று இரண்டு இருக்கலாம். அவையும் மற்ற மச்சு வீடுகளுக்கு மத்தியில் தாம் இருப்பது பற்றி வெட்கப்பட்டுக் கொண்டு சுற்றிலுமுள்ள மரங்களினால் தங்களை மறைத்துக்கொண்டு நிற்கும்.

பத்மா புரத்து மாடி வீடுகளுக்குள்ளே ஒரு மாடி வீடு தனி அந்தஸ்துடன் தலை நிமிர்ந்து நின்றது. அதனுடைய வாசல் கேட்டின் இரு பக்கத் தூண்களிலும் இரண்டு கரும் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. அவற்றுள் ஒன்றில் "தேவி ஸதனம்" என்றும், இன்னொன்றில் "ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரி பி. ஏ., பி. எல்., மாஜி சப் ஜட்ஜ்" என்றும் எழுதப்பட்டிருந்தன.

பத்மா புரத்தில் வசித்த பிரமுகர்களிலே ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரிகள் முதன்மை பெற்றவர். பத்மாபுரம் சர்வக்ஞ சங்கத்தின் ஆதரவில் நடைபெறும் எந்தக் கூட்டத்திலும், பிரசங்க மேடைக்குப் பக்கத்தில் போடப்படும் கௌரவ நாற்காலிகளிலே முதல் நாற்காலியில் ராவ்பகதூர் பத்ம லோசன சாஸ்திரிகள் அவர்களையும் அவருடைய வெள்ளிப் பூண் போட்ட கருப்புக் கைத்தடியையும் காணலாம்.

ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரியாரை இன்னும் சில இடங்களிலேயும் அந்தக் காலத்து மனிதர்கள் கண்டிருக்கலாம். ஆங்கில தினப் பத்திரிகைகளில் நேயர்களின் கடிதப் பத்தியில் அடிக்கடி அவருடைய பெயர் தென்படுவதுண்டு. முக்கியமாக ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரியும் பேராசிரியர் பரிவிராஜக சர்மாவும் அவ்வப்போது நடத்திக் கொண்டிருந்த யுத்தங்கள் உலகப் பிரசித்தமானவை. எப்போதாவது காந்தி மகாத்மாவோ பண்டித மதன் மோகன் மாளவியாவோ ஆசிரியர் ராதாகிருஷ்ணன் அவர்களோ தங்களுடைய பொதுப் பேச்சுக்களில் பகவத் கீதையைப் பற்றிக் குறிப்பிட்டு விட்டார்களானால், வந்தது விபத்து. உடனே ராவ்பகதூர் பத்ம லோசன சாஸ்திரியார் தமது கைத்தடியை எடுத்துச் சுவரின் மூலையில் சாத்தி

விட்டுக் கையிலே தம்முடைய 'ஆய் வந்த' பல வருஷமாக உபயோகித்துப் பழகிய உலக்கைப் பௌண்டன் பேனாவை எடுத்துக் கொள்வார், எடுத்துக்கொண்டு எழுதத் தொடங்குவார். எழுதுவார், எழுதுவார், அப்படியே எழுதுவார். எழுதியதைச் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு கையில் மறுபடியும் தடியை எடுத்துக் கொண்டு பத்திரிகைக் காரியாலயத்துக்குப் போய்ப் பத்திரிகாசிரியரை நேரிலே பார்த்துத் தமது கடிதத்தைக் கொடுப்பார். கடிதத்தில் என்ன எழுதியிருப்பார் என்று தெரிய வேண்டுமா? காந்திஜிக்காவது, மாளவியாஜிக்காவது, ராதாகிருஷ்ணனுக்காவது பகவத் கீதையைப்பற்றிப் பேசுவதற்கு என்ன யோக்யதை என்பதாக ஒரு கேள்வி கேட்டுக் கொண்டு, அவர்கள் குறிப்பிட்ட பகவத்கீதை சுலோகத்துக்கு அர்த்தம் இப்படி என்று எடுத்துக் காட்டுவார். அந்த சுலோகத்தை அவர்கள் தப்பாகக் கையாண்டிருப்பதை இடித்துக் காட்டி, இனிமேல் மேற்படியார்கள் வேறு எந்த விஷயத்தைப் பற்றிப் பேசினாலும் பகவத்கீதையைப் பற்றி மட்டும் பேச வேண்டாம் என்று எச்சரிக்கை செய்து முடித்திருப்பார்.

சாஸ்திரிகளின் கடிதம் பிரசுரமான இரண்டு நாளைக்கெல்லாம் பரிவிராஜக சர்மாவின் கடிதம் பிரசுரமாகும் என்று வாசகர்கள் நிச்சயமாக எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் எதிர்பார்த்தது வீண் போகாது. சர்மாவின் கடிதமும் அச்சில் வரும். அதில் சர்மாவானவர் காந்திஜியையும் மாளவியாவையும் பற்றிச் சாஸ்திரியார் எழுதியிருப்பதை ஒப்புக் கொண்டு பலமாக ஆதரிப்பார். "அவர்களுக்கெல்லாம் பகவத்கீதையைப் பற்றி ஒன்றும் தெரியாது; ஒன்றுமே தெரியாது; தங்களுக்கு ஒன்றுமே தெரியாது என்பதுகூட அவர்களுக்குத் தெரியாது" என்று சொல்லிவிட்டு, "ஆனால்" என்று ஆரம்பிப்பார். ஆரம்பித்து ஒரு அதிசயமான கேள்வியைப் போடுவார். "ஆனால் நமது ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரிக்கு மட்டும் பகவத் கீதையைப் பற்றித் தெரியுமா? பகவத் கீதையை அவர் குரு முகமாகப் பாடங் கேட்டதுண்டா? பாராயணம் செய்ததுண்டா? பகவத் கீதை என்கிற நூலைக் கண்ணாலாவது அவர் பார்த்தது உண்டா? அப்படிப் பார்த்திருந்தாரானால் பகவத் கீதையின் பதினோராவது அத்தியாயத்தில் இருபத்தேழாவது சுலோகத்தைக் குறிப்பிட வந்தவர் இருபத்தெட்டாவது சுலோகத்தை எதற்காகக் குறிப்பிட்டார்? அதையாவது சரியாகக் குறிப்பிட்டாரா? இருபத்தெட்டாவது சுலோகத்தில், 'அர்ச்சுனா! என்னைப் பார்!' என்று பகவான் அருளியதாகச் சொல்லியிருப்பது எவ்வளவு அசம்பாவிதம்? 'என்னைப் பார்!' என்று பகவான் சொன்னாரா? சாஸ்திரியாரே! பகவத்கீதைப் புத்தகத்தை எடுத்துக் கண்ணையும் கண்ணாடியையும் நன்றாகத் துடைத்துக் கொண்டு பாரும். பாரும், ஐயா, பாரும்! 'என்னைப் பார்!' என்று பகவான் சொல்லியிருக்கிறார்?- அப்படிச் சொல்லியிருந்தால் அவர் பகவான் ஆவாரா? 'என்னைப் பார்ப்பாயாக!' என்றல்லவோ பகவான் சொல்லியிருக்கிறார்? 'என்னைப் பார்!' என்பதற்கும், 'என்னைப் பார்ப்பாயாக!' என்பதற்கும் மலைக்கும் மடுவுக்கும் ஆனைக்கும் பூனைக்கும் எருமைக்கும் எறும்புக்கும் உள்ள வித்தியாசம் உண்டு என்பது தெய்விக சம்ஸ்கிருத பாஷையில் அ, ஆ படித்திருக்கும் குழந்தைக்குக் கூடத் தெரியவரும். ஆனால் இரண்டு குட்டிச்சுவர்களுக்கு ஆன வயதாகியிருக்கும் பத்மலோசன சாஸ்திரிக்கு அது எங்கே தெரியப் போகிறது? சம்ஸ்கிருதம் என்பது என்னவென்று அவருக்குத் தெரிந்தால் அல்லவா பகவத் கீதையைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியும்? 'என்னைப் பார்!' என்பதற்கும், 'என்னைப் பார்ப்பாயாக!' என்பதற்குமுள்ள அஜகஜாந்தரமான வித்தியாசத்தைச் சாஸ்திரியாரால் எப்படித் தெரிந்து கொள்ள முடியும்?"

இப்படியாகப் பேராசிரியர் பரிவிராஜக சர்மா வெளுத்து வாங்கியிருப்பார். ஆனால் இந்த வெளுப்புக்கெல்லாம் பயந்து போகிறவரா சாஸ்திரியார்? 'வெளுப்பானுக்கு வெளுப்பான் வண்ணாரச் சின்னான்' என்பது போலச் சாஸ்திரியார் மறுபடியும்

பேனாவை எடுப்பார். சர்மாவின் கடிதத்தையும் அவருடைய யோக்யதையையும் அக்கு வேறு, ஆணி வேறு கப் பிய்த்தெறிந்து இன்னொரு கடிதம் எழுதிப் பத்திரிகைக் காரியாலயத்துக்கு எடுத்துச் சென்று பிரசுரிக்கச் செய்வார். இவ்விதம் குறைந்தபட்சம் ஆறுமாதம் சாஸ்திரியாருக்கும் சர்மாவுக்கும் வாதப்போர் நடந்த பிறகு, "இத்துடன் இந்த விவாதம் முற்றுப் பெற்றது" என்று பத்திரிகாசிரியர் குறிப்பு எழுதி மூடிப்பார்.

ஆனால் நானது 1934-ம் வருஷம் ஜனவரி மாதம் பிறந்து தேதி இருபத்தொன்று ஆகியும் இதுவரையில் அவர்களுக்குள் விவாதம் ஒன்றும் ஆரம்பமாகவில்லை. இதற்குக் காரணம் சில காலமாக ராவ்பகதூர் பத்மலோசன சாஸ்திரியார் தமது இரண்டாவது குமாரனாகிய சௌந்தரராகவனைப் பற்றிய கவலையில் ஆழ்ந்திருந்ததுதான்.

சாஸ்திரியாரின் மூத்த குமாரனாகிய சங்கர நாராயணனைப் பற்றி ஏற்கெனவே சாஸ்திரியாருக்கு ஒரு வகையில் ஏமாற்றம் உண்டாகியிருந்தது. சங்கர நாராயணன் நல்ல புத்திசாலிதான்; பள்ளிக் கூடத்திலும் கலாசாலையிலும் நன்றாகப் படித்து நல்ல மார்க்குகள் வாங்கி முதல் வகுப்பிலேயே எப்போதும் தேறிக் கொண்டு வந்தவன்தான்; சாஸ்திரியாருக்குப் புதல்வனாய்ப் பிறந்து படிப்பிலே சோடையாகி விடுவானா? பி. ஏ. பரீட்சையில் தேறி எம். ஏ. பரீட்சையில் தேறி, பி. எல். பரீட்சையிலும் எம். எல். பரீட்சையிலும் பிரமாதமாகத் தேறி, அப்புறம் பாஸ் செய்வதற்கு வேறு பரீட்சை யில்லையே என்று சில காலம் தவித்து விட்டுப் பிறகு வக்கீல் தொழிலில் இறங்கினான். அதுவும் அவனுடைய பிரசித்தி பெற்ற பிரபல மாமனாராகிய அட்வகேட் வியாக்ர மய்யரின் ஆதரவிலே ஆரம்பித்தான். இதுதான் விபரீதமாக முடிந்தது. அட்வகேட் வியாக்ரமய்யர் தம்மிடம் தொழில் கற்க வந்த மாப்பிள்ளையை அப்படியே விழுங்கிக் கொண்டு விட்டார். அதாவது மாமனார் வீட்டிலேயே மாப்பிள்ளை ஐக்கியமாகி விட்டான். நடை உடை பாவனை யெல்லாம் வைதிக பாணியிலிருந்து நவ நாகரிகத்துக்கு மாறிப்போய் விட்டது. அவனுடைய மனைவியின் அபிப்பிராயத்தை அனுசரித்துத் தன்னுடைய பெற்றோர்களைப் பற்றிச் 'சுத்த கர்நாடகம்' என்று நினைக்கக்கூடிய அளவுக்கு அவனுடைய மனதும் மாறிப்போய் விட்டது. இன்னும், ராவ்பகதூர் சாஸ்திரியார் அடிக்கடி பத்திரிகைகளில் நடத்தி வந்த விவாதங்களை அவன் ஆட்சேபித்துக் கண்டிக்கும் அளவுக்கு நிலைமை மிஞ்சிப் போய்விட்டது. ஒரு தடவை அவன் தன் தகப்பனார் எழுதும் பத்திரிகைக் கடிதங்களைப் பற்றி 'ரிடிகுலஸ்' என்ற சொற்றொடரைப் பிரயோகித்த போது, இத்தனை காலமும் ஒருவாறு அவனுடைய அதிகப் பிரசங்கத்தைப் பொறுத்துக் கொண்டிருந்த சாஸ்திரியாருக்கு இனிமேல் பொறுக்க முடியாது என்று ஆகிவிட்டது. "ஆமாம் அப்பா, சங்கரா! நான் 'ரிடிகுலஸ்'தான்; உன் தாயாரும் 'மிஸ்ஸஸ் ரிடிகுலஸ்'தான்! நீயோ அதி மேதாவி! அட்வகேட் வியாக்ர மய்யரின் சாக்ஷாத் சீமந்த மாப்பிள்ளை யல்லவா? நீ எங்களுக்குப் பிள்ளை இல்லை யென்று நினைத்துக் கொள்கிறேன். பிறக்கும் போதே வியாக்ர மய்யரின் மாப்பிள்ளையாகப் பிறந்து விட்டதாக எண்ணிக் கொள்கிறேன். போ! போ! என் முகத்தில் இனிமேல் விழிக்காதே!" என்று சாஸ்திரிகள் கண்டிப்பாகச் சொல்லி விட்டார். சாஸ்திரிகளுக்குக் கோபம் வந்தால் வந்ததுதான்; அவருடைய பத்தினியினாலேகூட அதை மாற்ற முடியாது. ஆகையால், ஏற்கெனவே மாமனார் வீட்டில் பதினாறு அணா ஐக்கியம் அடைந்திருந்த சங்கர நாராயணன் எம். ஏ., எம். எல்., இப்போது பதினாறு அணா ஐக்கியமாகி மன நிம்மதி அடைந்தான்.

சாஸ்திரியாரின் இரண்டாவது புதல்வனும் கடைசிப் புதல்வனுமாகிய சௌந்தர ராகவனும் தமையனைப் போலவே மகா புத்திசாலி. கலாசாலைப் படிப்பு பரீட்சை யெல்லாம் அவனுக்குத் தண்ணீர் பட்ட பாடாயிருந்தது. பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பில் பொருளாதார விஷயத்தை எடுத்துக் கொண்டு மாகாணத்திலேயே முத

லாவதாகத் தேறினான். அவன் தேறிய வருஷத்தில் இந்திய அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையைப் பற்றிப் பத்திரிகைகளில் சர்ச்சை நடந்து கொண்டு வந்தது. ஒரு ரூபாய்க்குப் பதினெட்டு பென்ஸ் கிடைத்தால் நல்லதா பதினாறு பென்ஸ் கிடைத்தால் நல்லதா என்பது பற்றிச் சர்ச்சை. பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதும் ஆற்றலைத் தகப்பனாரிடமிருந்து பெற்றிருந்த சௌந்தர ராகவன் மேற்படி பொருளாதார விவாதத்தைப் பற்றித் தானும் பத்திரிகைகளுக்கு ஒரு கடிதம் எழுதினான். அது பிரசுரமாயிற்று. நாட்டில் பல பொருளாதார நிபுணர்களின் கவனத்தைக் கவர்ந்தது. இந்திய சர்க்காரின் பொக்கிஷ இலாகா அதிகாரிகளின் கவனத்தைக் கூடக் கவர்ந்தது. அந்த இலாகாவின் தலைமை அதிகாரி இவனுக்கு ஒரு கடிதம் எழுதினார். இவன் அவரைப் போய்ப் பார்த்தான். அவ்வளவுதான். இந்திய சர்க்காரின் வரவு செலவு இலாகாவில் சௌந்தர ராகவனுக்கு உத்தியோகம் கிடைத்தது. எடுத்தவுடனேயே சம்பளம் மாதம் 750 ரூபாய். அந்தக் காலத்தில் 750 ரூபாய் என்பது இப்போது 3,500 ரூபாய்க்குச் சமானம் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுவீர்களாக.

ஆகவே தமது இரண்டாவது புதல்வனைப்பற்றிப் பத்மலோசன சாஸ்திரி பெருமைப் படுவதற்கே எல்லாக் காரணங்களும் இருந்தன. அப்படியிருக்கும் போது அவர் கவலைப்படுவதற்குக் காரணம் என்ன?

வேறு ஒன்றுமில்லை; அவனுடைய கலியாணத்தைப் பற்றித்தான்.

சாதாரணமாகப் பெற்றோர்கள் பெண்களின் கல்யாணத்தைப் பற்றிக் கவலைப்படுவது தான் வழக்கம். பத்மலோசன சாஸ்திரியின் கவலை இதற்கு நேர்மாறாயிருந்தது. தம் அருமைப் புதல்வனின் கல்யாணத்தைப் பற்றி அவர் கவலைப் பட்டார். மூத்த பிள்ளை தேவலை என்று இரண்டாவது பிள்ளை செய்து விடுவான் போலிருக்கிறதே என்று மிகவும் கவலைப் பட்டார்.

அவருடைய வாழ்க்கைத் துணைவி காமாட்சி அம்மாள் அவரைக் காட்டிலும் அதிகமாகக் கவலைப்பட்டாள்.

இவர்கள் கீழ் வீட்டில் இருந்தபடி கவலைப் பட்டுக் கொண்டிருக்கையில் நாம் மேல் மச்சுக்குச் சென்று நம் கதாநாயகனைச் சந்திக்கலாம்.

எட்டாம் அத்தியாயம்

சௌந்தரராகவன்

ஐந்து அடி ஆறு அங்குல உயரமும் அதற்குத் தகுந்த வாட்ட சாட்டமும் சிற்பி செதுக்கியதுபோல் கம்பீரமாக அமைந்த முகமும் கச்சிதமாகக் கிராப் செய்து நன்கு படியும்படி வாரி விட்ட தலையும் நாகரிகமான உடையுமாக இதோ மேஜையருகில் நாற்காலியில் அமர்ந்திருப்பவன் தான் நம் கதாநாயகன் சௌந்தர ராகவன்.

அவன் எதிரே மேஜை மீது யாரிடமிருந்தோ அவனுக்கு வந்த கடிதம் ஒன்று இருந்தது. இவன் எழுதத் தொடங்கியிருந்த கடிதம் ஒன்றும் அதன் பக்கத்திலே கிடந்தது. ஸ்வீடன் தேசத்துப் பேராசிரியர் இப்ஸன் எழுதிய நாடகத் தொகுதிப் புத்தகம் ஒன்று இருந்தது. அதன் அடியில் அன்று வந்த தினப் பத்திரிகையும் இருந்தது. இவற்றைத் தவிர அழகாகச் சட்டமிட்டு மேஜைக்கு அலங்காரமாக விளங்கிய சிறிய புகைப்படம் ஒன்றும் காணப்பட்டது.

சௌந்தர ராகவன் கையிலே அழகிய நீல நிறப் பௌண்டன் பேனா வைத்திருந்தான். அவனுடைய அழகிய களை பொருந்திய முகத்தில் இப்போது கோபத்தோடு ஏமாற்றமும் சிறிதளவு துயரமும் குடிகொண்டிருந்தன. அடிக்கடி அவனுக்குப் பெருமூச்சு வந்து கொண்டிருந்தது. அறிவொளி திகழ்ந்த அவனுடைய கண்களில் வெகு தூரத்திலுள்ள எதையோ பார்க்கும் கனவு மயக்கம் காணப்பட்டது.

மேஜைமீதிருந்த புகைப்படத்தைச் சற்று உற்று நோக்குவோம். ஆகா! அவள் ஒரு வடநாட்டுப் பெண்;



அழகிற் சிறந்த யுவதி. பிராயம் இளம் பிராயமாகத்தான் இருக்க வேண்டும்; ஆயினும் அவளுடைய முழு மதி முகத்தில் உலக அநுபவத்தினாலும் உள்ளத்தின் சிந்தனையினாலும் ஏற்படும் முதிர்ச்சி தோன்றியது. அந்தப் படத்திலுள்ள முகத் தோற்றத்தைக் கொண்டு அவளுடைய வயதைப் பதினெட்டு என்றும் கணிக்கலாம்; இருபத்தைந்து என்றும் மதிக்கலாம்.

இவன் யார்? இந்த வடநாட்டு நங்கையின் புகைப்படம் ராவ்பகதூர் பிரம்மஸ்ரீ பத்மலோசன சாஸ்திரிகளின் புதல்வனுடைய மேஜையின் மீது ஏன் இருக்கிறது? அந்தப் படத்தைப் பார்த்துப் பார்த்து இவன் எதற்காகப் பெரு மூச்சு விடுகிறான்? நல்லது; மேஜையின் மீதுள்ள கடிதங்களைப் பார்த்து ஏதேனும் விவரம் கண்டு பிடிக்க முடியுமா என்று பார்ப்போம். கடிதங்கள் மேஜைமீது பிரித்தே வைக்கப்பட்டிருப்பதால், பி. எல். எஸ். ராகவனுடைய தோள் மேலாக அவற்றைப் படிப்பதில் நமக்குச் சிரமம் எதுவும் ஏற்படாது.

முதலில் ராகவனுக்கு யாரோ எழுதியிருந்த கடிதத்தைப் பார்க்கலாம். எழுத்தைப் பார்த்ததும் அது ஒரு பெண்மணியின் கடிதம் என்று தெரிந்து விடுகிறது. ஆங்கிலத்திலே எழுதப்பட்டிருந்த கடிதந்தான். நம்முடைய வாசகர்களின் வசதிக்காக அதைத் தமிழ்ப்படுத்தித் தருகிறோம்.

ஜி. ஐ. பி. மார்க்கம்
21—1—34

ஸ்ரீ சௌந்தர ராகவன் அவர்களுக்கு,

நமஸ்தே.

தாங்கள் பம்பாய்க்கு எழுதிய கடிதம் நான் ரயிலுக்குப் புறப்படுகிற தறுவாயில் கிடைத்தது. ஆகையால் ஓடுகிற ரயிலில் இருந்து கொண்டு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். நாகபுரி ரயில்வே ஸ்டேஷனில் இதைத் தபால்பெட்டியில் போடலாமென்று உத்தேசித்திருக்கிறேன்.

தங்களுடைய கடிதம் நான் தங்களைப் பிரிந்த பிறகு தங்களுடைய மனோ நிலை

இன்ன தென்பதை நன்கு வெளியிடுகிறது. அதை அறிந்து நான் மிகவும் வருந்தினேன். தங்களை நான் மிகவும் மன்றாடிக் கேட்டுக் கொள்வது, கூடிய சீக்கிரத்தில் தாங்கள் என்னை மறந்துவிட வேண்டும் என்பதே.

தாங்கள் ஆண் மகன்; இவ்வுலகத்தில் தாங்கள் செய்வதற்கு எத்தனையோ காரியங்கள் இருக்கின்றன. அவற்றில் தீவிரமாகக் கவனம் செலுத்தினால் தங்கள் மனோ நிலை மாறிவிடும். ஆபீஸுக்குப் போய் ஒழுங்காக வேலை செய்ய ஆரம்பித்தால் சில நாட்களில் எல்லாம் சரியாய்ப் போய்விடும். மனதை மாற்றிக் கொள்வதற்கு வேறு ஒரு நல்ல மார்க்கமும் இருக்கிறது. தங்களுக்குத் தெரியாவிட்டால் தயவு செய்து தங்களுடைய பூஜ்ய மாதாஜியைக் கேட்டுத் தெரிந்து கொள்ளக் கோருகிறேன்.

தங்களுடைய தாயாரிடம் எனக்கு அளவில்லாத பக்தியும் மதிப்பும் ஏற்பட்டன. துர்ப்பாக்கியத்தினால் அவருக்கு மருமகளாக எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. அதனால் அவரிடத்தில் என்னுடைய பக்தி சிறிதும் குறைந்து விடவில்லை. ஸநாதன ஹிந்து தர்மமே உருவெடுத்ததுபோல் என் கண்களுக்குத் தோன்றிய அந்த மூதாட்டி இந்தப் பதிதையின் காலில் விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். தினந் தினம் புது மலர் எடுத்துத் தேவி பராசக்தியைப் பூஜை செய்த அவருடைய புனிதமான கரங்களினால் என்னுடைய பாதங்களைத் தொட்டு, 'பெண்ணே! உன்னை வேண்டுகிறேன்! என் கோரிக்கையை நிறைவேற்று!' என்று கேட்டுக் கொண்டார். அப்படியே செய்வதாக அவருக்கு நான் வாக்குறுதி கொடுத்தேன். அதை நான் அவசியம் நிறைவேற்றுவேன். உலக வாழ்க்கையில் நான் இன்னும் என்னென்ன தீய காரியங்களைச் செய்து என்னுடைய பாவ மூட்டையைப் பெருக்கிக் கொண்டாலும், தங்களுடைய தாயாருக்குக் கொடுத்த வாக்கை அவசியம் நிறைவேற்றி வைப்பேன். அந்த ஒரு எண்ணமானது இந்த உலக வாழ்க்கையாகிய பெரும் பாரத்தைச் சுமப்பதற்கு வேண்டிய மனோ திடத்தை எனக்கு அளித்துக் கொண்டிருக்கும்.

அன்பரே!... இப்படி நான் தங்களை அழைப்பதில் தவறு ஒன்றுமில்லை என்று நினைக்கிறேன். தவறாயிருந்தாலும், இதுவே கடைசித் தடவையாக அத்தவறை நான் செய்வதாக இருக்கலாம். அதற்காக ஆண்டவன் என்னை மன்னித்து விடுவார்.

பம்பாய்க்குத் தாங்கள் எழுதிய கடிதத்தையும் அதற்கு முன்னால் பல சமயங்களில் எழுதியிருந்த கடிதங்களையும் தீயில் போட்டு எரித்து விட்டேன். அவற்றை வைத்துக் கொண்டிருப்பதால் என்ன பயன்? தாங்களும் தயவு செய்து அவ்விதமே செய்யக் கோருகிறேன். நான் எழுதிய பழைய கடிதங்களையும், இந்தக் கடிதத்தையும், என்னுடைய புகைப் படம் ஒன்று வைத்திருந்தீர்களே, அதையும், சேர்த்துத் தீயில் போட்டு எரித்து விடக் கோருகிறேன். அவற்றை வைத்துக் கொண்டிருப்பதில் என்ன பயன்? உன்னதமான மலையில் ஏறத் தொடங்குகிறவர்கள் தங்களிடம் உள்ள சாமான்களில் உபயோகமில்லாதவற்றைக் கழித்து விடுவது தான் நல்லது. நாம் இருவரும் இப்போது புதிய செங்குத்தான மலைப்பாதையில் ஏறத் தொடங்கி யிருக்கிறோம். புனர் ஜன்மம் எடுத்துப் புதிய வாழ்க்கை தொடங்குகிறோம் என்றே சொல்லலாம். உலகத்தில் புதிதாகப் பிறக்கும் குழந்தையை எப்படிச் சுமையே இல்லாமல் கடவுள் அனுப்பி வைக்கிறார், பாருங்கள்! பூர்வ ஜன்மத்துப் பழைய மூட்டை முடிச்சுகளையெல்லாம் தூக்க வேண்டியதாயிருந்தால் குழந்தையானது தன் வாழ்க்கையைச் சௌகரியமாகத் தொடங்க முடியுமா? அம்மாதிரியே நாமும் நம்முடைய புது வாழ்க்கையைத் தொடங்கும் போது பழைய சுமைகளையெல்லாம் வீசி எறிந்து விடலாம்; அல்லது தீயிலே போட்டு எரித்து விடலாம்.

இந்தக் கடிதத்தை முடிக்க வேண்டிய நேரம் இப்போது நெருங்கி விட்டது. அடுத்தபடி ரயில் நிற்கும் ஸ்டேஷன் நாகபுரி என்று அறிகிறேன். வண்டி நின்ற ஒவ்வொரு ஸ்டேஷனிலும் சில சில வரிகளாக இத்தனை நேரமும் இதை எழுதி வந்தேன். பக்கத்திலே இருப்பவர்கள், 'என்ன இப்படிப் பிரமாதமாக எழுதுகிறாய்? ஏதாவது பத்திரிகைக்குக் கட்டுரை எழுதுகிறாயா?' என்று அடிக்கடி கேட்பதற்குப் பதில் சொல்லச் சங்கடமாயிருந்தது.

நானாவது, பத்திரிகைக்குக் கட்டுரை எழுதவாவது? அதற்குப் பிறந்தவர்......ஓ! ஏதேதோ பழைய ஞாபகங்கள் வருகின்றன.

என்னுடைய பிரயாணத்தின் நோக்கத்தைப் பற்றி எழுதி இதை முடிக்கிறேன்.

பீஹாரில் ஏற்பட்ட பயங்கரமான பூகம்பத்தைப் பற்றித் தாங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். அதன் பலனாக

பீஹாரின் மக்களுக்கு விளைந்திருக்கும் கோர விபத்துகளைப் பற்றியும் தெரிந்து கொண்டிருப்பீர்கள். இயற்கையின் விபரீத கோபத்தினால் கனவிலும் நினைத்திருக்க முடியாத துன்பங்களுக்கு ஆளாகியிருக்கும் பீஹார் மக்களுக்குச் சேவை செய்யத் தொண்டர்கள் தேவை என்று பீஹாரின் மாபெருந் தலைவர் பாபு ராஜேந்திர பிரஸாத் விண்ணப்பம் விடுத்திருக்கிறார் அல்லவா? அதற்கிணங்க, பம்பாயிலிருந்து தொண்டர் கோஷ்டிகள் புறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. முதலில் புறப்பட்ட தொண்டர் கோஷ்டியில் நானும் சேர்ந்து போய்க் கொண்டிருக்கிறேன்......

இந்த ஜன்மம் எடுத்ததற்கு யாருக்கேனும் ஏதாவது உதவி செய்யக் கூடிய சந்தர்ப்பம் இந்த ஏழைக்குக் கிடைத்தால் அதுவே நான் மனச்சாந்தி அடைவதற்குச் சாதனமாயிருக்கும். வேறு வழியில் நான் மனநிம்மதி அடைய முடியாது. ஒரு வேளை கடவுளின் கடுஞ்சோதனைக்கு ஆளாகியிருக்கும் மக்களுக்குச் சேவை செய்யும் சந்தர்ப்பத்தில் இந்த அற்ப உயிரை இறைவன் காணிக்கையாக ஏற்றுக் கொண்டால் அதைக் காட்டிலும் திருப்தியான காரியம் வேறு எதுவும் கிடையாது.

தங்களுக்கு என்னால் நேர்ந்த பலவித சங்கடங்களுக்காகவும் மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தயவு செய்து என்னைச் சீக்கிரத்தில் மறந்துவிடுங்கள் என்று மறுபடியும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்,
தாரிணி

மேற்கண்ட கடிதத்தைப் படித்து விட்டுச் சௌந்தர ராகவன் பெருமூச்சு விட்டதைப் பற்றி வாசகர்கள் வியப்படைய மாட்டார்கள். சர்வகலாசாலையின் கடுமையான பரீட்சைகளிலெல்லாம் அநாயாசமாக விடை எழுதிப் பாஸ் செய்த மேதாவி இந்தக் கடிதத்துக்குப் பதில் எப்படி எழுதுவது என்று தெரியாமல் திணறியது பற்றியும் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

பத்மா புரம், சென்னை
24—1—34

ஸ்ரீமதி தாரிணி தேவி அவர்களுக்கு,

நமஸ்தே.

தாங்கள் கருணை கூர்ந்து ரயிலில் பிரயாணம் செய்த வண்ணம் எழுதி அனுப்பிய கடிதம் வந்து சேர்ந்தது. அதில் தாங்கள் எழுதியிருந்த வார்த்தை ஒவ்வொன்றும் என் நெஞ்சைப் பிளந்து எப்படி வேதனை செய்தது என்பதை நீ அறிந்தாயானால்,......அதைப்பற்றி உனக்கு எழுதி என்ன பயன்? இரும்பையும் கல்லையும் ஸநாதன தர்மத்தின் கொடும் விதிகளையும் ஒத்த உன்னுடைய ஈரமில்லாத இருதயம் என்னுடைய மன வேதனையை எப்படி அறியப் போகின்றது?......

இவ்வளவுடனே ராகவன் எழுதத் தொடங்கிய கடிதம் நின்று போயிருந்தது. மேலே என்ன எழுதுகிறது என்று யோசித்து ஏதேதோ எழுதிப் பார்த்துச் சரியாகத் தோன்றாமையால் வரிவரியாக அடித்திருந்தான்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், பூஜை வேளையில் கரடி விடுகிறது என்ற பழமொழிக்கு உதாரணமாகும் படியாக, வாசலில் ஒரு குரல் "ஸார்!" என்று கேட்டது.


ராகவன் சற்றுக் கோபத்துடன் எழுந்து வந்து மச்சுத் தாழ்வாரத்தின் ஓரமாக நின்று பார்த்தான். பங்களாவின் தெரு வாசற் கதவண்டை இரண்டு பிராமணோத்தமர்கள் நின்று கொண்டிருக்கக் கண்டான்.

"யார் அது?" என்ற ராகவனின் குரலைக் கேட்டு அவர்கள் இருவரும் தலை நிமிர்ந்து பார்த்தார்கள். அவர்களில் ஒருவர் நமது நண்பர் ராஜம் பேட்டை கிராம முன்சீப் கிட்டாவய்யர்; இன்னொருவர் பழைய மாம்பலம் வாசியான கிட்டாவய்யரின் சின்ன மாமா சுப்பய்யர்.

சுப்பையர் முகத்தைப் பார்த்ததும் அவர் தன் தகப்பனுக்குத் தெரிந்தவர் என்பதை அறிந்திருந்த ராகவன், "ஓஹோ! அப்பாவைப் பார்க்க வந்திர்களா? இதோ கதவைத் திறக்கச் சொல்கிறேன்!" என்று சொல்லி விட்டுப் பின்னால் சென்றான்.

அவனுடைய முகம் மறைந்ததும் சுப்பையர் கிட்டாவய்யரின் கையைத் தொட்டு, காதோடு இரகசியமாக, "இந்தப் பையன்தான் மாப்பிள்ளை; பார்த்தாயல்லவா?" என்றார்.

"பையன் மாப்பிள்ளையாகட்டும்; பிறகு பார்த்துக் கொள்ளலாம்!" என்றார் கிட்டாவய்யர். (தொடரும்)



படத்தில் கோடு இட்ட பகுதிகள் எல்லாம் தமிழகத்துடன் சேரவேண்டியவை



"நாகர் கோவில், குமரிமுனைக்குச் சென்று வருகிறீர்களா?" என்று ஆசிரியர் என்னைக் கேட்டதும் நான் திகைத்துப் போய் விட்டேன்.

கடல் கடந்த பாவத்துக்குப் பிராயச் சித்தமாகச் சமுத்திர ஸ்நானம் செய்ய வேண்டும் என்று சென்ற இரண்டு வருஷ காலமாக என்னைச் சில வைதிகர்கள் வற் புறுத்தி வந்தார்கள். அவர்களுடைய கோரிக்கை நிறைவேறாமல் இருப்பதற்காக நான் சமுத்திர ஸ்நானம் செய்வதற்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை யெல்லாம் நழுவ விட்டுக்கொண்டே வந்தேன்.

அப்படியிருக்க, முக்கடலும் சேரும் புண்ணிய தீர்த்தமான, — கடற்கரையில் நின்ற விடத்தில் இருந்துகொண்டே சூரிய உதயம், சூரிய அஸ்தமனம் இந்த இரண்டு அபூர்வக் காட்சிகளையும் தரிசிக்கக்கூடிய பிரதேசமான கன்னியா குமரிக்குச் செல்லு கிறீர்களா என திடீரென்று கேட்டால், அதைக் குறித்து நான் என்ன நினைப்பது? எனினும், அடுத்த கணத்திலேயே எனக்கு அந்தச் சந்தேகமெல்லாம் நிவர்த்தி யாகி விட்டது.

குமரிமுனைப் பிரதேசத்தில் நடை பெற்று வரும் தமிழர்களின் இயக்க சம்பந்த மான விவரங்களை நேரில் சென்று அறிந்து வருவதற்காக, நான் அங்கு செல்ல வேண்டும் என்று கட்டளையிட்டார் ஆசிரியர்.

அதற்கிணங்க, நான் திருவாங்கூர் சமஸ் தானத்திலுள்ள தமிழ் நாடு காங்கிரஸின் தலைமை ஸ்தாபனம் இருக்கும் நாகர் கோவி லுக்குப் பிரயாணமானேன்.

திருநெல்வேலியில் இறங்கி நாகர் கோவிலுக்குச் சுமார் நாற்பது மைல் தூரம் பஸ்ஸில் செல்லவேண்டும். பஸ்ஸில் சிறிது தூரம் சென்றபின், பிரயாணிகளில் சிலர் மூன்று நான்கு தினங்களுக்கு முன் அந்தப் பிரதேசத்தில் நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றிப் பேசிக் கொண்டனர்.

"மலையாளிகள் திடீரென்று அந்தக் கிரா மத்திற்குள் பிரவேசித்தபோது பெண்களும் குழந்தைகளும் நடு நடுங்கி அலற ஆரம் பித்து விட்டார்கள். அவர்கள் சில வீடு களுக்குத் தீ வைத்தபின், நிரபராதிகளான பெண்களை நையப் புடைத்து விட்டனர். இந்தப் பாழும் ஊரில் இனி வசிப்பதற்கே யோக்கியதை இல்லை. போலீசாரிடம் முறையிட்டால், மேற்கொண்டு உபத்திரவம் ஏற்படுகிறதே யன்றி, பரிகாரம் எதுவும் கிடைப்பதில்லை. போலீசாரும் மலையாளி களுக்கு உடந்தையாகவும் தமிழர்களுக்கு விரோதமாகவும் இருந்து வருகிறார்கள்" என்று ஒருவர் அங்கலாய்த்துக் கொண்டார்.

"இதெல்லாம் உண்மைதானா? நீங்கள் நேரில் பார்த்தீர்களா?" என்று கேட்டு வைத்தேன்.

"வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறீர்கள்? மலையாளிகளினாலும் போலீசாராலும் நூற் றுக் கணக்கானவர்கள் காயமடைந்திருக் கின்றனர். காயமடைந்த தமிழர்களுக்குத்

திருவாங்கூர் சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை செய்யவும் மறுத்து விடுகிறார்கள். ஒன்றல்ல, இரண்டல்ல, பல கிராமங்களிலும் அவ்வாறு நடந்திருக்கிறது. கிராமங்களிலுள்ள ஏழைகள் எந்தச் சமயத்தில் தங்களுக்கு என்ன ஆபத்து நேருமோ என்று நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள்” என்றார் மற்றொருவர்.

“இந்தக் குமரி முனையைத் திருவாங்கூர் சமஸ்தானப் போலீசார் ஒரு போர் முனையாகவே மாற்றிவிட்டார்கள், ஸார்! கிராமங்களில் யாதொரு பாதுகாப்புமின்றி வாழும் ஏழைகளிடம்தான் அவர்கள் தங்களுடைய வீர தீர பராக்கிரமங்களைக் காட்டுகிறார்கள்! இங்கு தமிழர்கள் அதிகமிருக்கும் பிரதேசங்கள் தமிழ் மாகாணத்துடன் சேர்ந்தாலன்றி, இனி எங்களுக்குக் கதிமோட்சம் இல்லை” என்று ஓர் இளைஞர் ஆத்திரப்பட்டார்.

அரைத் தூக்கத்திலிருந்த அயலூர்வாசி ஒருவர் ‘போர்முனை’ என்ற வார்த்தையைக் கேட்டதும் திடுக்கிட்டு எழுந்து, “அடாடா! இப்படி ரோட்டில் எல்லாம் ‘பாம்’ போட்டிருக்கிறார்களே!” என்று சொல்லவே எனக்கு ஒன்றும் புரியவில்லை. “என்னவோ கனவு கண்டு உளறிவிட்டேன்” என்று அவர் கூறிய பின்தான் விஷயம் தெரிந்தது.

அவர் கண்டது கனவே என்றாலும், அவர் கூறியதில் உண்மை இல்லாமலில்லை. மேற்படி ரோட்டில் உள்ள குழிகள் ‘பாம்’ விழுந்தால் ஏற்படக்கூடிய குழிகளைப்போலவே இருக்கின்றன! எனவே, நெல்லை நாகர் கோவில் எல்லையில் பிரயாணம் செய்யும் தொல்லைக்கு எல்லையே இல்லை!

ஆற்றிலுள்ள மணலை அளந்துவிடலாம். ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களையும் எண்ணிவிடலாம்! ஆனால், நெல்லை - நாகர் கோவில் ரோட்டிலுள்ள படு குழிகளைக் கணக்கிடுவது முடியாத காரியம்!

திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள மற்ற எல்லா ‘மெயின்’ ரோடுகளும் முதல் தரமானவையாக இருக்கின்றன. அப்படியிருக்க, தமிழர்கள் அதிகமாகப் பிரயாணம் செய்யும் திருநெல்வேலி - நாகர்கோவில் ரோடு மாத்திரம் அவ்வளவு மோசமாக இருப்பதற்குக் காரணம் என்ன? ஒருவேளை தமிழ் மக்களின் நெஞ்சுரத்தைக் குலைப்பதற்காக அந்த ரோட்டைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சென்ற பல வருஷங்களாகியும் சீர்திருத்தவில்லை போலும்.

அவ்வாறு என் மனதில் எழுந்த சிந்தனையை அந்த பஸ் டிரைவரின் கூற்று உறுதிப் படுத்தியது.

“சமஸ்தானத்திலுள்ள மோட்டார் டிரைவர்களுக்கு மேல் அதிகாரிகள் தண்டனை விதிக்க விரும்பினால், அவர்களை நெல்லை-நாகர்கோவில் ரோட்டில் செல்லும் பஸ்களுக்கு டிரைவர்களாக நியமிப்பது வழக்கம்” என்று டிரைவர் பரிதாபகரமான குரலில் தம்முடைய துர்ப்பாக்கிய நிலைமையை வெளிப்படுத்தினார்!



திருவாங்கூர் சமஸ்தான அரசியல் நிர்ணய சபைத் தேர்தலில் தமிழ் நாடு காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு வோட் கொடுத்த பாவத்துக்காக மலையாளிகளால் அடிக்கப்பட்டுக் காயமடைந்தவர்கள். மீங்கரை என்ற இடத்தில் கல்லடி பட்டு மூன்று பற்களை இழந்த பெண்மணியைப் படத்தில் காண்க!

அது எப்படியாயினும், ஒன்று மாத்திரம் நிச்சயம்தான். அதாவது சென்ற பல வருஷங்களாக அந்த ரோட்டில் பிரயாணம் செய்தும்கூட அங்குள்ள தமிழ் மகா ஜனங்களின் நெஞ்சுரம் குலையவில்லை என்றால், பின்னர் அதைக் குலைக்கும் சக்தி இவ்வுலகிலேயே வேறு யாருக்கும் இருக்க முடியாது!

* * *

நான் இவ்வாறு எண்ணிக்கொண்டே செல்லுகையில், பஸ்ஸில் இருந்த ஒருவர் திடீரென்று 'கஷ்டம்', 'கஷ்டம்' என்று அலறினார். நான் திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தேன். பஸ்ஸூம் 'டக்' என்று நின்றுவிட்டது.

அப்போது இரவு மணி ஒன்பதரை. எங்கும் மை இருட்டாக இருந்தது. பஸ்ஸுக்கு அப்பால் மூன்று அல்லது நான்கு பேர் நின்றுகொண்டிருந்தனர். ஒருவருடைய கையில் மாத்திரம் ஒரு சிறிய லாந்தர் மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தது. அந்த அந்தகாரத்தில் மேற்படி விளக்கு இருப்பதும் இராததும் ஒன்றுதான்!

அவர்களில் ஒருவர் அதிகார தோரணையில், "உம், இறங்குங்கள்! பெட்டிகளையெல்லாம் இறக்குங்கள்!" என்றார்.

"ஆஹாஹா! கொள்ளைக்காரர்களிடம் அல்லவா அகப்பட்டுக் கொண்டோம்" என்று என் மனம் அடித்துக்கொண்டது. எனினும் ஒன்றிரண்டு நிமிஷங்களில் அவர்கள் கொள்ளைக்காரர்கள் அல்லவென்பதும், சுங்கச் சாவடி (கஸ்டம்ஸ் ஆபீஸ்) சிப்பந்திகள் என்பதும் தெரிந்துவிடவே, தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போகட்டும் என்று ஆறுதல் அடைந்தேன்.

அந்த இருட்டிலும் மேற்படி சிப்பந்திகள் தங்கள் கடமையி லிருந்து வழுவாமல், பிரயாணிகளின் பெட்டிகள், படுக்கைகள் எல்லாவற்றையும் அலசிப் பரிசோதனை செய்தார்கள்!

'கஸ்டம்ஸ்' என்ற வார்த்தையையே மேற்படி பிரயாணி தவறுதலாக 'கஷ்டம்' என்று சொன்னார் என்றாலும், அந்த நள்ளிரவில் சுங்க அதிகாரிகள் சோதனை செய்தது பிரயாணிகளுக்கு உண்மையில் பெரும் கஷ்டமாகவே இருந்தது.

* * *

திருவாங்கூரில் இரண்டு வருஷங்களுக்கு முன் கடுகுபோல் ஆரம்பமான தமிழர்களின் இயக்கம் இன்று மலைபோல் பெரிதாகி விட்டதல்லவா? அந்த இயக்கத்தைப் பற்றிய முழு விவரங்களையும் அறிந்து கொள்ள வேண்டுமாயின், முதலில் திருவாங்கூர் சமஸ்தான நிலப் பரப்பையும் அங்கு தமிழர் வசிக்கும் பகுதிகளையும் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

திருவாங்கூர் சமஸ்தானத்தின் மொத்த விஸ்தீரணம் சுமார் எண்ணாயிரம் சதுர மைல்கள். ஜனத்தொகை அறுபது லட்சத்துக்குமேல் ஆகும். அவர்களில் பத்து லட்சம் பேர்கள் தமிழர்களாவர். அவர்கள் வசிக்கும் இரண்டாயிரம் சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசங்கள், மேற்படி சமஸ்தானத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிதறிக் கிடக்கவில்லை. சேர்ந்தாற்போல் திருநெல்வேலி ஜில்லாவை யடுத்து ஒரு பகுதியும், ராமநாதபுரம், மதுரை, கோவை ஜில்லாக்களை யடுத்து ஒரு பகுதியுமாக இருக்கின்றன.

அதாவது, அந்த இரண்டு பகுதிகளையும் தமிழகத்துடன் இணைப்பது வெகு சுலபமாக இருக்கும்படி அவை அமைந்திருக்கின்றன.

* * *

எவ்வளவோ காலமாகத் திருவாங்கூர் சமஸ்தானத்தில் இருந்து வந்துள்ள தமிழ் மக்கள், இப்போது மாத்திரம் தங்களுடைய பிரதேசங்கள் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்று கூறுவானேன்?

அவர்கள் அவ்விதம் கோருவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் முக்கியமானவற்றை மாத்திரம் கீழே குறிப்பிடுகிறேன்:

1. விளவங்கோடு தாலூகாவிலுள்ள ஜனங்களில் எண்பது சதவிகிதத்திற்கு மேற்பட்டவர்கள் தமிழர்களே. ஆனால் அங்கு ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடம்கூட இல்லை! கல்குளம் முதலிய தாலூக்காக்களிலும் சற்றேறக்குறைய தொண்ணூறு சதவிகிதமுள்ள ஜனங்கள் தமிழர்களே. அப்படியிருந்தும் மேற்படி தாலூகாக்களிலுள்ள பெரும்பாலான சர்க்கார் பள்ளிக்கூடங்களும் மலையாள பாஷைப் பள்ளிக்கூடங்களாகவே இருக்கின்றன. தமிழ்ப் பாஷையிலும் தமிழர் கலாசார விஷயங்களிலும் சமஸ்தான சர்க்காருக்குக் கொஞ்சமும் சிரத்தை யில்லை என்பதற்கு வேறு என்ன உதாரணம் வேண்டும்? அந்த சர்க்காரின் கீழ் தமிழர்கள் அபிவிருத்தியும் க்ஷேமமும் அடைவது எங்ஙனம் சாத்தியமாகும்?

2. மலையாள பாஷை பேசப்படும் பிரதேசங்களையெல்லாம் ஒன்றுபடுத்தி ஐக்கிய கேரள மாகாணத்தைச் சிருஷ்டிக்க வேண்டுமென்று கேரள மாகாண காங்கிரஸ், கொச்சி பிரஜா மண்டலம், திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் இவை முயற்சிக்கும் போது, தமிழ் பாஷை பேசப்படும் பிரதேசங்கள் தமிழ் மாகாணத்துடன் ஐக்கியமாக வேண்டும் என்று கூறுவதில் தவறென்ன?

3. பாஷாவாரியாக மாகாணங்களைப் பிரிக்க வேண்டும் என்ற கொள்கையை அகில இந்திய காங்கிரஸ் பல ஆண்டுகளுக்கு முன்பே ஒப்புக் கொண்டிருக்கிறது. எனவே, பத்து லட்சம் தமிழர்கள் வசிக்கும் பிரதேசத்தைத் தமிழகத்துடன் சேர்ப்பது தான் நீதியாகும். ஆனால், தமிழர்களுக்கு அவ்வாறு நீதி வழங்க மறுப்பதுடன், சமீபத்தில் அதிகாரத்தை ஏற்றுக் கொண்ட திருவாங்கூர் சமஸ்தான காங்கிரஸ் சர்க்கார், திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரசை நசுக்குவதற்காகக் கடுமையான அடக்குமுறைகளைக் கையாள முற்பட்டிருப்பதேன்?

4. சமீபத்தில் திருவாங்கூர் அரசியல் நிர்ணய சபைக்கு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் அல்லவா? அந்தச் சமஸ்தானத்திலுள்ள தமிழர் பகுதிகள் தமிழகத்துடன் ஐக்கியமாக வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டே திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் அபேட்சகர்களை நிறுத்தியது. சமஸ்தான காங்கிரஸ் அதை எதிர்த்து அபேட்சகர்களை நிறுத்தியது. தேர்தலின் முடிவைத் தங்கள் விருப்பப்படி மாற்ற சமஸ்தான அதிகாரிகள் எவ்வளவோ முயன்றனர். தமிழ் நாடு காங்கிரஸ் ஊழியர்களுக்காக வோட்டுக் கொடுக்கச் சென்ற நிரபராதிகளான வயோதிகர்களும் பெண்களுங்கூடப் போலீசாரின் தடியடிக்கும் துப்பாக்கிப் பிரயோகத்துக்கும் இலக்காயினர். தமிழர் பகுதி முழுவதும் அடக்குமுறை கோர தாண்டவமாடியது. அப்படியெல்லாம் இருந்தும், தமிழ் நாடு காங்கிரஸ் நிறுத்திய பதினேழு பேர்களில் பதினாறு பேர்கள் அமோகமாக வெற்றிபெற்றனர். அவர்களை எதிர்த்த சமஸ்தான காங்கிரஸ் அபேட்சகர்களில் ஐவரின் ஜாமீன் தொகைகள் அரோஹரா வாயின! எதிர்த்தவர்கள் சுமார் பத்தில் ஒரு மடங்கு வோட்டுகளே பெற முடிந்ததென்றால், தமிழகத்துடன் ஐக்கியமாக வேண்டும் என்பதில் திருவாங்கூர்த் தமிழர்கள் ஏகோபித்து எவ்வளவு தீவிரமாக இருந்து வருகிறார்கள் என்பது கண்ணளவும் சந்தேகத்துக்கு இடமின்றித் தெரியவில்லையா?

ஜோஸியருக்குத் தெரியுமா?



“ஜோஸ்யரய்யா! இந்த ஸ்டுடியோவில் இந்த மாதச் சம்பளம் எப்போது கொடுப்பாங்கன்னு என் ரேகையைப் பார்த்துச் சொல்லுங்க; நான் சம்பளம் வாங்கியவுடன் உங்களுக்குப் பணம் தருகிறேன்!”

* * *

ஆனால், தமிழர்கள் கூறும் ஆட்சேபிக்க முடியாத மேற்படி காரணங்களுக்கு மலையாளிகள் கூறும் பதில் மிகவும் வேடிக்கையானது.

“சென்னபட்டணமு மனதே” என்று நமது ஆந்திர சகோதரர்கள் கூறுவதைப் போல, மலையாளிகள் “நாஞ்சினாடு ஒக்க ஞங்ஙளுடெதாண” என்கிறார்கள்!

திருவாங்கூரில் தமிழர் வசிக்கும் பகுதிகளே நாஞ்சினாடு என வழங்கப்படுகின்றன. நாஞ்சினாடு முழுவதும் தங்களுடையது என்று கூறுவதற்கு மலையாளிகள் எடுத்துக் காட்டும் ஆதாரம் இன்னும் அதிக வேடிக்கையானது.

மலையாள பாஷைப் பிரதேசங்களுக்கு பரசுராம க்ஷேத்திரம் என்ற பெயர் வழங்குவது உண்டு. “கோகர்ண மிருந்நு பரசுராமர் மழு வெடுத்து எறிஞ்ஞு. அது எவிடெ வந்நு வீழுந்நு? கன்னியா குமரியில் வந்நு வீழுந்நு. சமுத்திரம் அங்ஙனெ மாறி. அது கொண்ட அத்தனெ ஸ்தலங்களும் ஞங்ங

ளுடெ பரசுராம க்ஷேத்திரமாண" என்று அவர்கள் காஞ்சி காட்டையும் சேர்த்து உரிமை கொண்டாடுகிறார்கள்!

* * *

திருவாங்கூர்த் தமிழ்நாடு காங்கிரசைப் போல, இரண்டே வருஷ காலத்துக்குள் ஜனங்களிடை இவ்வளவு மகத்தான செல்வாக்கும் லட்சியத்தில் வெற்றியும் பெற்றுள்ள ஸ்தாபனம் வேறு எதுவுமே இல்லையென்று கூறுவது மிகையாகாது. அதன் லட்சியம் பரிபூரண வெற்றி யடைந்து திருவாங்கூரிலுள்ள தமிழர் பகுதிகள் தமிழகத்துடன் சேர இன்னும் ஒரே ஒரு படிதான் பாக்கி யிருக்கிறது! தி. த. கா. காங்கிரஸ் சென்ற சில மாதங்களில் பல்வேறு கஷ்ட நஷ்டங்களையும் சகித்து, பல்வேறு முட்டுக் கட்டைகளையும் தகர்த்து, அஞ்சா நெஞ்சத்துடனும் உறுதியுடனும் முன்னேறி வந்திருப்பது சரித்திரத்திலே புகழிடம் பெறக் கூடிய ஒரு விஷயம் என்பதில் சந்தேகமில்லை.

மேற்படி காங்கிரஸ் ஆரம்பமானபோது அதில் ஐம்பது அங்கத்தினர்களே இருந்தார்கள். இப்போதோ அதில் பதினாயிரக் கணக்கான அங்கத்தினர்கள் இருப்பதுடன், சற்றேறக்குறைய பத்து லட்சம் தமிழர்களின் ஆதரவும் அதற்குக் கிடைத்திருக்கிறது. தமிழர் பகுதிகளைச் சேர்ந்த பல இடங்களிலும் அதன் கிளை ஸ்தாபனங்களும் அமைக்கப் பட்டிருக்கின்றன. மேற்படி காங்கிரஸ் அங்கத்தினர்களில் சிலர் ஏற்கெனவே சமஸ்தான காங்கிரசில் அங்கத்தினர்களாக இருந்து தேசிய இயக்கங்களில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

சமஸ்தான காங்கிரசினால் திருவாங்கூரிலுள்ள தமிழர்களுக்குச் சிறிதளவும் நன்மை உண்டாக இடமில்லை என்பது நிச்சயமாகத் தெரிந்த பின்னர்தான், அவர்கள் ஒன்று சேர்ந்து தமிழர்களின் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாப்பதற்காகத் தமிழ் நாடு காங்கிரசை நிறுவினர்.

சமஸ்தான காங்கிரஸுக்காகத் தொண்டு புரிந்து, மேற்படி காங்கிரஸ் வெற்றி பெறுவதற்கு உதவியாக இருந்த தமிழர்கள், இன்று சமஸ்தான காங்கிரஸ் சர்க்காரின் அடக்குமுறைக்கு இலக்காகிச் சொல்லொணாத் துயரத்தை அனுபவிக்க நேர்ந்திருப்பது காலத்தின் கோலமல்லவா? எந்தச் சுயநிர்ணய உரிமைக்காகச் சமஸ்தான காங்கிரஸ் போராடியதோ, அதே உரிமைக்காகத்தான் இப்போது தி. த. கா. காங்கிரஸும் போராடுகிறது.

மேற்படி காங்கிரஸ் நிர்வாகிகளில் பலரும் சட்டப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றுப் பிரபல வக்கீல்களாக இருந்து வருகின்றனர்.

"எங்களுடைய உயிருக்கு எந்த நிமிஷத்திலும் ஆபத்து நேரலாம்" என்று பிரபலஸ்தர்களும் சட்ட நிபுணர்களுமான அவர்கள் என்னிடம் கூறியபோது, எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அந்தப் பிரமுகர்களின் கதியே இவ்விதமெனில், மேற்படி சமஸ்தானத்தைச் சேர்ந்த கிராமங்களில் வசிக்கும் லட்சக் கணக்கில் உள்ள பரம ஏழைகளான தமிழர்களின் கதி என்ன என்பதை என்னால் கற்பனை செய்து கொள்ளவும் முடியவில்லை.

சமஸ்தான சர்க்காரின் அட்டூழியங்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் தி. த. கா. காங்கிரஸ் நிர்வாகிகளில் சிலர் கண்ணீர் வடித்தனர். எனவே மேற்படி அக்கிரமங்களுக்கு அவர்களுடைய கண்ணீரைக் காட்டிலும் உண்மையான சாட்சி வேறென்ன வேண்டும்? (தொடரும்)

வரப் பெற்றோம்

கவிமணியின் திருவுருவம் — சென்ற ஏப்ரல் நாலாந் தேதி கல்கி அட்டையில் வெளியான கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் திருவுருவப் படம் 15" × 10½" அளவில் "கவிமணி நிலையம், பட்டாரியர் புதுத் தெரு, கோட்டாறு, நாகர்கோவில்" என்ற விலாசத்தில் கிடைக்கும். விலை ரூ. 1-0-0. தபால் செலவு தனி.

★

சர்வதாரி வருஷத்திய வாக்ய கணித பஞ்சாங்கம் — வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், சென்னை 14; விலை: அணா 0—6—0.

★

குமரன் பஞ்சாங்கம் — வெளியிட்டோர்: குமரன் பிரஸ், காஞ்சீபுரம்; விலை: அணா 0—5—0.

"கல்கி"
மதுரை கிளை ஆபீஸ்

மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களிலுள்ள கல்கி அபிமானிகள் கல்கி ஏஜண்டுகளின் சௌகரியத்திற்காக கல்கி காரியாலயத்தின் கிளை ஆபீஸ் மதுரையில் (8, வடக்கு வெளி வீதி — டி. வி. எஸ். ஆபீஸ் எதிரே) ஸ்தாபித்திருக்கிறோம். தற்சமயம் மதுரை கிளை காரியாலயத்தை எங்களது ஏஜன்ஸி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ எஸ். கோபாலகிருஷ்ணன் கவனித்து வருவார். இந்த மாதம் 11-ம் தேதி கல்கி இதழிலிருந்து மதுரையில் கல்கி விநியோகத்தை மேற்படி மதுரை கிளை ஆபீஸ் கவனித்து வரும். ஆகவே மதுரையிலுள்ள கல்கி நேயர்களும் சப் ஏஜண்டுகளும் தங்கள் பிரதிகளை வாரா வாரம் மேற்படி கல்கி கிளை ஆபீஸிலிருந்து வாங்கிக் கொள்ள வேண்டுகிறேன். இதுவரை மதுரையில் கல்கி ஏஜண்டாயிருந்த ஸ்ரீ ஏ. ஷண்முக சுந்தரம் பிள்ளை அவர்களின் கல்கி ஏஜன்ஸி இந்த மாதம் 9-ம் தேதியுடன் ரத்தாகி விட்டது.

சதாசிவம்
மானேஜர், கல்கி, சென்னை



தண்டனை கிடைத்தது!

தாபன்

வெள்ளையம்மாள்தான் அந்தப் பள்ளிக்கூடத்துக்கு முன்னால் வெகு காலமாக—ஏன், பரம்பரை பரம்பரையாகவே—வெள்ளரிப் பிஞ்சு விற்று வருபவள். மணி யடித்தவுடன் திமுதிமு வென்று பள்ளிக் கூடத்திலிருந்து வெளியே வரும் சிறுவர்கள் அனைவரும் அவளைச் சூழ்ந்து கொள் வார்கள். ஆளுக்குக் காலணா கொடுத்து ஒவ்வொரு வெள்ளரிப் பிஞ்சை வாங்கிக் கடித்துக் கொண்டே வீட்டுக்குப் போய் விடுவார்கள். வெகு சீக்கிரம் அவள் கூடை காலியாகிவிடும். கை நிறையச் சில்லறை யும் சேரும்.

ஒரு நாள் அந்த மரத்தடியில் சோடா வண்டியைக் கொண்டு வந்து நிறுத்தினான் செல்லமுத்து. அப்போது பள்ளிக்கூடம் விடும் சமயம். பையன்கள் திமுதிமுவென்று வெளியே வந்தார்கள். காலணா ஒரு சோடா என்றதும், அவர்கள் அனைவரும் ஆளுக்கொரு சோடா வாங்கிக் குடித்து விட்டுப் போனார்கள். அன்று வெள்ளரிப் பிஞ்சுகளை அவர்கள் ஏறிட்டும் பார்க்க வில்லை.

இதனால் செல்லமுத்துக்கு அளவு கடந்த சந்தோஷம். வெள்ளையம்மாளுக்கோ அளவு கடந்த துக்கம். கூடை நிறைய வெள்ளரிப் பிஞ்சு அப்படியே இருந்து விட்டது. விடிந்தால் அத்தனையும் வாடிப் போகும். என்ன செய்வாள்? மன வேதனை சகியாமல் தன் பாட்டுக்கு ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டே கூடையைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டு வீட்டுக்குப் புறப் பட்டாள். 'நாசமாய்ப் போக!' 'கட்டை யிலே போக!' 'பாம்பு பிடுங்க!' 'கொள்ளை யிலே போக!' என்று நாமாவளி பாடிக் கொண்டே அவள் நகருவதைக் கவனித்த செல்லமுத்து, "என்ன ஆத்தா! ஏதோ திட்டுறியே? யாரைப் பார்த்து?" என்று கேட்டான்.

அவளுக்குக் கோபம் பொங்கி வந்தது. "என்னைப் பார்த்தால் உனக்கு ஆத்தா ளாகவா தோணுது? நாக்கை அடக்கிப் பேசு! — தெரியுதா?" என்று எரிந்து விழுந்தாள்.

"பல்லை உடைத்துப் போடுவேன்!"

"எலும்பை நொறுக்கிப் போடுவேன்!"

"கொன்னுப் போடுவேன், கொன்னு!"

"குழியை வெட்டிப் புதைச்சுப் போடு வேன், புதைச்சு!"

"சீ, குரங்கு! வாயைப் பாரு, வாயை!"

"சீ, மூதேவி! மூஞ்சைப் பாரு, மூஞ்சை!"

"நாளைக்கு வா, பார்த்துக்கிறேன்!"

"நீ வா, பார்த்துக்கிறேன்!"

"வெவ்...வெவ்...வெவ்...வெ!"

"வவ்...வவ்...வவ்...வவ்...!"

இதற்கு மேல் இருவரும் ஒருவரை நோக்கி ஒருவர் மூஞ்சை வலித்தும் வக்கரித்தும் சுளித்தும் விருசு பாஷையில் சண்டை யிட்டுவிட்டு, ஒருவர் வட திசையும் மற்றொருவர் தென் திசையுமாக ஆங்கார ஆக்ரோஷத்துடன் சென்றார்கள்.

★

மறுநாள் விடிந்தும் விடியாததுமாய்ச் செல்லமுத்து சோடா வண்டியோடு அந்த இடத்தில் வந்து நின்று கொண்டான். சிறிது நேரத்தில் வெள்ளையம்மாளும் கூடை யுடன் அவனுக்கு எதிரே வந்து உட்கார்ந்து கொண்டாள். வெகு நேரம் கழித்துத்தான் பள்ளிக்கூட மணி அடித்தது. பையன்கள்

வெளியே வந்தார்கள். வெள்ளையம்மாள் சும்மாயிருந்து தொலையக் கூடாதா? சோடா வாங்கப்போன பையன்களைப் பார்த்து, "ஐயையோ! அது பச்சைத் தண்ணீர்! அதுவும் சாக்கடைத் தண்ணீர்!" என்று கத்தினாள். வாங்கின பையன்கள் சோடாவைத் திருப்பிக் கொடுத்துவிட்டுத் திரும்பினார்கள்.

இதைப் பார்த்தபின் செல்லமுத்து சும்மா இருப்பானா? "ஐயையோ! அவளவும் அழுகல் வெள்ளரி, புழு விழுந்தவை!" என்று வாய் ஓயாமல் கத்திக் கொண்டேயிருந்தான்.

இருவரும் இப்படிச் சத்தம் போட்டுக் கொண்டிருப்பதைப் பள்ளிக்கூடத்துப் பையன்கள் எல்லாரும் வேடிக்கை பார்த்துவிட்டுச் சென்றுவிட்டார்களே தவிர, ஒருவரும் ஒன்றும் வாங்கவில்லை. சோடா பாட்டில்களும் அப்படியே இருந்தன; வெள்ளரிப் பிஞ்சுகளும் அப்படியே இருந்துவிட்டன. அன்று பொழுது சாயும் வரை இருவருக்கும் வியாபாரமே ஆகவில்லை.

நேரமாக ஆகச் செல்லமுத்துக்குக் கோபம் அதிகரித்துக் கொண்டே போயிற்று. 'சோடா விற்காவிட்டால் தன் முதலாளி என்ன கோபித்துக் கொள்வாரோ? என்ன தண்டனை விதிப்பாரோ?' என்றெல்லாம் பயம் உண்டாகிவிட்டது. ஏனெனில் அவன் தள்ளிக் கொண்டு வரும் வண்டியும் சோடாவும் அவனுடையன அல்ல; கம்பெனிக்காரருடையது. ஒருநாள் பூராவும் வண்டியைத் தள்ளிக்கொண்டு ஊர் முழுதும் திரிந்து விற்றுக் கொடுத்தால், அவனுக்கு முழுசாக ஒரு ரூபாய் கிடைக்கும்! பள்ளிக்கூடத்துப் பக்கம் வந்த நாள் முதல் செல்லமுத்துக்கு நல்ல விற்பனை! இன்று இந்தச் சின்னஞ்சிறு பெண் பிள்ளையாலே அந்த விற்பனையில் மண் விழுந்துவிட்டதே!

இதை நினைக்கும்போது செல்லமுத்துக்குக் கோபமும் அவமானமும் எல்லை மீறிவிட்டன. போதாக்குறைக்கு அவன் சஞ்சலப் படுவதைப் பார்த்து மனதுக்குள்ளேயே சிரித்துக் கொண்டிருந்தாள் வெள்ளையம்மாள்.

"எனக்கென்ன? விற்றாலும் ராஜாத்தி, விற்காவிட்டாலும் ராஜாத்தி! ஒருத்தரைப் போலக் கூலிக்கு வேலை செய்தாலல்லவா நான் பயப்பட வேண்டும்?" என்று அவள் தனக்குத்தானே சொல்லிக்கொண்டு கடையைக் கட்டினாள்.

ஆத்திரம் தாங்கமாட்டாமல் செல்லமுத்து ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து சென்று, அவள் கடையிலிருந்த வெள்ளரிப் பிஞ்சுகளையெல்லாம் கீழே தட்டிவிட்டான். அவை வீதி முழுதும் அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சிதறி விழுந்தன.

வெள்ளையம்மாளுக்கு இன்னது செய்வதென்று புலப்படவில்லை. பரபரப்புடன் சிதறிய பிஞ்சுகளைச் சேகரித்துக் கொண்டே, மனக் கொதிப்புடன் செல்லமுத்தை வாயில் வந்தபடி திட்டினாள். உலகத்தில் எத்தனை கெட்ட வார்த்தைகள் உண்டோ, அத்தனை கெட்ட வார்த்தைகளையும் உபயோகித்தாள். மனிதனாய்ப் பிறந்தவனுக்கு என்னென்ன விதநோய்கள், சாவுகள் ஏற்படுமோ அனைத்தையும் அவன் மீது ஏவிச் சபித்தாள். தெருவிலே போய்க் கொண்டிருந்த சிறுவர், பெரியவர், பெண்கள் அனைவரும் அவர்களைச் சுற்றிக் கூட்டமாய்க் கூடிவிட்டனர். அவர்கள் அனைவரும் வெள்ளையம்மாளுக்கும் செல்லமுத்துக்கும் நடந்த சொல் யுத்தத்தைப் பார்த்த வண்ணம், அவர்களுக்குள் நடக்கப்போகும் மல்யுத்தத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர்.



எல்லோரும்தான் வேடிக்கை பார்த்தார்கள் என்றால் அந்த வழியே வந்த போலீஸ்காரனுமா

வேடிக்கை பார்ப்பான்? கூட்டத்தை விலக்கிக்கொண்டு அவன் வெள்ளையம்மாவின் அருகில் வந்தான். "ஏ, மூதேவி! ஏன் வையறே?" என்று அதட்டினான். போலீஸ்காரனைக் கண்டதும் வெள்ளையம்மாள் அவனருகில் ஓடி வந்து, "எசமான்! நீங்கதான் காப்பாத்தணும்! அவனே விடாதீங்க, அவன்தான் என் கெண்டைப் பிஞ்சுகளை யெல்லாம் கொட்டிவிட்ட பாவிப் பயல்!" என்று விக்கலும் விம்மலுமாகச் சொன்னாள்.

அதுவரை வீர நீரத்துடன் சிங்கம் போல் நின்ற செல்லமுத்து, போலீஸ்காரனைக் கண்டதும் கண்டெலிபோல் ஒடுங்கி நடுங்கிப் போனான். போலீஸ்காரனின் இரும்புக் கரங்கள் அவனுடைய தோள்களைப் பலமாகப் பற்றின. முதுகிலே இரண்டு 'ஷொட்டு'க்கள் விழுந்த பிறகு தான் செல்லமுத்துக்குத் தன் நினைவு வந்தது.

"ஊம்......நட! கச்சேரிக்கு வாடா, படவாப் பயலே!" என்று கையிலிருந்த பிரம்பை ஓங்குவதற்குள், "இதோ வந்து விட்டேன், எசமான்! அடிக்காதீங்க!" என்று கெஞ்சிக்கொண்டு முன்னே நடந்தான் செல்லமுத்து.

"ஏ, ஆத்தா! நீ ஓடிப் போயிடாதே; நீயும் நட!" என்றான் போலீஸ்காரன், வெள்ளையம்மாளைப் பார்த்து. அவளும் எப்படியாவது அன்றோடு சோடாக்காரனை விரட்டி விடவேண்டும் என்ற தீர்மானத்தோடு விரைவாக நடந்தாள்.

பாவம், செல்லமுத்து பயந்து நடுநடுங்கிக் கொண்டே கச்சேரியை அடைந்தான்.

"உன் பெயர் என்ன?"

"செல்லமுத்து."

"ஊர்?"

"அரசடிப்பட்டி."

"ஜாதி?"

"முதலியார்."

"தகப்பனார் பெயர்?"

"வேலாண்டி முதலியார்."

"அவர் இருக்கிறாரா?"

"இல்லை; சங்கூனி விருந்த அவர் சண்டையிலே செத்துப் போய்விட்டார்!"

ஒரு சேவகன் மேற்படி கேள்விகளைக் கேட்டு அவன் பதிலைக் குறித்துக் கொண்டிருந்தபோது, சிறிது தூரத்தில் நின்று கேட்டுக் கொண்டிருந்த வெள்ளையம்மாளுக்கு அதிசயமும் ஆச்சரியமுமாயிருந்தது. அரசடிப்பட்டி வேலாண்டி முதலியார் என்ற வார்த்தைகளை அவளால் நம்பவே முடியவில்லை.

ஏனென்றால் வெள்ளையம்மாளுக்கும் ஆதியில் சொந்த ஊராயிருந்தது அரசடிப் பட்டிதான். அவள் தாய் மாமன் ஒருவன் அந்த ஊரில் இருந்தான். அவன் பெயர் வேலாண்டி முதலியார். அவர்களெல்லாம் பர்மாவுக்குப் போயிருந்தார்கள் என்பதும் வெள்ளையம்மாளுக்குத் தெரியும். ஆகவே அவன் அவ்வாறு சொன்னதைக் கேட்டதும், "இவன் நம்ம மாமா மகனா!......அப்பொழுது கன்னங் கரேலென்று ஒடிசலாய் வளர்ந்திருந்தானே, அவனா இந்தச் செல்லமுத்து?" என்று அவள் எண்ணமிட்டாள்.

உணர்ச்சி வெள்ளம்போல் பெருக்கெடுத்தது வெள்ளையம்மாளின் இருதயத்தில். "ஏ, அத்தான்!......செல்லமுத்து அத்தானா, நீங்க?" என்று சத்தமிட்டாள்.

இப்படி கூப்பாடு போட்டால் யார்தான் பார்த்துக் கொண்டிருப்பார்கள்? "ஏ,

---

அவளுக்குத் தெரியாது!



மானேஜர் (கோபத்துடன்):— நாலு வரியை 'டைப்' பண்ணிக்கொண்டு வருவதற்கு இவ்வளவு நேரமா? என்னை என்ன, முட்டாள் என்று நினைத்துக்கொண்டாய்?

டைப்பிஸ்ட்:—எனக்கு எப்படித் தெரியும்? நான் இன்றுதானே வேலைக்கு வந்தேன்!

மூதேவி! சத்தம் போடாதே!" என்று ரூல் தடியால் அவன் தலையில் ஓங்கி ஒரு போடு போட்டான் ஒருவன்.

நல்ல வேளை! அந்த நிமிஷத்திலேயே கச்சேரியைவிட்டு ஓட்டம் பிடித்தாள் வெள்ளையம்மாள்.

★

வீட்டை யடைந்ததும் வெள்ளையம்மாள் அவள் தகப்பனிடம் நடந்ததை யெல்லாம் விவரமாகச் சொல்லி, "நம்ப அத்தான் என்று தெரியாமல் அநியாயமாக அவரைக் கச்சேரியிலே பிடித்துக் கொடுத்து விட்டேனே!" என்று அங்கலாய்த்தாள்.

வெள்ளை யம்மாளின் தந்தை தொண்டு கிழவன். அவளைத் தவிர வேறு கதி யில்லாதவன். பஞ்சத்தின் கொடுமையால் எத்தனையோ வருஷங்களுக்கு முன்பு ஊரை விட்டு வெளியேறி வந்த அவன், அதுவரை கூலி வேலை செய்து உயிர் வாழ்ந்து வந்தான். அதோடு தன் ஒரே மகளையும் செல்வமாக வளர்த்து வந்தான். சென்ற சில வாரங்களாக அவனுக்கு உடல் நலம் சரியா யில்லை. இருமலும் புகைச்சலுமாக வீட்டினுள்ளேயே படுத்துவிட்டான். தன் உயிருக்குயிரான மைத்துனன் மகன் செல்லமுத்தைப் பற்றி அறிந்தவுடன் இன்பமும் துன்பமும் கலந்து கிழவனின் கண்களைக் கலங்கச் செய்துவிட்டன. "வா, அம்மா! இனிமேல் நாம் சும்மா இருக்கக் கூடாது. கச்சேரிக்குப் போய் அவனைப் பார்த்துவிட்டு வருவோம்" என்று மகளுடன் கச்சேரியை நோக்கிக் கிளம்பினான்.

கச்சேரிக்கு அருகில் சென்றதும் எதிரே செல்லமுத்து வருவதை இருவரும் கண்டார்கள். உடனே வெள்ளையம்மாள் உற்சாகத்தினால் துள்ளிக் குதித்துக் கொண்டே, "அப்பா! இவர்தான் நம்ப அத்தான்!" என்று சுட்டிக் காட்டினாள். மட்டற்ற மகிழ்ச்சியுடன், "ஏ, ஐயா!" என்று அழைத்தவாறே செல்லமுத்தை மார்போடு அணைத்துக் கொண்டான் கிழவன். வற்றி வரண்டிருந்த அவன் கண்களிலிருந்து அருவிபோல் கண்ணீர் பெருகியது.

ஒன்றும் தெரியாமல் பேந்தப் பேந்த விழித்த செல்லமுத்துவிடம் விவரங்களனைத்தையும் சொல்லிக் கொண்டே, மூவரும் வீட்டை நோக்கித் திரும்பினார்கள். பர்மாவில் தனது தாய் தகப்பன், தம்பி தங்கை ஆகிய எழு பேர் ஜப்பான் குண்டுக்கு இரையாகி மடிந்ததையும், தான் மட்டும் தெய்வாதீனமாய்த் தப்பி எங்கெல்லாமோ சுற்றி யலைந்து, கடைசியில் இப்படி வந்ததையும் செல்லமுத்து சொன்னபோது, கிழவரும் வெள்ளை யம்மாளும் கலங்கிய கண்களோடும் இளகித் தவிக்கும் மனத்தோடும் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

கடைசியில், "அப்பா, செல்லமுத்து! நீதான் இனி எனக்குக் கதி! வெள்ளை யம்மாள் இனி உன்னுடையவள்!" என்று தன் மகள் கையைப் பிடித்து மருமகன் கையில் ஒப்படைத்தான் கிழவன்.

"என்னைக் கச்சேரியில் அடைத்து அவமானப் படுத்தினாயே! — இதோ பார், என்ன பாடு படுத்துகிறேனென்று?" என்று கரைகாணாக் காதலுடன் வெள்ளையம்மாளின் கரங்களைப் பற்றினான் செல்லமுத்து.

"ஐயையோ! வெட்கமாயிருக்கிறதே!" என்று அவனது இரும்புப் பிடியிலிருந்து விடுதலை பெற மாட்டாமல் திண்டாடி நின்றாள் வெள்ளை யம்மாள்.

அதுவும் இரவலா!



"சார், நான் இங்கே இறங்கப் போகிறேன்! பேப்பரை வேணுமானால் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்; என் மூக்குக் கண்ணாடியைத் தயவு செய்து கொடுத்து விடுங்களேன்!"

இந்தியன் காப்பி போர்டு

அறிவிப்பு

காப்பி விலைக் கட்டுப்பாடு பிப்ரவரி 19-ம் தேதி ரத்து செய்யப்பட்டு, பழையபடி இந்தியன் காப்பி போர்டார் ஏல விற்பனை முறையை அமுலுக்குக் கொண்டுவர ஆரம்பித்ததன் காரணமாக முதன் முதலில் அகவிலை ஏறிவிட்டது.

2. மார்க்கெட்டை ஒரு விதமாகக் கட்டுப் படுத்த சில நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டதன் பயனாக கடந்த இரண்டு வாரத்திற்குள் காப்பியின் விலை சுமார் 30 சத விதம் இறங்கி விட்டது.

3. எங்கும், ஒரே மாதிரியாகவும், காப்பி வாங்குபவர்களுக்கு ஏற்றவாறு நியாயமாகவும் விலையை இன்னும் குறைப்பதே போர்டாரின் நோக்கம்.

4. மிகவும் ஏராளமாகவே கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கும் 1948-49-ம் வருஷ அறுவடையாகும் வரை சகலரின் தேவைக்கும் போதிய காப்பி ஸ்டாக்கு போர்டார் வசம் இருக்கிறது. பிப்ரவரி மாதம் ஏற்பட்ட அநியாயமான விலை ஏற்றம் இந்திய காப்பி வர்த்தகத்தில் என்றுமே நீடிக்கும் என்ற துரெண்ணம் படைத்த சில வியாபாரிகள் பதுக்கி வைத்துக் கொண்டிருந்த ஸ்டாக்குகள் சமீபத்தில் வெளியானதும், எங்கள் ஸ்டாக்கு இன்னும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

5. குடும்பஸ்தர்களுக்கு உதவியாக இருக்கும்பொருட்டு தென்னிந்தியா முழுவதிலும் பற்பல கோவாபரேடிவ் ஸ்டோர்கள் மூலம் காப்பிக் கொட்டை கீழ்க் கண்ட விலைகளுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது :—

ப்ளாண்டேஷன் (A)	... பவுண்டு 1-க்கு	ரூ. 1 - 9 - 6
அராபிகா செர்ரி தட்டைக் கொட்டை	,,	ரூ. 1 - 7 - 0
ரோபஸ்டா செர்ரி தட்டைக் கொட்டை	,,	ரூ. 1 - 3 - 6

தற்போதைய வெளியீடுகள் செலவானதும், இனி வரும் வெளியீடுகளின் விலையில் பவுண்டு ஒன்றுக்கு இன்னமும் காலணா குறையும். இன்னும் குறைந்த விலையில் காப்பிக் கொட்டை சப்ளை செய்யக்கூடிய அளவுக்கு நிலைமை சீர்திருந்தும் வரை மேற்படி நேரடியான சப்ளை தொடர்ந்து கையாளப்படும்.

6. இதர வியாபார ஸ்தலங்களிலும் அதே பலன் கிட்டுவதற்கு மிகவும் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

7. சிறிய அளவு வறுத்து வியாபாரம் செய்பவர்களுக்கும் பெரிய ஏல விற்பனை ஸ்தலங்களிலிருந்து எட்டியிருக்கும் ஊர்களுக்கும் சாதகமாக இருக்கும்பொருட்டு ஏப்ரல் மாதத்தில் சென்னை மாகாணம்—மைசூர் சமஸ்தானம் முழுவதிலும் சிறிய அளவு வறுத்து வியாபாரம் செய்பவர்களுக்கு மாத்திரம் பிரத்தியேகமாக "உள்ளூர் காப்பி ஏல விற்பனைகள்" நடத்தப்படும்.

8. இம்மாதத்தில் நிகழும் பெரிய அளவு ஏல விற்பனைகளில் 1570 டன்கள் காப்பி விநியோகிக்கப்படும். ஏல விற்பனை சமயங்களில் அநியாயமாகவும், காப்பி போர்டாரின் நோக்கத்திற்குச் சற்றும் பொருந்தாதவாறு எந்த வியாபாரியும் விலையை உயர்த்திக் கேட்பதைத் தடுக்க சகல நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்படும். இந்தியாவெங்கும் நியாயமான விலையில் வெகு விரைவில் காப்பி விநியோகம் செய்வதையே நாங்கள் அடிப்படை நோக்கமாகக் கொண்டதுடன், காப்பி விலைக் கட்டுப்பாடு ரத்தாவதற்கு முன்னால் கொள்ளை லாபம் அடித்து வந்த "கள்ள மார்க்கெட்" முழுவதையும் அறவே ஒழித்துவிடக் கங்கணம் கட்டிக் கொண்டதாகும்.

பெங்களூர்,
6 — 4 — 1948

ஜவர் புல்
பிரதம காப்பி மார்கெடிங் ஆபீஸர்

உள்ளூர் காப்பி ஏல விற்பனைகள்

கீழ்க்கண்ட இடங்களில்

உள்ளூர் காப்பி ஏல விற்பனைகள் நடைபெறும்:—

பெங்களூர்	—	8—4—48	(பெங்களூரில் உள்ள சில்லரை வியாபாரிகளும், சிறிய அளவு வறுத்து விற்பனை செய்பவர்கள் மட்டுமே பங்கு எடுத்துக் கொள்ளலாம்.)
மைசூர்	—	12—4—48	(மைசூர், நஞ்சங்கூடு ஆகிய இடங்களிலுள்ள சில்லரை வியாபாரிகளும், சிறிய அளவு வறுத்து விற்பனை செய்பவர்கள் மட்டுமே பங்கு எடுத்துக் கொள்ளலாம்.)
மதராஸ்	—	25—4—48	(சென்னை நகரம், வட ஆற்காடு, தென் ஆற்காடு, செல்லூர், செங்கல்பட்டு, சித்தூர் ஆகிய ஜில்லாக்களிலுள்ள சில்லரை வியாபாரிகளும், சிறிய அளவு வறுத்து விற்பனை செய்பவர்கள் மட்டுமே, பங்கு எடுத்துக் கொள்ளலாம்.)
திருச்சிராப்பள்ளி	—	ஏல தேதி அங்கேயே அறிவிக்கப்படும்.	(திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம் ஆகிய ஜில்லாக்களிலுள்ள சில்லரை வியாபாரிகளும், சிறிய அளவு வறுத்து விற்பனை செய்பவர்கள் மட்டுமே பங்கு எடுத்துக் கொள்ளலாம்.)
பெஜவாடா	—	ஏல தேதி அங்கேயே அறிவிக்கப்படும்.	(கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி, விசாகப்பட்டணம், குண்டூர், கஞ்சம் ஆகிய ஜில்லாக்களிலுள்ள சில்லரை வியாபாரிகளும், சிறிய அளவு வறுத்து விற்பனை செய்பவர்கள் மட்டுமே பங்கு எடுத்துக் கொள்ளலாம்.)
பெல்லாரி	—	ஏல தேதி அங்கேயே அறிவிக்கப்படும்.	(பெல்லாரி, அனந்தப்பூர், கடப்பை, கர்னூல் ஆகிய ஜில்லாக்களிலுள்ள சில்லரை வியாபாரிகளும், சிறிய அளவு வறுத்து விற்பனை செய்பவர்கள் மட்டுமே பங்கு எடுத்துக் கொள்ளலாம்.)

ஏற்கனவே அறிவிக்கப்பட்ட "உற்பத்தி ஸ்தல ஏல விற்பனை"களைத் தவிர மேற்படி "உள்ளூர் ஏல விற்பனை"களும் நடைபெறுகின்றன.

ஏப்ரல் 14, 20, 27 தேதிகளில் முறையே மைசூர், ஹுன்சூர், சிக்மகளூர் ஆகிய இடங்களில் நடைபெறும் "உற்பத்தி ஸ்தல ஏல விற்பனை"களில் மங்களூர், தலைச்சேரி, கள்ளிக்கோட்டை, விருதுநகர் ஆகிய இடங்களிலுள்ள வியாபாரிகள் பங்கெடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

பெங்களூர்,
6—4—1948

ஐவர் புல்
பிரதம காப்பி மார்கெடிங் ஆபீஸர்



காலக்ஷேபம்

அவசியம் வருவார்!

செருப்புக் கடைக்குள் சென்ற ஒருவர், ஒரு ஜதை செருப்புகளை விலை பேசி எடுத்துக் கொண்டு, அதைக் கட்டித் தரும்படிச் சொன்னார். பிறகு அவர் குமாஸ்தாவிடம், பாதிப் பணம்தான் கையில் இருக்கிறதென்றும், மீதியை மறுநாள் தருவதாகவும் சொன்னார். குமாஸ்தாவும் 'சரி' என்று சொல்லிப் பாதிப் பணத்தை வாங்கிக் கொண்டார்.

முதலாளி:— ஏனய்யா, அவர் பாதிப் பணத்தை நாளைக்குக் கொண்டு வந்து கொடுப்பார் என்பது என்ன நிச்சயம்?

குமாஸ்தா:—கட்டாயம் நாளைக்கு வருவார். நான் ஒரு ஜதை வலது கால் செருப்பைத் தான் கட்டிக் கொடுத்தேன்!

●

என்னத்தைச் செய்ய!

ஒரு பெரிய மனிதரும் அவர் மனைவியும் ஊரைவப் போய்விட்டுத் திரும்பினார்கள்.

பெரிய மனிதர்: சாவி உன்னிடம்தானே இருக்கிறது? வாசற் கதவைத் திற!

மனைவி:—அடடா! வீட்டுச் சாவிக் கொத்தைக் காரில் அல்லவா வைத்துவிட்டேன்!

பெரிய மனிதர்:—சரிதான்; நம்ம காரிலே தானே வைத்தாய்? கார்தான் ஷெட்டில் இருக்கிறதே. போய் எடுத்துக்கொண்டு வாயேன்!

மனைவி:—ஐயோ! ஷெட்டின் சாவி வீட்டுக்குள்ளே யல்லவா இருக்கிறது!

●

நல்ல பந்தயம்!

அவர் தம்முடைய பிள்ளைகள் யுத்த விளையாட்டு விளையாடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர்:—ராமு, நீ உன் கட்சிப் பையன்களைக் கொண்டு எதிர்க் கட்சிப் பையன்களைத் தோற்கடித்து அவர்களுடைய கோட்டையைப் பிடித்துக் கொள், பார்க்கலாம். நீ ஜயித்தால் உனக்கு ஒரு ரூபாய் தருகிறேன்.

ராமு:—சரி, மாமா! (இன்னும் ஐந்து நிமிஷம் போனதும் திரும்பி வந்து) மாமா, எதிர்க்கட்சிப் பையன்கள் தோற்றுப் போய்ச் சரணாகதி யடைந்து விட்டார்கள்!

அவர்:— அப்படியா? இந்தா ஒரு ரூபாய்! ஆமாம், எப்படி அவர்களை அவ்வளவு சீக்கிரத்தில் தோற்கடித்தாய்?

ராமு:—நான் எதிர்க்கட்சிப் பையனுக்குக் கால் ரூபாய் தருவதாகச் சொன்னேன்!

விபரீதம்!

கோபு:—என்டா ராமு! உன்னோடு மூந்தா நாள் சண்டை போட்டானே, அவன் எங்கே யிருக்கிறான்?

ராமு:—ஆஸ்பத்திரியில் இருக்கிறான்!

கோபு:—ஐயோ! ஆஸ்பத்திரியில் சேர்க்கும் படியாக அவ்வளவு பலமாகவா அடித்து விட்டாய்?

ராமு:—இல்லையடா! அவன் ஆஸ்பத்திரியிலே யிருந்து வேலை பார்க்கிறான்!

●

அவன் யோசனை!

ஒருவர்:—ஏன் ஸார், பேயும் ஒரு மனிதனைப் போலத்தானே இருக்க முடியும்?

இன்னொருவர்:—இல்லை, இல்லை! மனிதனை விட அது ரொம்ப ரொம்பப் பயங்கரமானது!

ஒருவர் (கொஞ்சம் யோசித்து விட்டு):— அப்படியானால், அது ஒரு பெண்ணாயிருக்குமோ!

●

பதில் எப்படி?

எஜமான்:—நான் வெளியில் போயிருந்த போது யாராவது என்னைத் தேடிக்கொண்டு வந்தார்களா?

வேலைக்காரன்:—வரி வசூலிப்பவன் வந்திருந்தான்.

எஜமான்:—நான் சொல்லிக் கொடுத்தபடி அவனிடம் பதில் சொன்னாயா?


வேலைக்காரன்:—அப்படியே சொன்னேன். காலை வண்டியில்தான் பம்பாய்க்குப் போயிருக்கிறீர்கள் என்று சொன்னேன். இராத்திரி திரும்பி வருவதற்கு நாளாகும் என்று கூடச் சொல்லியிருக்கிறேன்!

இப்படியும் நடக்குமோ!



சிறுவர்கள் புகை பிடிப்பதைத் தடுக்கச் சென்னை சர்க்கார் சட்டம் இயற்றப் போவதாகத் தெரிகிறது. சட்டம் பிறந்த பிறகு இப்படியும் நடக்குமோ?

வீரசேனாபதி



பி.எஸ்.மணி...

விக்ரமபுரியில் விசித்திர வர்மன் என்ற அரசன் ஒருவன் இருந்தான். அடுத்த தேசத்துச் சிற்றரசன் வெகு நாட்களாக அவனுக்குக் கப்பம் கட்டவில்லை. தூதர்களை யனுப்பிப் பார்த்தான்; ஒன்றும் பயன்படவில்லை. அதனால் விசித்திர வர்மன் கோபங்கொண்டு சிற்றரசனின் நாட்டின்மீது போர் தொடுத்தான். இருவருக்கும் கடும் போர் நடந்தது. இறுதியில் விசித்திரவர்மன் வெற்றியடைந்தான்.

வெற்றிக்கு அறிகுறியாக அந்த நாட்டிலிருந்து பல பொருள்களைக் கைப்பற்றி வந்தான் விசித்திர வர்மன். அவற்றில் ஓர் அழகான குதிரை யிருந்தது. அரசனின் குதிரை யல்லவா, அழகுக்குக் கேட்பானேன்?

ஆனால் அந்தக் குதிரை ஒருவருக்கும் அடங்கவில்லை. அரண்மனையைச் சேர்ந்த சேனாபதிகளும் மற்றும் பல வீரர்களும் அந்தக் குதிரையை அடக்கப் பலவிதத்திலும் முயன்றனர். குதிரை யாருக்கும் அசைந்து கொடுக்கவில்லை. அதை நெருங்கிய வீரர்களெல்லாம் உதை பட்டு ஓடினார்கள்!

அரசனுக்கு ரொம்ப அவமானமாயிருந்தது. 'ஒரு சிற்றரசன் குதிரைக்கு இவ்வளவு போக்கிரித்தனமா? இந்தக் குதிரையின் திமிரை எப்படியாவது அடக்க வேண்டும்' என்று தீர்மானித்தான். மறுநாளே "அரசனிடமுள்ள குதிரையை அடக்குபவர்களுக்கு நிறைய வெகுமதிகள் கிடைக்கும்" என்ற செய்தியைத் தண்டோரா போட்டு, நாடு முழுவதும் அறியச் செய்தான். அச் செய்தி கேட்டு அந்தக் குதிரையை அடக்க எத்தனையோ பேர் முன் வந்தனர். ஆனால் குதிரையை அடக்க ஒருவராலும் முடியவில்லை.

இவ்வாறு பல நாட்கள் சென்றன. ஒரு நாள் அரச சபைக்கு மெலிந்த மனிதன் ஒருவன் வந்தான்.

"நான் அந்தக் குதிரையை அடக்கி விடுகிறேன்!" என்று அவன் மிடுக்காகக் கூறினான். அரச சபையிலுள்ள எல்லோரும் 'கொல்' லென்று சிரித்தனர்.

அரசன், "ஏன் அப்பா! நீயா அந்தக் குதிரையை அடக்கிவிடப் போகிறாய்? பலசாலிகளாலேயே முடிய வில்லையே. உன்னால் முடியுமா? வீணாக உயிரை ஏன் இழக்கப் போகிறாய்?" என்று புத்திமதி கூறினான். அவன் கேட்கவில்லை; அரசன் சம்மதித்தான்.

வேடிக்கை பார்ப்ப தென்றால் மனிதர்களுக்கு ஆசை அதிக மல்லவா? அன்று மாலை அந்த மெலிந்த மனிதன் குதிரை யேறிக் கீழே விழுந்து உருளும் காட்சியைக் காண ஜனங்கள் திரண்டு வந்தனர். அரசனும் புடை சூழ வந்திருந்தான். அந்த மெலிந்த மனிதன் குதிரை லாயத்துக்குள் மிகவும் தைரியத்துடன் புகுந்தான். அவன் ஏன் பயப்பட வேண்டும்? அந்தக் குதிரைதான் அவன் பக்கத்துத் தேசத்தரசனிடம் குதிரைக்காரனா யிருந்தபோது பழக்கின குதிரையாயிற்றே! தன் எஜமானன் வருகிறான் என்று அறிந்ததும் குதிரை பேசாமல் நின்றது. உடனே அவன் அதன்மேல் ஏறி மைதானத்துக்கு வந்தான். குதிரையும் மிகவும் உற்சாகத்துடன் வேகமாக ஓடிற்று. ஜனங்கள் நினைத்தபடி குதிரை அந்த மெலிந்த மனிதனைத் தள்ளிவிடவில்லை. அவன் பலமுறை அந்த மைதானத்தைக் குவியாகச் சுற்றி விட்டுக் குதிரையை அரசன் முன்னால் கொண்டுவந்து நிறுத்தினான். எல்லோரும் சந்தோஷ ஆரவாரம் செய்தனர்.

அரசனுக்கு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் பொங்கியது. ஏனெனில், அவன் 'குதிரைக்காரன்' என்பது அரசனுக்

ருத் தெரியாதல்லவா? ஆகவே, அரசன் அந்த மெலிந்த மனிதனைத் தட்டிக் கொடுத்து, "நீதான் தைரியசாலி! நீதான் சிறந்த வீரன்! நீதான் இனிமேல் நம் நாட்டின் சேனாபதி!" என்று கூறினான். அன்று முதல் அந்த மெலிந்த மனிதன் விக்கிரமபுரியின் சேனாபதியானான்.



இந்தச் சமயத்தில் அடுத்த தேசத்துச் சிற்றரசன் திடீரென்று விக்கிரமபுரியின் மீது படையெடுத்து வந்தான். அரசன் புதிய சேனாபதியை அழைத்து, "நீ நாளைக் காலையில் நம் படையுடன் சென்று எதிரியரசனைத் தோற்கடித்து விட்டு வரவேண்டும்" என்று கட்டளையிட்டான்.

இதைக் கேட்டதும் குதிரைக்காரனை சேனாபதிக்குப் பகீரென்றது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு "ஆகட்டும்" என்று சொல்லி வைத்தான்.

அன்றிரவு மாளிகைக்கு வந்து சேர்ந்ததும் குதிரைக்காரச் சேனாபதி, "இந்த ஆபத்திலிருந்து எப்படித் தப்புவது?" என்று நெடுநேரம் யோசித்தான். கடைசியில், "அந்த நிமிஷமே விக்கிரமபுரியை விட்டு ஓடி விட வேண்டும்" என்று அவன் தீர்மானித்தான். அதன்படி அவன் அந்த நள்ளிரவிலேயே தன் மாளிகையை விட்டுக் கிளம்பி விட்டான். போகிற வழியில் எதிரிகளின் சேனை இறங்கியிருந்தது. அதைக் கண்டதும் 'ஐயோ! தெரியாமல் இவர்களுக்கு நடுவே அகப்பட்டுக் கொண்டு விட்டோமே!' என்ற பயம் சேனாபதியை உலுக்கியெடுத்து விட்டது. கை கால்கள் உதறல் எடுத்தன. மேலே ஓர் அடி கூட எடுத்து வைக்க முடியாமல் அவன் கீழே விழுந்து விட்டான்!

அவன் விழுந்தபோது அவனிடமிருந்த கத்தியும் கேடயமும் 'டணார்' என்ற சத்தத்துடன் தரையில் விழுந்தன. அரைத் தூக்கத்திலிருந்த எதிரி சைனியத்தைச் சேர்ந்தவர்கள் கத்தி விழுந்த சத்தத்தைக் கேட்டதும், 'விக்கிரமபுரி அரசன் தான் படையெடுத்து வந்து விட்டான்!' என்று எண்ணிப் பரபரப்புடன் எழுந்தனர்.

தூக்கக் கலக்கத்தில் தங்களை நோக்கி வந்த வீரர்கள் தங்களைச் சேர்ந்தவர்கள் என்பதை அவர்கள் கவனிக்கவில்லை. ஆகவே, வேலையும் வாளையும் அனாயாசமாக வீசி, அவர்கள் தங்களைத் தாங்களே தாக்கிக் கொண்டனர். முடிவு என்ன? அவர்களில் பலர் அனாவசியமாக மடிய நேர்ந்தது. எஞ்சியிருந்தவர்களும் பயந்து ஓடி விட்டனர். இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த குதிரைக்காரச் சேனாபதி ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து நின்று விட்டான்!

இதற்குள் விக்கிரமபுரியரசன் சேனாபதியைக் காணாமல், தானே படையை நடத்திக்கொண்டு வந்தான். அவன் எதிரியின் சேனையருகே வந்ததும், எதிரிகளில் பலர் மடிந்தனரென்பதையும், எஞ்சியிருந்தவர்களும் ஓடி விட்டனர் என்பதையும் அறிந்தான். இதற்கெல்லாம் காரணம் நம் புதிய சேனாபதிதான் என்று தவறாக நினைத்துக் கொண்ட அரசனுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. அங்கே ஆச்சரியத்தினால் திகைத்து நின்ற சேனாபதியை அவன் தட்டிக் கொடுத்து, "அன்று யாராலும் அடக்க முடியாத குதிரையை அடக்கி நீ உன் வீரத்தைக் காட்டினாய்; இன்று தன்னந் தனியனாக நின்று உன் வீரத்தைக் காட்டி எனது நாட்டைக் காப்பாற்றினாய்! நீயே தலை சிறந்த வீரன்!" என்று புகழ் மாலை சூட்டிப் பூ மாலையும் சூட்டினான்!

உடனே குதிரைக்காரச் சேனாபதியைச் சூழ்ந்திருந்த சேனா வீரர்கள் அனைவரும், "வாழ்க, வீர சேனாபதி!" என்று கோஷமிட்டார்கள்!

கம்பர் தரும் காட்சி

டி. கே. சி.

207. வேறொரு வாலியா!

வாலி தன் மகன் அங்கதனிடம் ராமனைப் பற்றிச் சொன்னான்: "என்னுடைய உயிர் இந்த ராமன் காரணமாக நீங்கியது என்று நீ எண்ணாதே. பரம்பொருளே வில்லைத் தாங்கிக்கொண்டு இங்கே வந்தது என்று எண்ணுவாயாக. இந்த உலகில் உனக்கு உறுதி வேண்டும் என்றால், ராமபிரானது திருவடியைச் சதா வணங்கியவனாய் வாழ்வாயாக" என்று உயர்ந்த உண்மை மனப் பாங்கோடு சொன்னான்.

அங்கதனிடம் இவ்வளவும் சொல்லிவிட்டு, ராமனைப் பார்த்துப் பேசுகிறான் வாலி:

அரக்கர்களானாலும் சரி, வேறு எந்தப் பகைவர்களானாலும் சரி அங்கதன் முன் நிற்க முடியாது. செயலிலும் பரிசுத்தமான லக்ஷ்யத்தையே கொண்டவன்.

தெய்அடை நெடுவேல்த்தா னை
நீல்நிற நிருதர்என் னும்
தூய்அடை கனலிஅன் ன
சூரிசில்காண்! தொழிலும்தூ யன்;
பொய்அடை யுள்ளத்தார்க் குப்
புலப்படாப் புலவ! மற் றுன்
கைஅடை யாரும்என்(று) அவ்
இராமற்குக் காட்ட, மைந் தன்:—

[தெய்அடை நெடுவேல்த் தானை: தெய் பூசிய நெடிய வேல் ஏந்திய படை வீரர்களான; நீல் நிற நிருதர் என்னும் தூய்: கருநிறமான அரக்கர்கள் என்னும் பஞ்சுப் பொதியை; அடை கனலி அன்ன சூரிசில் காண்: நிர்மூல மாக்கக்கூடிய அக்கினிக்குச் சமானமான வீரன்; பொய் அடை உள்ளத்தார்க்குப் புலப்படாப் புலவ: சத்தியத்திலேயே நாட்டங் கொண்டிருக்கிற ஞானிகள் அல்லாத மற்றவர்களுக்குத் தென்படா அறிவு மயமான தெய்வமே; மற்றுன் கையடையாரும் என்று அவ் இராமற்குக் காட்ட: உன்னுடைய அடைக்கலப் பொருள் ஆகிறான் என்று ராமனுக்குக் காட்ட; மைந்தன்: அங்கதன்]

அங்கதனை அடைக்கலப் பொருள் என்று சொன்னதும் அங்கதன் என்ன செய்கிறான்:

தன்அடி தாழ்தலோ டும்,
தாமரைத் தடங்கண் ணும்
பொன்னுடை வாளை நீட் டி
''நீஇது பொறுத்தி'' என் றான்;-
என்னலும் உலகம்ஏ ழின்
ஏத்துற வாழ்ந்தவா லி
அந்நிலை துறந்துவா னுக்(கு)
அப்புறத்(து) உலகன்ஆ னான்.

[தன்னடி தாழ்தலோடும்: அங்கதன் ராமனுடைய அடியை வந்து வணங்கினான்; அதன் பேரில் ராமனும். பொன்னுடை வாளை நீட்டி நீ இது பொறுத்தி என்றான்: பொன்மயமான தன் வாளை அங்கதனிடம் நீட்டி, 'நீ இதை எடுத்துக் கொள்வாயாக' என்று சொன்னான் ராமன் (இந்தச் செயல், அபயம் கொடுப்பதற்கு அக் காலத்து அடையாளம்); என்னலும்: என்று ராமன் சொல்லி முடிக்கவும்; உலகம் ஏழின் ஏத்து உற வாழ்ந்த வாலி: இந்த உலகத்து ஏழு கண்டங்களிலு முள்ளவர்களது புகழை யெல்லாம் பெற்று வாழ்ந்த வாலி; அந்நிலை துறந்து: இக உலகத்து அந்த நிலையை விட்டு; வானுக்கு அப்புறத்து உலகன் ஆனான்: வானுக்கும் அப்பாலுள்ள பரலோக வாழ்க்கைக்கு உரியவனானான்]

வாலி மகா வீரன், மகா ஞானி. பக்தி மார்க்கத்தில் நின்ற புனிதன்; அத்தகைய வாழ்க்கைக்குத் தக்கவனாக,

குருவும் சீடனும்

வேதாந்தக் கல்வியிலே விருப்பங் கொண்ட ஒரு இளைஞன், ஒரு குருவிடம் சென்று, "எனக்கு உபதேசம் செய்யவேண்டும். நான் தங்கள் சீடனாக விரும்புகிறேன்" என்றான்.

அதற்கு அந்தக் குரு, "அப்பா, சீடனாவது ரொம்பக் கஷ்டம். அதற்கு முதலில் ரொம்பத் தகுதி வேண்டும். பின்பு அளவில்லாத முயற்சி வேண்டும்" என்றார்.

சீடன் யோசித்துப் பார்த்தான்.

கொஞ்ச நேரம் கழித்து அவன் குருவைப் பார்த்து, "நீங்கள் சொல்வதைப் பார்த்தால் சீடனாவதற்கு ரொம்பக் கஷ்டப்பட வேண்டியதாக இருக்கும் போலிருக்கிறது. அதற்கு வேண்டிய முயற்சியோ தைரியமோ எனக்கு இல்லை. ஆனால், ஒரே ஒரு வேண்டுகோள்: என்னைச் சீடனாக்க முடியாவிட்டால், ஒரு குருவாக ஆக்கவாவது கிருபை செய்ய வேண்டும்" என்றான்.

சாந்த மூர்த்தியாய் விளங்குகிறான். பரலோக சாந்தியும் அடைகிறான்.

* * *

பெரிய விஷயம். அது முடிந்தது. ஆனால் அதோடு மனுஷ விஷயம் போய் விடுகிற காரியமா! அல்ல. வாலியாகிய வீரன், மகா வீரன், உத்தம புருஷன் - போய் விட்டான். மகன் அங்கதனுக்கு ஒரு வகையான சமாதானம் ஏற்பட்டதாகச் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் உத்தம பத்தினியாகிய தாரை ஒருத்தி இருக்கிறாளே, அவளுக்கு யார் என்ன சமாதானத்தைச் சொல்ல? தாரை புலம்புகிறாள்:

"உன்னுடைய மலை போன்ற தோளிடை நித்தியவாசம் பண்ணி அவள் அல்லவா நான்? அப்படியெல்லாம் இருந்தது. இந்தத் துயரத்தைக் காணத்தானா!"

சந்தம்

தான தன்ன தன்
தன்ன தன்ன தன்.

வரைசேர் தோளி டை
நானும் வைகு வேன்

கரைசே ரா இ டர்
வேலை காண்க வோ!

உரைசேர் ஆரு யி
ரே! என் உள்உ றை

அரசே! யான் இ து
காண அஞ்சி னேன்!

[வரைசேர் தோளிடை நானும் வைகுவேன்: மலைபோன்ற தோளோடு சதா முயங்கிக் கொண்டிருந்தவள் அல்லவா நான்; கரைசேரா இடர்வேலை காண்கவோ: கரையில்லாத இந்தத் துன்பக் கடலைக் காண்பதற்குத் தானா; உரைசேர் ஆருயிரே: உரைத்துப் பார்க்கப் பார்க்க மாற்றுயரும் என் அரிய உயிரே; என் உள்ளுறை அரசே: என் உள்ளத்தில் உறைகின்ற அரசே.]

குறிப்பு:—செய்யுளின் நான இயலில் அபூர்வமான சோகம் பிறக்கிறது. சீர்களில் நின்று நின்று பாட வேண்டும்.

* * *

ஆம், என்னுள்ளத்தில் சதா நீ இருந்தாய். அது மாத்திரமா? நானும் உன் உள்ளத்தில் சதா இருக்கத் தானே செய்தேன்: ஆனாலும் என்ன விபரீதம்!

செருவார் தோள! நின்
சிந்தை யாளென் னின்,

மருவார் வெஞ்ச ரம்
எனையும் வவ்வு மால்!

ஒருவேன் உன்உ யிர்
ஆகின் உய்தி யால்!—

இருவேம் உள் இ ரு
வேம் இ ருந் தி லேம்.

[செருவார் தோள: யுத்தத்துக்கு என்று வாய்த்த தோள் கொண்ட வீரனே; நின் சிந்தையாளென்னின்: உன் உள்ளத்தில் நான் தங்குகிறேன் என்று இருந்தால்; எனையும் வவ்வுமால்: உன் நெஞ்சை ஊடுருவிய பகைவர்களது பாணம் என் நெஞ்சையும் ஊடுருவ வேண்டியதுதானே, என்னைக் கொல்ல வேண்டியதுதானே—இது போகட்டும்; ஒருவேன் உன் உயிராகின்: இப்போது தனித்திருக்கிற என் உள்ளத்தில் நீ தங்கி இருப்பது உண்டாயின்; உய்தியால்: அம்பு என்னைப் பாய்ந்து தானே உன்னைக் கொல்ல வேண்டும். என்னைத்தான் பாயவில்லையே அம்பு. நீ இறக்க வேண்டியதில்லைதானே; ஆனால் இறந்து போய்விட்டாயே நீ: என்ன ஏற்படுகிறது இதனால்; இருவேம் உள் இருவேம் இருந்திலேம்: நம்மிருவருக்குள்ளும் இருவரும் மாறிப் புகுந்து இருந்தோம் என்பது வெறும் வீண் வார்த்தை.]

வாலியினுடைய செயல் எல்லாம் உயர்ந்த லக்ஷ்யத் தோடிருந்தன. உயர்ந்த லக்ஷ்யங்கள் எல்லாம் அவனால் காப்பாற்றப் பெற்றன— தேவர்களுக்கு உபகாரம் செய்கிறது என்றால் அதுதானே! அவ்வளவும் தாரையின் நினைவுக்கு வருகிறது. தேவர்கள் கூறுவதாக விஷயத்தைச் சொல்லும்போது எவ்வளவு வேகம் உண்டாகிறது!

எந்தாய்! நீய மிர்(து)
சய யாமெ லாம்
உய்ந்தேம்'' என்று ப—
காரம் உன்னு வார்;
நந்தா நாண்ம லர்
சிந்தி நண்போ டு
வந்தா ரோஎ திர்
வானு ேனார்எ லாம்!

[எந்தாய்: என் அப்பனே என்று தேவர்கள் சொல்லுவோர்களாம்; நீ அமிர்து சயயாம் எலாம் உய்ந்தேம்: பாற்கடலைக் கடைந்து தேவாமிர்தத்தை எடுத்து எங்களுக்குக் கொடுத்தாய்; நாங்களும் அதை உண்டு நித்திய ஜீவர்களாக இருக்கிறோம்; என்று உபகாரம் உன்னுவார்: என்பதாக நன்றி பாராட்டிக் கொண்டு; நந்தா நாண்மலர் சிந்தி: வழிவெல்லாம் வாடாத புஷ்பங்களைத் தூவி; நண்போடு வந்தாரோ எதிர்: ஆசையோடு எதிர் வந்தார்களோ; வானோர் எலாம்: தேவர்கள் தான்.]

அறிவு மயங்கினவனாய் சோக வெறியில் ஏதேதோ சொல்லுகிறாள்:

கையில் வைத்து நீ கசக்கினால் தூளாய்ப் போய்விடுமே மேருகிரி. அப்படியிருக்க யாரோ பகைவர்களாம், அவர்களது அம்பு உன் மார்பைக் கிழித்து விட்டதாம். இது நடக்கிற காரியமா?

நீரும் மேரு வும்
நீநெ ருக்கி னால்,
மாறோர் வாளி உன்
மார்பை ஈர்வ தோ!
தேறேன் யான், இ து
தேவர் மாய மோ!
வேறோர் வாலி கொ—
லாம்வி ளிந்து ளான்!

[நீரும் மேருவும் நீ நெருக்கினால்: நீ கசக்கினால் மேருவும் தூளாய் விடும்; நீறு: தூள்; மாறோர் வாளி: எதிரிகளின் அம்பு; தேறேன் யான்: எனக்கொன்றும் தெரியவில்லையே; இது தேவர் மாயமோ: தேவர்கள் ஏதோ வந்து விளையாட்டுச் செய்கிற காரியமா இது-பிரியத்தினாலே தான்; வேறோர் வாலிகொலாம் விளிந்துளான்: இதோ இறந்து கிடக்கிற இவன் வாலியல்ல—வாலியின் சாயலினுள்ள வேறொருவன் தானோ]

இந்த இடத்தில் படுதா விழுகிறது. வாலி வதை இத்துடன் முடிகிறது. ஒரு தனி இதிகாசமாகவே விளங்குகிறது வாலி வதை.

• • •

மேனகையின் கணவன்

ஆர். கோபாலன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ராகவனும் என் தகப்பனாரும் வீட்டுத் தாழ்வாரத்தில் ஏதோ பேசிக் கொண்டிருந்தது என் காதில் விழுந்தது. நான் அதை உற்றுக் கேட்டேன்.

“மேனகா எங்கே?” என்றார் ராகவன். அவருடைய வார்த்தையில் ஒரு ஆர்வமும் துடிப்பும் இருந்தது.

“அவள் ரொம்ப இளைத்துப் போய் விட்டாள் அப்பா! இந்த ‘டைபாயிட்’ வந்தாலே அப்படித்தானே! நல்ல வேளை, இந்த ஊரில் உள்ள டாக்டர் நீலகண்டன் ரொம்பவும் தங்கமான மனுஷ்யர். நான் மேனகாவை அவர் கிட்டே ஒப்படைத்துவிட்டு நிருவ்ஞன்னு இருந்துட்டேன்......”

என் தகப்பனார் சொல்லியது எவ்வளவு உண்மை என்று அவரைவிட எனக்குத் தான் தெரியும். அவர் என்னை டாக்டரிடம் ஒப்படைத்தாரோ இல்லையோ? ஆனால் என்னை நான் அவரிடம் ஒப்படைத்துக் கொண்டு விட்டேன் என்ற ரகசியம் அவருக்கு எப்படித் தெரியும்!

“அதைத்தான் வரும் போதெல்லாம் சொல்லிக்கொண்டு வந்தீர்களே! இப்பொழுது நான் அவளைப் பார்க்கணும்” என்றார் ராகவன் முன்னிலும் அதிகப் பதற்றத்துடன்.

“அவள் இப்போ மாடியில்தான் இருப்பாள். என்ன இருந்தாலும் உன்னைப் பார்க்கிறதென்றால் கொஞ்சம் வெட்கம் இருக்காதா? வா, நாமேதான் மாடிக்குப் போவோமே!” என்று அவரை அழைத்துக்கொண்டு மாடிக்கு வந்தார்.

அவர்கள் மாடிக்கு வருவதைப் பார்த்து நான் என் அறையில்போய் உட்கார்ந்தேன். அந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் என்னை நான் ஒழுங்கு செய்துகொள்ள நேரம் ஏது? புடவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக்கொண்டு கலைந்து கிடந்த தலைமயிரை ஒதுக்கி விட்டுக் கொண்டேன். ஒரு அர்த்தமற்ற பயம் மனதில் எழுந்தது. “மேனு!” என்று செல்லமாகக் கூப்பிட்டுக் கொண்டே அப்பா அறைக்குள் நுழைந்தார். அவருக்குப் பின்னால் ராகவன் வந்தார். நான் நாற்காலியைவிட்டு எழுந்து நின்றேன்.

அவர்கள் இருவரும் என்னைப் பார்த்ததும் திடுக்கிட்டு விட்டனர். அப்பா திடுக்கிட்டது சாதாரண விஷயம். அவர் சொல்லியபடி நான் அலங்காரம் செய்து கொள்ளாமல் படுக்கையிலிருந்து எழுந்தபடியே இருப்பதைப் பார்த்துத்தான் அவர் ஏமாற்றமடைந்து திடுக்கிட்டார். ஆனால் ராகவன் திடுக்கிட்டு நின்றதில் ஒரு காரணம் இருந்தது. அவருடைய ஏமாற்றம் அப்பாவின் ஏமாற்றத்தைப்போல் இலேசான தல்ல, மிகவும் ஆழமானது. அது என்னுடைய மனதிற்கும் அவருடைய மனதிற்குந்தான் தெரியும். ராகவன் எதிரிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்து யோசனையில் ஆழ்ந்திருந்தார். “நீங்கள் பேசிக்கொண்டிருங்கள்; நான் இதோ வருகிறேன்” என்று சொல்லிவிட்டு என் தகப்பனார் போய்விட்டார். நான் மேஜை விளிம்பைப் பிடித்தபடியே நின்றுகொண்டிருந்தேன். அவரோடு பேசுவதற்கு எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அவருடைய வாக்கிலிருந்து எப்படிப்பட்ட வார்த்தை வெளிவருகிறது என்பதைத்தான் நான் எதிர்பார்த்தேன்.

“மேனகா, நீ முன்பு இருந்ததைவிட இப்போது ரொம்ப மாறிவிட்டாய். நான் இவ்வளவு எதிர்பார்க்கவேயில்லை......” என்றார் மெதுவாக.

“ஆமாம்! நான் இவ்வளவு இளைத்து மோசமாகி விருப்பேனென்று நீங்கள் நினைத்திருக்க மாட்டீர்கள்.”

“ஆம், நீ மறுபடியும் தேறி வருகிறதென்றால் மிகவும் சிரமம்......?”

“ஆமாம், ரொம்ப சிரமந்தான்......”

“மேனகா, உடம்பு கொஞ்சம் தேறி வருவதாகவே வைத்துக்கொண்டாலும் உன்னை டில்லிக்கு அழைத்துப்போவது சிரமம்தான். சாதாரணமாக டில்லிக்கு இந்தப் பக்கத்திலிருந்து தேக திடமான பெண்ணை அழைத்துப் போனாலே ஊர் ஒத்துக்கொள்வது கஷ்டம். நீ இருக்கும் நிலைமையில்...நான்

ஒரு அபிப்பிராயப்படுகிறேன். கல்யாண விஷயத்தைக் கொஞ்சம் யோசித்து......”

“ஆமாம்! யோசித்துச் செய்ய வேண்டியதுதான்” என்றேன் நான் பளிச்சென்று.

அவர் சிறிது நேரம் மௌனமாக யிருந்து விட்டு, ‘டில்லியில் அனேக அவசர வேலைகளை விட்டுவிட்டு வந்திருப்பதால் அன்று இரவே போகவேண்டு’மென்று சொல்லிவிட்டுக் கீழே இறங்கிப் போனார்.

நான் எதிலிருந்தோ விடுதலை யடைந்தவள் போலானேன். நெடுநாளாக என் மீது சுமத்தப்பட்டிருந்த பெரும் பாரம் கழிந்துவிட்டது போலிருந்தது. மனதில் எழுந்த குழப்பத்திற்கும் போராட்டத்திற்கும் ஒரு முடிவு கண்டவள் போலானேன். ஆனால் மனதில் வேறொரு ஆசை! அந்த ஆசை எவ்வளவு தூரம் வளர்ந்து கொண்டு போகுமோ எனக்குத் தெரியாது. ஒரு வேளை கருகி உதிர்ந்து விடுமோ?...... ராகவன் என்னை விவாகம் செய்துகொள்ள இச்சைப்பட்டார். நானும் இச்சைப்பட்டேன். இதெல்லாம் ஒரு சமயம். ஆனால் அவரும் இப்பொழுது எங்கோ ஒதுங்கிப் போக யத்தனிக்கிறார். அதற்கு அவரை நான் அனுமதிப்பதுமன்றி நானும் அவரை விட்டு விலகிப் போகவே நினைக்கிறேன்.


அன்று மத்தியானம் ராகவனுக்கும் என் தகப்பனாருக்கும் நடந்த தர்க்கத்தை நான் மாடி மீதிருந்தே கேட்டேன். ராகவன் அன்று இரவே ஊருக்குக் கிளம்புவார் என்று என் தகப்பனார் எதிர்பார்க்கவில்லை. தவிர, ராகவன் ‘கல்யாணத்தைப் பற்றி யோசிக்கலாம்’ என்று பட்டும் படாமலும் சொல்லுவார் என்று அப்பா நினைத்திருக்கவே மாட்டார். அவருக்கு ஏதேதோ நல்ல வார்த்தைகளை யெல்லாம் சொன்னார். கல்யாணத்தைத் தை மாதமே வைத்துக் கொள்ளலாம், அதற்குள் என் உடம்பு எவ்வளவோ தேறி விடும் என்றும் சொன்னார். ஆனால் ராகவன் எதற்கும் பூர்ண சம்மதத்தைத் தெரிவிக்கவே இல்லை. எல்லாம் பிறகு யோசிக்கலாம் என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார். அவருடைய பேச்சிலிருந்து, நான் பழைய மேனகாவாக வருவேன் என்ற நம்பிக்கை துளிக் கூட அவருக்கு இல்லையென்று நன்கு பட்டது. உண்மையில் அந்த அபிப்பிராயம் தான் எனக்கும் இருந்தது.

என் தகப்பனார் ராகவனைக் கெஞ்சுவதைப் பார்த்து எனக்குக் கோபமாகவும் வெட்கமாகவும் இருந்தாலும் ஒருபுறம் பரிதாபமாகவும் இருந்தது. அவரை அப்படிக் கெஞ்சுவதற்கு எவ்வளவோ காரணங்கள் இருந்தன. ராகவன் சிறு வயதில் எங்கள் வீட்டோடு வளர்ந்தவர். தவிர கண்ணுக்கு லட்சணமாக இருக்கக்கூடிய வாலிபர்; படித்தவர். அரசாங்க உத்தியோகத்தில் உயர்ந்த சம்பளத்தில் இருக்கிறார். இவ்வளவையும் உத்தேசித்துத்தான் அப்பா அவருக்கு என்னை விவாகம் செய்து வைக்க வெகு நாட்களாய் எவ்வளவோ பிரயாசைப் பட்டார். ராகவன் பிடி கொடுக்காமல் பேசியது அவரது ஆசையைச் சிதைத்துவிட்டது.

அன்று இரவு ராகவன் ஊருக்குப் போய் விட்டார். அப்பாவுக்கு என்மீது அசாத்ய கோபம், என்னால்தான் சகலமும் கெட்டுப் போய் விட்டதென்று. அவர் சித்தமே சரியில்லை. ஆனால், மனோ திடத்தை விட வில்லை. அவருடைய மனதில் இன்னும் கொஞ்சம் குருட்டு நம்பிக்கை இருப்பதாகத்தான் எனக்குத் தோன்றியது.

3

மறு நாள் சாயந்திரம் யாரோ மாடிப் படியில் ஏறிவரும் சத்தம் கேட்டுப் படுக்கையிலிருந்து எழுந்து உட்கார்ந்தேன். டாக்டர் என் அறையில் நுழைந்தார். அவருடைய வருகை எனக்கே ஆச்சரியமா யிருந்தது. அவரை வரவேற்கும் தோரணையில் படுக்கையிலிருந்து மெதுவாக எழுந்து நின்றேன். அவர் என்னைக் கையமர்த்தி உட்



காரச் சொல்லிவிட்டுச் சிரித்துக் கொண்டே "உன் தகப்பனார் உன்னை ஒசே நாளில் குண்டுக் கொழுக்கட்டையாக்கிவிட வேண்டுமென்று எண்ணுகிறார். அது எப்படி முடியும்?" என்று சொல்லி விட்டு என் தேகத்தை நன்றாகப் பரீட்சை செய்து பார்த்தார்.



"சீக்காய்க் கிடந்த உடம்பு கொஞ்சம் கொஞ்சமாய்த் தான் தெளிவடையும். நான் கொடுத்த டானிக்கையே சாப்பிட்டுக் கொண்டு வந்தால் போதும். இந்த மாப்பிள்ளை இல்லாவிட்டால் இன்னொரு மாப்பிள்ளை உலகத்தில் அகப்படாமலா போய் விடப் போகிறான்? ஆண் பிள்ளைகளெல்லாம் என்னைப்போல் பிரம்மசாரியாகவே இருக்க நினைத்தால் ஒருவேளை கஷ்டமாக இருக்கும். அப்படியிருந்தால் மிஸ்டர் ராகவனைத் தவிர உலகத்தில் மாப்பிள்ளை கிடைப்பது துர்லபமாயிருக்கலாம்" என்று விஷமமாகச் சிரித்துக்கொண்டே சொல்லி விட்டு "என்ன, நான் சொல்லுகிறது?" என்றார். இதற்கு நான் என்ன பதில் சொல்லுவது? ஏதாவது சொல்லி வைப்போம் என்றாலும் வெட்கம் என்னைப் பேச விடாமல் தடுத்தது.

"சரி, இந்த டானிக்கே போதும். இதைத் தவிர, கொடுப்பதற்கு லாயக்கான மருந்து வேறொன்றும் இல்லை. நான் வேண்டுமானால், வேலையோடு வேலையாய் உன்னைத் தினம் ஒரு தடவை வந்து பார்த்து விட்டுப் போகிறேன்" என்று சொல்லி விட்டுத் தோல் பையைக் கையிலெடுத்துக் கொண்டு கிளம்பினார்.

எதிர்பாராத விதமாக டாக்டர் அன்று வந்ததும், தினமும் வந்து பார்த்து விட்டுப் போவதாகச் சொன்னதும், தெய்வம் என்மீது ஏதோ கருணை கொண்டு எனக்கு நன்மை செய்ய முற்பட்டதாகத் தான் எனக்குத் தோன்றியது.

தினமும் அவர் வருவார். என் உடல் நிலைமையைப் பரிசோதித்துவிட்டுச் சில நிமிஷங்கள் என்னோடு விளையாட்டாகப் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போவார். ஒவ்வொரு நாளும் நான் அவர் வரும் நேரத்தை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். ஒரு நாள்கூட அவர் வரத் தவறியதே இல்லை. என்னை வந்து சந்திக்கா விட்டால் என்னைப் போல அவருக்குக்கூட மன நிம்மதி இருக்காது போலிருந்தது. ஒவ்வொரு நாள் நேரம் போவது கூடத் தெரியாமல் என்னோடு பேசிக் கொண்டிருந்து விடுவார். கடைசியில் எதையாவது நினைத்துக் கொண்டு அவசர அவசரமாக ஓடுவார். வரவர அவரோடு தாராளமாகப் பேசுவதற்கு நான் வெட்கப்படுவதே இல்லை. மனதிலுள்ளதையெல்லாம் என்னையும் அறியாமலேயே கேட்டு விடுவேன். அவரும் சிரித்துக்கொண்டே பதில் சொல்லி விடுவார். "நீங்கள் ஏன் இன்னும் கல்யாணம் செய்து கொள்ளாமல் பிரம்மசாரியாகவே இருக்கிறீர்கள்?" என்று கேட்டுவிட்டேன் எவ்வித முன் யோசனையுமின்றி. அவரும் சிரித்துக் கொண்டே பதில் சொன்னார். "என்னை எந்தப் பெண்ணாவது கல்யாணம் செய்து கொண்டால் மிகவும் கஷ்டப்பட நேரும். ஏனென்றால் எனக்குக் கவலையெல்லாம் மருந்து, ஆஸ்பத்திரி, வியாதியஸ்தர்கள் இவைகளைப் பற்றித் தான். இதை எந்தப் பெண்ணாவது சகிப்பாளா? ஆஸ்பத்திரியை நினைத்துக் கொண்டு விட்டால் நடுநிசியாக இருந்தாலும் வீட்டை விட்டுப் புறப்பட்டு விடுவேன். இதையெல்லாம் மனைவி என்று ஒருத்தி வந்தால் அவள் பொறுத்துக் கொண்டிருப்பது மிகவும் கஷ்டமாயிருக்கும்......"

"பெண்களுக்குச் சகிப்புத்தன்மை மிகவும் ஜாஸ்தி. இதைவிடக் கடுமையானவைகளை எல்லாம் சகித்துக் கொள்ளும் பெண்களும் உலகத்தில் இருக்கிறார்கள்" என்றேன் நான்.

"எனக்குத் தெரியும். ஆனால் கஷ்டத்தைச் சகித்துக்கொள்ள ஒரு பெண் இருக்கிறாள் என்ற எண்ணத்தோடு ஒரு பெண்ணுக்கு நான் தண்டனை கொடுக்க விரும்பவில்லை. அவள் என்னிடமிருந்து தப்பித்துக் கொண்டு நன்றாக இருக்கட்டும் என்றுதான் நான் எப்போதும் விரும்புவேன்."

"இந்தக் கஷ்டங்களையெல்லாம் ஆனந்தமாகவே கருதி ஒரு பெண் உங்களைக் கல்யாணம் செய்து கொள்ள இச்சைப்பட்டால் நீங்கள் தப்பித்துக்கொண்டு போய்விட முடியுமா?"

"அடேயப்பா, இது மிகவும் கஷ்டமான கேள்வி! இதற்கு நான் யோசித்துத்தான் பதில் சொல்ல முடியும்" என்று சொல்லிக்கொண்டே கைக் கடியாரத்தைப் பார்த்துவிட்டு "உன்னிடம் பேச ஆரம்பித்துவிட்டால் எனக்குப் பொழுது போவதே தெரியவில்லை. நாழிகை யாகிவிட்டது" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

திடீரென்று ஒரு நாள் என் தகப்பனார் படுத்த படுக்கையாகி விட்டார். அவர் எப்படியாவது ராகவனின் மனதைத் திருப்பி விடலாம் என்றுதான் முயற்சி செய்தார். ஆனால் கடைசியாக ராகவன் எழுதிய கடிதம் அவருடைய நிலைமையைப் படுமோசமாக்கி விட்டது. 'டில்லியில் தவருடைய அந்தஸ்திற்குச் சமதையாக இருப்பதற்குத் துளிக்கூட தான் லாயக்கில்லை என்றும், தமக்குத் தகுதியாக ஒரு பார்ஸிப் பெண்ணைத் தான் காதலித்து விட்டதாகவும், அவளையே விவாகம் செய்துகொள்ள நிச்சயித்து விட்டதாகவும், வீணாகத் தனக்கு அடிக்கடி கடிதம் போட்டுத் தொந்திரவு செய்ய வேண்டாமென்றும் எழுதியிருந்தார் ராகவன். இது என் தகப்பனாருக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்ததில் வியப்பென்ன? டாக்டர் நீலகண்டன் வந்து அடிக்கடி அவரைப் பார்த்துக்கொண்டிருந்தாராயினும் அவரது நிலைமை வர வர மோசமாகிக் கொண்டுதான் வந்தது.

ஒரு நாள் அவர் என்னைக் கூப்பிட்டுத் தம் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு "மேனு, ராகவன் உன்னைக் கலியாணம் செய்து கொள்ளாவிட்டால் போகட்டும். அவன் எவ்வளவு நல்ல பையனாக இருந்தான்; அவன் இவ்வளவு தூரம் கெட்டுப் போய்விடுவான் என்று நான் நினைக்கவேயில்லை. அதை நினைக்கத்தான் எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. அவனை நான் என் பிள்ளையைப்போல நினைத்துக் கொண்டிருந்தேன். எனக்கென்னவோ இந்தப் படுக்கையிலிருந்து பிழைத்து எழுந்திருப்பேன் என்ற நம்பிக்கையே இல்லை. உன்னை நான் இப்படி அனாதையாக விட்டுவிட்டுப் போவேனென்று நினைக்கவேயில்லை" என்றார் நெஞ்சடைக்கக் கண்களில் நீர் பெருக.

எனக்குத் துக்கமும் அழுகையும் வந்தது. ஆனால் அவரைச் சமாதானப்படுத்த வேண்டியது என் கடமையாகிவிட்டது அப்பொழுது. "அப்பா, வருத்தப்படாதீர்கள்! டாக்டர் இருக்கும்பொழுது நான் எப்படி அனாதையாய்ப் போவேன்" என்றேன்.

"டாக்டரா? ஹூம். அவர் என்ன செய்வார்? உனக்கு ஏதாவது உடம்பு சரியில்லை என்றால் வந்து பார்ப்பார்............ உன்னுடைய மற்ற கஷ்டங்களுக்கெல்லாம் பரிகாரம் காணமுடியுமா?......"

"என்னைப் பற்றிய எல்லாக் கவலையும் அவருக்கு உண்டு, அப்பா......"

"எல்லாக் கவலையும் உண்டா? எப்படி?"

"அவரைத்தான் நான் கலியாணம் செய்துகொள்ளப் போகிறேன்."

இதைக் கேட்டதும் அவர் படுக்கையிலிருந்து துள்ளிக் குதித்து எழுந்து விடுவார் போலிருந்தது. இவ்வளவு நாளும் என் மனதில் ஒளித்து வைத்திருந்த அந்தரங்கத்தை என் தகப்பனாரிடம் சொல்ல இதுதான் சமயமாக வாய்த்தது. "ஹூம், எனக்கு நம்பிக்கை இல்லை, மேனு! அந்தப் பிரம்மசாரியா? அவர் பீஷ்மாசாரியாரைப்போல ...... உன்னைக் கல்யாணம் செய்து கொள்

இரண்டு ஆயுதங்கள்

புரொபஸர் ஐன்ஸ்டீன் என்ற பிரபல விஞ்ஞானியை ஒரு பத்திரிகை நிருபர் பேட்டி கண்டு, "மூன்றாவது உலக மகா யுத்தத்தில் அணுகுண்டைத் தவிர வேறு என்னென்ன பயங்கர ஆயுதங்கள் உபயோகிக்கப்படும்?" என்று கேட்டார்.

புரொபஸர் ஐன்ஸ்டீன் சற்று நேரம் யோசித்து விட்டு, "மூன்றாவது மகா யுத்தத்தில் என்னென்ன ஆயுதங்கள் உபயோகிக்கப்படும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், நான்காவது உலக மகா யுத்தத்தில் என்னென்ன ஆயுதங்கள் உபயோகிக்கப்படும் என்பது மாத்திரம் எனக்கு நிச்சயமாகத் தெரியும்" என்றார்.

நிருபர் வியப்படைந்து, "அப்படியா!— எங்கே, அதைச் சொல்லுங்கள்!" என்று கேட்டார்.

"அது உங்களுக்கேகூடத் தெரிந்திருக்குமே! — கல், வேல் — இந்த இரண்டு ஆயுதங்களைத் தவிர வேறு ஆயுதம் எதுவும் அப்போது இருக்காது. மனிதன் பழைய நிலைமைக்கு வந்துவிடுவான்" என்றார்.

கிறேன் என்று அவர் சொன்னாரா? ஊஹூம், நான் நம்பமாட்டேன், மேனு..."

"ராகவன் இப்படிக் கைவிடுவார் என்று உங்களால் நம்ப முடிந்ததா, அப்பா? அப்படித் தான் இதுவும்......"

"அப்படியா? இது நிஜமா யிருந்தால் எனக்கு ரொம்ப சந்தோஷம் மேனு! நீலகண்டன் மிகவும் நல்லவர்; தங்கமான குணம். கெட்டிக்காரர். அவர் உடல் நிலைமையை மாத்திரம் தெரிந்து சிகிச்சை செய்கிற டாக்டர் அல்ல, உண்மையில் மன நிலைமையையும் அறிந்து சிகிச்சை செய்கிறவர் என்பதை இப்போதுதான் தெரிந்து கொண்டேன். மேனு, ஒருவேளை நான் பிழைத்தாலும் பிழைத்து விடுவேன் பயப்படாதே!" என்றார். சோபையிழந்திருந்த அவருடைய முகத்தில் ஒரு பிரகாசமும் அமைதியும் தோன்றியது.

4

உண்மையாகவே என் தகப்பனார் இரண்டு மூன்று நாளில் படுக்கையி லிருந்து எழுந்து அரைகுறையாக விட்டிருந்த கல்யாணக் காரியங்களைக் கவனிக்கத் தொடங்கினார்.

இப்பொழுது நான் ஒரு டாக்டரின் மனைவி! மற்ற டாக்டர்களெல்லாம் எப்படியோ? இவர் என்னைவிட மருந்திலும் ஆஸ்பத்திரியிலும் நோயாளிகளிடமும் தான் அதிகக் கவனம் செலுத்துகிறார். இப்படிப்பட்ட ஒரு டாக்டரோடு வாழ்க்கை நடத்துவது எவ்வளவு கஷ்டமென்று நான் சொல்ல வரவில்லை! ஆனால் அன்பு இருந்தால்......?

சொர்க்கமா? நரகமா?

சுப்புவுக்கு வேலை செய்வது என்றால் கொஞ்சங்கூடப் பிடிக்காது. ஒரு அற்ப வேலையைச் செய்வதா யிருந்தாலுங்கூட அவனுக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கும்.

ஒரு நாள் அவன் திடீரென்று செத்துப் போனான். நேரே மேலுலகத்துக்குப் போனான்.

யமலோகத்துக் கிங்கரன் ஒருவன் ''வாருங்கள்!'' ''வாருங்கள்!'' என்று சுப்புவை அன்புடன் வரவேற்றான்.

இவ்வளவு அன்பான உபசரிப்பைக் கண்டு சுப்பு பிரமித்துப் போய் விட்டான்.

யமகிங்கரன் மெத்தை தலையணை எல்லாம் வைத்து அழகாக அலங்கரிக்கப்பட்ட ஒரு கட்டிலைச் சுட்டிக் காட்டி, ''இதில் நீங்கள் உங்கள் விருப்பம்போல எப்போதும் சௌக்கியமாகப் படுத்துக் கொண்டே இருக்கலாம் நீங்கள் எது வேண்டுமென்று நினைக்கிறீர்களோ, அதுவெல்லாம் உடனே கிடைக்கும்'' என்று சொல்லி விட்டுப் போய்விட்டான்.

சுப்புவுக்கு இதை நம்பவே முடியவில்லை. வாழ்க்கையில் அவன் எது வேண்டுமென்று ஏங்கிக்கொண்டிருந்தானோ அது இங்கே கிட்டுகிறது! ''ஆஹா ஹா! நாம் என்ன பாக்கியம் செய்திருக்கிறோம், இந்தச் சுவர்க்க லோகத்துக்கு வர!'' என்று அவன் அகமகிழ்ந்தான்.

அடுத்த கணம், ''பத்துவகைக் காய்கறி—வடை பாயஸத்துடன் நல்ல சாப்பாடு வேண்டும்'' என்று அவன் நினைத்தான். உடனே சாப்பாடு வந்தது.

''உடுத்திக் கொள்ளப் பட்டுப் பீதாம்பரம் ஒன்று கிடைத்தால் எவ்வளவு ஜோராக இருக்கும்!'' என்று அவன் நினைத்தான். உடனே பட்டுப் பீதாம்பர உடைகள் வந்து சேர்ந்தன.

''ஒரு ரேடியோ இருந்தால் ஆனந்தமாகப் பாட்டுக் கேட்டுக்கொண்டே இருக்கலாமே!'' என்று நினைத்தான். உடனே ஒரு ரேடியோவும் அங்கே வந்தது.

இப்படி இரண்டு நாள் ஆனந்தமாகப் பொழுதைப் போக்கினான். மூன்றாவது நாள் அவனுக்கு ஒருவித அலுப்புத் தோன்றியது. ஒரு வேலையும் செய்யாமல் சதா சும்மாயிருப்பது அவனுக்கு ரொம்ப ரொம்பக் கஷ்டமாக இருந்தது. ஆகவே, அவன் யம கிங்கரனைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தான்.

யமகிங்கரன் ''என்ன வேண்டும்?'' என்று கேட்டுக் கொண்டே அவன் முன்னால் வந்து நின்றான்.

''எனக்கு இப்படிச் சோம்பேறியாக இருக்கக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. ஏதாவது வேலை இருந்தால் கொடு'' என்றான்.

''இங்கே எது வேண்டுமானாலும் கிடைக்கும்! வேலை மாத்திரம் கிடைக்காது!''

''அப்படியா, வேலைசெய்யாமல் இருந்தால், நரகத்தில் இருப்பதுபோல அல்லவா இருக்கிறது!'' என்றான் சுப்பு.

''பின்னே இதை என்னவென்று நினைத்துக் கொண்டீர்கள்? இதுதான் நரகம்!'' என்றான் கிங்கரன்.



''என்ன, இது நரகமா?'' என்று அலறியடித்துக் கொண்டே சுப்பு படுக்கையிலிருந்து எழுந்திருந்தான்.

காலை வெய்யில் அவனுடைய முகத்தில் பளிச் சென்று அடித்தது.



முள்ளும் மலரும்

ஸத்யகாமா

"மாமி, இடுப்பைப் பிடித்துக் கொண்டுவிட்டது. குனியவும் முடியவில்லை, நிமிரவும் முடியவில்லை. ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. சற்றுப் படுத்திருந்துவிட்டு வெய்யில் தணிந்த பிறகு பாத்திரங்களைத் தேய்க்கிறேனே!"

"ஹ்ஹூம், அதுக்கென்ன, படுத்துக் கொள்ளேன்! மெத்தையை வேண்டுமானாலும் போட்டுப் படுத்துக்கொள். வேண்டாமென்று சொல்ல நான் யார்? நீ பணக்கார வீட்டுப் பெண். உனக்கு எல்லாம் நடக்கும். புருஷன்கூட உனக்குப் பயப்படுகிறான். நான் அப்படி இருக்க முடியுமா? ஆயுள் முழுதும் உழைத்துத் தானே ஆக வேண்டும்? என்னால் முடிந்ததோ முடியவில்லையோ, செய்து தானே ஆகவேண்டியிருக்கிறது? எல்லாம் என் தலைவிதி! அந்த நாளில் நானும் பத்துக் குழந்தைகளைப் பெறவில்லையா? வேலை செய்தால் கால் வலிக்கும், கை வலிக்கும் என்றெல்லாம் இப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்தேனா? சொல்லத்தான் வெட்கமாயிருக்காதா?" என்று அடுக்கிக் கொண்டே போனாள் அவள் மாமியார் பார்வதி.

அன்று அவர்கள் வீட்டில் சிராத்தம். சித்திரை மாதம். கடும் வெய்யில். பகல் சுமார் மூன்று மணி இருக்கும்.

சொர்ணத்தின் நிலை அவளுக்கு அல்லவா தெரியும்? எட்டுமாத கர்ப்பிணி அவள். அத்துடன் அன்று அதிகாலையில் ஸ்நானம் செய்த தலையைச் சரியாகத் துவட்டாததாலும், அதுவரை ஈரப் புடவையையே உடுத்திக்கொண்டிருந்ததாலும் தலை வலி மண்டையைப் பிளந்து கொண்டிருந்தது. தவிரவும், காலையிலிருந்து அதுவரை பச்சைத் தண்ணீர்கூட வாயில் விடாமல் பட்டினியாயிருந்து நேரம் சென்று சாப்பிட்டதில் வயிற்றை ஒருபுறம் புரட்டிக் கொண்டும் இருந்தது. இந்நிலைமையில், முற்றத்தில் மலைபோலக் குவிந்திருக்கும் பத்துப் பாத்திரங்களைக் கண்டதும் அவளுக்குக் கொஞ்சம் மலைப்பாகவே இருந்தது. சற்று இளைப்பாறி, வெய்யிலும் கொஞ்சம் தணிந்த பிறகு பாக்கி வேலைகளைப் பார்த்துக் கொள்ளலாம் என்று சொன்னதற்குத்தான் அவளுடைய மாமி அப்படி ஆசிகளை ஒன்றின்பின் ஒன்றாக அடுக்கிக்கொண்டு போனாள்.

சொர்ணத்தின் கண்களில் நீர் அரும்பியது. மாமியின் சுடு சொற்கள் அவளுடைய மெல்லிய உள்ளத்தில் கூரிய முள்ளைப்போல் குத்திக் கீறியது. மாமியின் இரக்கமற்ற நெஞ்சையும் தன் தலைவிதியையும் எண்ணி வருந்திக் கொண்டே தட்டுத் தடுமாறி எழுந்திருந்து கையில் புளியையும் எடுத்துக் கொண்டு பாத்திரக் குவியல் அருகே சென்றாள்.

சொர்ணத்தின் கண்ணீர் பார்வதியின் ஆவேசத்திற்குத் தூபம்தான் போட்டது. "அம்மா, தேவி! நீ அழும்படியாக நான் என்ன சொல்லி விட்டேன்? நீ இடுப்பைப் பிடிக்கக் கஷ்டப்பட்டுக் கொண்டு ஒரு வேலையும் செய்ய வேண்டாம். நான் தான் இருக்கிறேனே, குண்டுக் கட்டை போல. எனக்கென்ன கேடு!" என்று அடுக்கிக் கொண்டே, மருமகளின் கையிலிருந்த புளியை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டாள்.

சொர்ணம் ஒன்றும் புரியாமல் அசைவற்று நின்றாள். பார்வதி சர சரவென்று பாத்திரங்களைத் தேய்க்கலானாள். அவளுடைய மனதில் மூண்டெழுந்த கோபம் அவளை ஒரு இயந்திரம்போல் முடுக்கிவிட்டது. மாமியார் தேய்த்து வைத்த பாத்திரங்களை அலம்பியாவது வைப்போம் என்று குனிந்தாள் சொர்ணம். ஆனால் பார்வதி அதற்கும் அவளை விடவில்லை.

உடல் தளர்ச்சியோடு உள்ளமும் தளர்ந்தது சொர்ணத்திற்கு. பேசாமல் தாழ்வாரத்தருகே போய்ப் புடவைத் தலைப்பை விரித்துப் படுத்துக்கொண்டாள். அவள் இதயம் துக்கத்தால் வெடித்து விடும்போலிருந்தது. "மாமிக்கு இவ்வளவு கோபம் உண்டாகும்படியாக நான் என்ன சொல்லிவிட்டேன்? அவரை நான் பாத்திரம் தேய்க்கச் சொன்னேனா? என் உடம்பின் வேதனையைத் தானே சொன்னேன்? இதில் என்ன தவறு?" இவ்விதம் எண்ணியபடியே கண்ணீர்வழியப் படுத்திருந்தாள்.

வெளியே சென்று திரும்பிய ராமு வாசற்படியில் நின்று சத்தம் செய்யாமல் கவனித்தான். தாழ்வாரத்தின் ஓரத்தில் தன் மனைவி படுத்திருக்கும் நிலையையும், முற்றத்தில் தன் தாய் பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டிருப்பதையும் கண்டான். அவனுக்கு விஷயம் ஒருவாறு விளங்கியது. இவ் விவகாரத்தில் தான் புகுந்தால் நிலைமை மேலும் மோசமாகும் என்று நினைத்து அவன் பேசாமல் தன் அறைக்குப் போய் விட்டான்.

* * *

அன்று இரவு சாப்பாடானதும் முற்றத்து நிலவில் சாய்வு நாற்காலியை இழுத்துப் போட்டு அதில் உட்கார்ந்திருந்தான் ராமு. சொர்ணமும் எல்லா வேலைகளையும் முடித்துவிட்டு வெற்றிலை பாக்குத் தட்டையும் பாலையும் எடுத்துக் கொண்டு வந்து தன்னுடைய கணவன் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான். பார்வதி தன் கூட்டாளியாகிய காமாட்சிப் பாட்டியிடம், அன்று மத்தியானம் தனக்கும் தன் மருமகளுக்கும் நடந்த யுத்த காண்டத்தைப் பற்றிச் சொல்வதற்காக அவளுடைய வீட்டுக்குப் போயிருந்தான்.

நிறை மதியின் பால் போன்ற நில வொளி எங்கும் குளுமையாக வீசிக்கொண்டிருந்தது. முற்றத்து மல்லிகைச் செடி, அந் நில வொளியுடன் போட்டி யிடுவதைப் போல் தன் வெண்மலர்களை விரித்து மணம் வீசிக்கொண்டிருந்தது. பத்து வீட்டுக்கு அப்பால் உள்ள பெரிய பண்ணை வீட்டு ரேடியோவிலிருந்து,

உச்சி குளிர்ந்ததடி—சகியே
உடம்பு நேராச்சு
மச்சிலும் வீடுமெல்லாம்—
முன்னைப்போல்
மனத்துக் கொத்ததடி !

என்று ஒலிம்பிய தேவ கானம் காற்றிலே தவழ்ந்து வந்து அவர்களின் காதில் தேனைச் சொரிந்தது. எல்லாமாகச் சேர்ந்து அப்போது அவ்விளம் தம்பதிகளை மெய் மறக்கச் செய்தது.

மனைவி சுருட்டிக் கொடுத்த வெற்றிலைச் சுருளை மென்று கொண்டே ராமு "சொர்ணம், நீ மட்டும் இன்னும் கொஞ்சம் சமர்த்தாக இருந்தால் நான் எவ்வளவு சந்தோஷப் படுவேன் தெரியுமா?" என்றான் அன்பு ததும்ப.

"அப்படி என்றால் நான் அசடு என்று சொல்லுகிறீர்கள்?"

"சந்தேகமென்ன? இல்லாவிட்டால் இப்படி அம்மாவுடன்......"

சொர்ணத்தின் கண்களில் மீண்டும் கண்ணீர் ததும்பிற்று. "நீங்களும் இப்படிக் கைவிட்டு விட்டால்......"

அளவு கடந்த துக்கத்தால் அவளுடைய குரல் நடுங்கிற்று.



"அசடே!—இல்லை, என் சமர்த்தே! அம்மாவுடைய குணம்தான் உனக்குத் தெரியுமே! அப்படியிருந்தும், அம்மா ஏதாவது சொல்லிவிட்டால் அதற்கு இப்படி நீ அழுது உடம்பைக் கெடுத்துக் கொள்ளலாமா?" என்று அவள்கைகளைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

சொர்ணத்தின் முகம் மீண்டும் பிரகாசமடைந்தது, மேகத்தின் மறைவிலிருந்து விடுபட்ட பூர்ணச் சந்திரனைப் போல. ராமு எழுந்து போய், மல்லிகைச் செடியிலிருந்து இரண்டு பூக்களைப் பறித்துக் கொண்டுவந்து அவள் கூந்தலில் அன்புடன் செருகினான்.

"சொர்ணம், அப்படியானால் இன்னும் இரண்டு நாளில் நீ என்னை விட்டு விட்டு ஊருக்குப் போகப் போகிறாய் என்று சொல்லு. உன் தகப்பனார் வந்து உன்னை அழைத்துக்கொண்டு போய் விடுவார்!" என்றான் ராமு. பிரிவின் ஏக்கம் அவனுடைய குரலில் தொனித்தது.



இரண்டு நாளில் சொர்ணத்தின் தந்தை தம் பெண்ணை அழைத்துக் கொண்டு போக வந்து விட்டார். "ஆமாம், அவளுக்கு இப்போது எட்டு மாதம் தானே ஆச்சு. இப்பவே பிறந்தகத்தில் போய் உட்காரணுமா, என்ன? ஒன்பதாம் மாசம் பிறந்து போனால் போதாதா?" என்று முணு முணுக்கத் தொடங்கினாள் பார்வதி அம்மாள்.

ஆனால் அந்தப் பேச்சை யாருமே காதில் வாங்கிக் கொள்ளவில்லை. மறு தினமே சொர்ணத்தை அழைத்துக் கொண்டு புறப்பட்டார் அவள் தந்தை.

* * *

சொர்ணம் பிறந்தகம் போய் ஒரு வாரம் ஆகி விட்டது. அன்று ராமுவுக்கு ஆபீஸ் இல்லை; விடுமுறை. கூடத்தில் உட்கார்ந்து கொண்டு ஏதோ யோசனை செய்துகொண்டிருந்தான்.

மனைவியின் பிரிவை நினைந்து வருந்திக் கொண்டிருந்த அவனுக்கு அப்போது வீடே வெறிச்சென்றிருந்தது. அப்போது "ஏண்டாப்பா!" என்று கூப்பிட்டுக் கொண்டே அவனுடைய தாயார் அங்கு வந்தாள்.

ராமு நிமிர்ந்து உட்கார்ந்து தன் தாயைப் பார்த்தான்.

"ஏண்டா! ஒரு வாரமாகச் சொல்றேன். நீ கொஞ்சம் கூடக் காதில் போட்டுக் கொள்ளாமல் இப்படி உட்கார்ந்திருக்கிறாயே!"

"எதைச் சொல்லுகிறாய் அம்மா? விசாலத்துக்குக் கடிதம் போடுவதற்குத்தானே?"

விசாலம் ராமுவின் தங்கை.

"ஆமாம், அந்தப் பொண்ணுக்கு நாலாம் மாசம் பிறந்து விட்டது. போய் அழைத்து வர வேண்டாமா! பாவம், வாயில்லா ஜீவன், குனிய, நிமிர முடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டே வேலை செய்து உயிரை விடும். அவளுடைய மாமியார் ஒரு காலகண்டி. பின்னைத் தாச்சியாச்சே என்று கொஞ்சம்கூட இரக்கமில்லாமல் வேலை வாங்குவாள்!"

இதைக் கேட்டதும் ராமுவுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை.

"ஏண்டாப்பா, நான் சொல்லும் போது உனக்குச் சிரிப்புத்தான் வரும். பெத்தவளுக்கல்லவா தெரியும் பாசம்!" என்றாள் பார்வதி.

'கூரிய முள்ளும் அழகிய மலரும் ஒரே செடியில்தான் உண்டாகிறது' என்று யாரோ வேதாந்தமாகப் பேசியது அப்போது ராமுவின் நினைவுக்கு வந்தது.


நரை மயிரானது
உங்களை வயோதிகர்களாகத் தோன்றும்படி செய்கிறது
H.35.T.
நரை மயிரை கருக்கச் செய்கிறது
PEARLINE-PARIS LTD., P.O. Box 493. - Bombay.



தாய் நன்றாய் அறிவாள்!

Glaxo

கிளாக்ஸோ குழந்தைகளை புஷ்டியாக வளர்க்கிறது

இந்தியாவுக்கு பிரத்யேக பிரதிநிதிகள் :—

ஹெச். ஜே. பாஸ்டர் அண்டு கம்பெனி, லிமிடெட்

பம்பாய் - கல்கத்தா - மதராஸ்

குழந்தை உணவு கொஞ்சமளவு வளர்ந்த பிறகு அதன் முதல்திட ஆகாரம் "கிளாக்ஸோ"வுடன் "பாரக்ஸ்"


எப்பொழுதும் எல்லா சீதோஷ்ண நிலைகளிலும்
இருமல்
ஜலதோஷம்
SIROLIN
"ROCHE"
For COUGHS, COLDS
இவைகளை
குணப்படுத்த
ஸிரோலின்
"ரோச்"
உலகமெங்கும் உபயோகிக்கப்படுகிறது

ஆகாரத்திற்கு பின் வயிற்று நோயா ?

இதுதான் நான் சிபார்சு செய்வது



வயிற்றில் அதிக அமிலம் சேருவதால் அடிக்கடி அஜீரண உபாதைகள் ஏற்படலாம். இந்த அதிக அமிலச் சேர்ப்பினால் ஏற்படும் எரிச்சல், வாயு, இதர உபாதைகள், அஜீரணம், ஆகாரத்திற்குப் பின் வயிற்று நோய் முதலியவைகளுக்கு உலகம் அறிந்த கியாதி பெற்ற ''பிஸ்மாக்''கை போக்க செய்கிறேன். அமிலச் சேர்க்கையால் வயிற்று நோயால் தவிப்பவர்களுக்கு உடனேயே ''பிஸ்மாக்'' நிவாரண மளிக்கும். இன்றே ஒரு முறை பரிசோதித்து உங்கள் வயிற்றை சகல உபாதைகளிலிருந்தும் தடுத்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு வேண்டியது

எல்லா கெமிஸ்டுகளிடமும் ஸ்டோர்களிலும் பவுடராகவும் மாத்திரையாகவும் கிடைக்கும்.

BISMAG

சோல் ஏஜண்டுகள் :

ஜியாப்ரே மானர்ஸ் & கோ., லிட்.

பம்பாய்-கல்கத்தா-மதராஸ்-லாகூர்

"லங்கர்" மார்க்

வாசனை பாக்குத்தூள்



★

அசல்

பாதாம் எண்ணை

★

ரோஜாப்பூ

குல்கந்து


★

ரஷிக்லால் & கோ.,

கோவிந்தப்ப நாய்க்கன் தெரு

மதராஸ் - 1

நோயுற்ற குழந்தைகளுக்குப் பல வருடங்களாக சேவை புரிந்து வருகிறது





ஜம்மியின் லிவர்க்யூர் பல்லாண்டுகளாக செய்து வரும் சேவையால் ஆயிரக்கணக்கான விலையற்ற சிற்றுயிர்கள் சரல் குலைக்கட்டி வியாதிகளிலிருந்து காப்பாற்றி மனித சமூகத்திற்கு விசேஷ நன்மை புரிந்துவருகிறது.

டாக்டர்கள் இவ்வியாதியை போக்க ஆரம்ப நிலை, கட்டி முதிர்ந்த நிலைக்குத்தகுந்தவாறு 'சிம்பிள்' அல்லது 'காம்ப்பிளிகேட்டட்' லிவர்க்யூர் மருந்துகளை சிபார்சு செய்து இவ்வியாதியை குணப்படுத்துகிறார்கள்.

ஜம்மியின் சிம்பிள் லிவர்க்யூர் சரிய அளவில் கொடுத்துவர, வியாதி வராமல் தடுக்கவும், பசி, ஜீரண சக்திவிருத்தி செய்யவும் மலச்சிக்கல்களைப் போக்கி சரல், குலைகளை சரியானபடி வேலைசெய்கிறது.

முன்னும் சரல் குலைக்கட்டி நோயினால் பீடிக்கப்பட்ட குழந்தைகளின் தாய்மார்கள் திரும்பவும் கர்ப்பம் தரிக்கும் பொழுது ஜம்மியின் டானிக்கை உபயோகப்படுத்துவது நல்லது. பிறக்கப்போகும் குழந்தையின் சரல், குலைகள் தாய் மூலமாய் ஏற்படுகிறது என்ற ஆயுர்வேத சித்தாந்தத்தை அனுசரித்து இந்த டானிக் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜம்மியின் லிவர்க்யூர்



எங்கும் கிடைக்கும்.

ஜம்மி வெங்கடரமணய்யா அன் ஸன்ஸ்

மைலாப்பூர், மதராஸ். (போன் நெ. 8139)

தெப்பகுளம், திருச்சினாப்பள்ளி. பெரிய தெரு கும்பகோணம். பெங்களூர், பம்பாய் 4. (போன் நெ. 41593) மற்றும்: கல்கத்தா, டில்லி, etc.

ADAETS J. 234 TAMIL

Edited, Printed and Published by R Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk Madras

கல்கி



KALKI ஏப்ரல் 18, 1948 4 அணா

REGD. NO. M. 4392

